வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

12.11.2020 வியாழக்கிழமை

## நாளுக்கு நாள் உயரும் மரணம்! நேற்றும் 5 பேர் உயிரிழந்தனர்

கொழும்பு, நவ.12

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நால்வர் நேற்று உயிரிழந்தனர் எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார்.

இதில் ஒருவர் கொழும்பு 11 பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நபர் உயிரிழந்த நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரி

02

# 2 ஆவது அலையால் பவித்ராவுக்கு சிக்கல்!

## வருகிறது நம்பிக்கையில்லா பிரேரணை



கொழும்பு, நவம்பர் 12

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது எனத் தெரியவருகின்றது.

02

## 55 வயதை கடந்தால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமுடியாது!

கொழும்பு, நவ 12

எதிர்காலத்தில் புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள அரசமைப்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான அதிகப்படியான வயது எல்லை 55 இற்குள் மட்டுப்படுத்துவதற்கான முன்மொழிவொன்றை கொண்டுவருவதற்கு தீர்மானித்துள்ளதாக அரச தகவல்களின் மூலம் அறிய

02

## மத சிறுபான்மையினரின் உரிமைகளை மதியுங்கள்!

### இலங்கை அரசிடம் மன்னிப்புச்சபை வேண்டுகோள்

கொழும்பு,நவ.12

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் இறுதிச் சடங்குகளை முன்னெடுக்கும் போது மதச் சிறுபான்மையினரின் உரிமைகளை அரசு மதிக்கவேண்டும் எனச் சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம் அல்லது தகனம் செய்யலாம் என

02

## 15 ஆயிரத்தை தாண்டிய தொற்றாளர் எண்ணிக்கை

### 10ஆயிரம் பேர் குணமடைவு

கொழும்பு,நவ.12

இலங்கையில் நேற்று 309 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

02

## எதிர்க்கட்சியின் சபை ஒத்திவைப்பு பிரேரணை நாளை பாராளுமன்றில்

கொழும்பு,நவ.12

எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்லவின் கோரிக்கைக்கு அமைய நாளை வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கும் அன்றைய தினம் எதிர்க்கட்சியால் முன்வைக்கப்படும் சபை ஒத்திவைப்பு பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவும் பாராளுமன்ற அலு

02



## பிரதேச, மாவட்ட மட்டங்களில் கொரோனா மருத்துவமனைகள்

### ஆராய்கிறது சுகாதார அமைச்சு

கொழும்பு,நவ.12

எதிர்வரும் காலங்களில் பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்க மருத்துவமனைகளை மேலும் ஒதுக்கீடு செய்வது தொடர்பில் சுகா

02

## அமெரிக்கா தன் விருப்பங்களை இலங்கை அரசு மீது திணிக்காது

### அந்நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு



கொழும்பு,நவ.12

அமெரிக்க அரசு தனது விருப்பங்களை இலங்கை அரசு மீதோ அல்லது வேறு எந்த நாட்டின் அரசின் மீதோ திணிக்காது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

02

## கொரோனா உயிரிழப்பு

## உடல் அடக்கம் தொடர்பில் இன, மத சலுகை கிடையாது

### அரசு உறுதிபட அறிவிப்பு

கொழும்பு,நவ.12

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் இறுதிச்சடங்கை மேற்கொள்ளல் இனம் மற்றும் மத ரீதியாக எடுக்கும் தீர்மானத்தின் மூலம் அல்ல மாறாக கொரோனா தொடர்பிலான சர்வதேச வழிகாட்டல்களுக்கு அமைய நாட்டின் சுகாதாரத்

02

# மேல் மாகாணத்தில் இருந்து யாரும் வெளியேற முடியாது

### ஜனாதிபதி உடனடி உத்தரவு



கொழும்பு, நவ.12

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் பெருமளவில் கண்டறியப்பட்டுவரும் மேல் மாகாணத்தை விட்டு மக்கள் வெளியேறுவதைத் தடுக்க உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில், உடன் அமுலுக்கு வரும் வகையில் எதிர்வரும் 15ஆம் திகதி வரை மேல் மாகாணத்திலிருந்து எந்தவொரு நபரும் வெளியேற முடியாது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

02




சிறப்பிதழ் உள்ளே

## 2ஆவது அலையால்....

இந்தப் பிரேரணையில் சில எம்.பிக்கள் நேற்று கையொப்பமிட்ட நிலையில் ஏனையோர் இன்று கையொப்பமிடுவார்கள் எனவும் தெரிய வருகின்றது.

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்காமை, மக்கள் மத்தியில் தவறான தகவல்களை வெளியிட்டமை உட்பட மேலும் சில குற்றச்சாட்டுகளை அடிப்படையாகக் கொண்டே இந்த நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது. (அ)

## 55 வயதை....

முடிகின்றது

இதன் ஊடாக 55 வயது கடந்த எவருக்கும் இலங்கையில் ஜனாபதித் தேர்தல் போட்டியிட முடியாத ஒரு சூழல் ஏற்படும் என்றும் தெரியவருகின்றது.

இதுவரை இலங்கையில் இடம்பெறும் எந்த ஒரு தேர்தலிலும் அதிகப்படியான வயது எல்லை என்ற ஒன்று குறிப்பிடப்படவில்லை. எவரும் போட்டியிடலாம் என்ற நிலைமை இருந்தது. 20ஆவது அரசமைப்பு திருத்தம் ஊடாக கொண்டுவரப்பட்ட குறை வயது எல்லை 30 என்ற சாரத்தில் எந்த மாற்றமும் இடம்பெறாது. மேலும் தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள அரச சேவையில் இருந்து ஓய்வு பெறும் எவருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற விடயத்தை புதிய அரசமைப்பில் உள்வாங்க யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது

இவ்வாறு புதிய அரசமைப்பில் அதிகப்படியான வயது எல்லை 55 என்பது உள்வாங்கப்பட்டால் தற்போது உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காது. (அ)

## பிரதேச....

தார அமைச்சு ஆராய்ந்து வருகின்றது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அடுத்த கட்டமாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டிருக்கும் விசேட குழு நேற்றுப் புதன்கிழமை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் கூடியதுடன் இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருப்பதாக உறுதிசெய்யப்பட்டுள்ள நோயாளர்களை அவர்களுடைய நோய் நிலைமையின் தீவிரத்தன்மையின் அடிப்படையில் உரிய மருத்துவ மனைகளுக்கு அனுப்பிவைக்கத் திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும், இனிவரும் காலங்களில் பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்க மருத்துவமனைகளை ஒதுக்கீடு செய்தல், கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் அதேவேளை ஏனைய நோய்களால் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுபவர்களுக்கு அவசியமான சிகிச்சைகளை மேலும் வலுப்படுத்தல், நோயாளர்களும் சுகாதாரப்பிரிவு ஊழியர்களும் எதிர்கொள்ளும் பிரச்னைகளை இனங்கண்டு அவர்களை உளவியல் ரீதியில் மேலும் ஸ்திரப்படுதத நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய விடயங்கள் தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும் இணையவழியில் கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயல்திட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பிலும் ஊடங்கு தளர்த்தப்பட்டுள்ள நிலையில் எதிர்காலத்தில் வைரஸ் பரவல் மேலும் அதிகரிக்கும் பட்சத்தில் அதனை எதிர்கொள்ள தயார்ப்படுத்தல்களைச் செய்வது தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. (அ-எ)

# பிள்ளையான் மீதான அரசின் கரிசனை அரசியல் கைதிகள் பக்கம் திரும்பாதா?



### சிவாஜிலிங்கம் கேள்வி

யாழ்ப்பாணம்,நவ.12

பிள்ளையான் சிறைச்சாலையிலிருந்து பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டு அபிவிருத்திக்குழுத் தலைவர் அலுவலகத்தை திறக்க முடியுமாக இருந்தால் ஏன் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) சிறைச்சாலையிலிருந்து மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு அலுவலகத் திறப்பு விழாவுக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். இந்தக் கரிசனையை ஏன்? தமிழ் அரசியல் கைதிகள் மீது அரசு காட்டக்கூடாது.

அரச தரப்பு ஆட்களுக்கு ஒரு நீதியும், ஏனையவர்களுக்கு ஒரு நீதியுமாக இந்த அரசு செயல்படுகிறது. எனவே, இவ்வாறான நடவடிக்கைகளை அரசு உடன் நிறுத்துவதோடு தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும்-என்றார். (அ-எ)

## மேல் மாகாணத்தில்....

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கொரோனா தடுப்பு செயலணி உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின்போது ஜனாதிபதி இவ்வாறு பணித்திருந்தார்.

மேலும், கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க பயணக் கட்டுப்பாடுகள் அவசியம் எனவும் தற்போது முடக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்குள் நுழையவோ அல்லது வெளியேறவோ எந்தவொரு நபரையும் அனுமதிக்கவேண்டாம் என ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

அத்துடன், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்கப் பொறிமுறையை உருவாக்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இதேவேளை, கொரோனா நோயாளிகளையும் தொற்றுநோயற்ற நோய்களிலிருந்து பாதுகாக்க விசேட கவனம் செலுத்தப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ-எ)

## மத சிறுபான்மை....

உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களை இலங்கை அரசு பின்பற்றவேண்டும்.

இவ்விடயத்தில் மதச் சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகளை மதிக்க வேண்டும் - பாதுகாக்க வேண்டும்.

தமது மத நம்பிக்கைகளை மீறிக், கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவது தொடர்பில் முஸ்லிம் சமூகம் கரிசனை வெளியிட்டு வரும் நிலையிலேயே மன்னிப்புச்சபை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்யும் தற்போதைய நடைமுறையில் மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சின் பேச்சாளர் மருத்துவர் ஜெயறுவான் பண்டார இதனைத் தெரிவித்தார்.

இலங்கை மண்ணின் நிலைமை மற்றும் கொரோனா வைரஸின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் காரணங்களைக் கருத்திலெடுத்த பின்னரே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், உடல்களைத் தகனம் செய்யும் முடிவை எடுத்தார். இந்தத் தருணத்தில் அந்தத் தீர்மானத்தை மாற்றுவதற்கான முடிவுகள் எதுவும் இல்லை எனவும் அவர் கூறினார். (அ-எ)

## 15 ஆயிரத்தைத்....

இவர்கள் அனைவரும் மினுவாங்கொடை, பேலியகொடை கொத்தணி பரவல் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 24 ஆக உயர்வடைந்ததுடன் 4,797 தொற்றாளர்கள் தற்போது நாடு முழுவதுமுள்ள கொரோனா தொற்றுக்கு சிகிச்சையளிக்கும் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான 10 ஆயிரத்து 183 பேர் குணமடைந்தனர். (அ-எ)

## நாளுக்கு....

சோதனையில் அவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

அத்துடன் களனி பகுதியை சேர்ந்த 45 வயது நபர் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர் கொரோனா தொற்றுக்குள்ளாகி அம்பாந்தோட்டை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

இதேவேளை, பாணந்துறை பகுதியைச் சேர்ந்த 55 வயது நபர் ஒருவர் கொரோனா தொற்றால் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

கொழும்பு 10, மாளிகாவத்தை பிரதேசத்தை சேர்ந்த 68 வயது பெண் உயிரிழந்தார்.

இந்தப் பெண் அவரது வீட்டிலேயே உயிரிழந்த நிலையில், பிரேத பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கொரோனா தொற்றால் ஏற்பட்ட உயர் இரத்த அழுத்தம் மற்றும் மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கொரோனா தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 45 ஆக உயர்வடைந்தது. (அ-எ)

## அமெரிக்கா....

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கைக்கான அண்மைய விஜயத்தின்போது வெளிவிவகார செயலாளர் மைக் பொம்பியோ இதனைத் தெளிவாக வெளிப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நண்பன், சகா என்ற அடிப்படையில் தேசிய இறைமை, சுதந்திரம் மற்றும் பேண்தகு அபிவிருத்தியில் அனைவரையும் உள்வாங்கும் அணுகுமுறையை இலங்கை பின்பற்றுவதை அமெரிக்கா ஊக்குவிக்கின்றது.

இது அந்தக் கொள்கைகளின் பின்னால் அணிதிரளுங்கள் என்ற அழைப்பே தவிர அமெரிக்காவின் நேச நாடுகளுக்கான வேண்டுகோள் இல்லை.

இந்து சமுத்திரத்தில் கடல் பயண சுதந்திரத்தை உறுதி செய்வதே அமெரிக்காவின் நோக்கம்- என்றார். (அ-எ)

## எதிர்க்கட்சியின்....

வல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி, 2020 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் தொடர்பான இரண்டாம் வாசிப்பு மற்றும் குழுநிலை விவாதம் என்பன மாத்திரமே இன்று இடம்பெறும்.

நாளை மதியபோசன இடைவேளையின்றி 2020 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டவரைவு தொடர்பில் முற்பகல் 10 மணிமுதல் மாலை 5 மணிவரை அமர்வு இடம்பெறும்.

எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்படும் சபை ஒத்திவைப்பு பிரேரணை தொடர்பான விவாதம் நாளை முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## உடல் அடக்கம்....

துறையினராலேயே எடுக்கப்படவேண்டும் என சுற்றாடல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடலை தகனம் செய்யும் விவகாரத்தில் காணப்படும் சிக்கல் நிலை தொடர்பில் நீதி அமைச்சர் அலி சப்ரி ஜனாதிபதியுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின்போது முஸ்லிம்களின் உடலை அடக்கம் செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளது என சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இது தொடர்பில் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த முஸ்லிம்களின் உடலை அடக்கம் செய்வதற்கான எந்த அனுமதியையும் அமைச்சரவை வழங்கவில்லை. கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட ஒருவர் உயிரிழக்கும் பட்சத்தில் அவரது சடலத்தை அடக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டால் அதற்கு அரசும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றால் அந்த சடலத்தை அடக்கம் செய்யும்போது சூழலுக்கும் அங்குள்ள மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் செய்ய வேண்டும்.

இதேவேளை, தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் இவ்வாறாக சடலங்களை அடக்கம் செய்யும்போதும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த இருவர் மாத்திரமே கலந்துகொள்ள முடியுமாக இருக்க வேண்டும். எனினும் அந்தச் செயல்பாடுகள் அனைத்துக்கும் சுகாதார தரப்பினரிடத்தில் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படவேண்டும். சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனை மற்றும் அறிவுறுத்துலுக்கு அமையவே உடல் அடக்கம் செய்யும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்-என்றார். (அ-எ)

ஈழநாடு
Eelanadu
12.11.2020 வியாழக்கிழமை
சார்வாரி, ஐப்பசி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# முன்னாள் ஆளுநரின் அரசியல்

சுரேன் ராகவன் எதற்காக நியமிக்கப்பட்டாரோ அதனை அவர் ஆரம் பித்துவிட்டார். அதாவது, தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தும் அரசியல் கட்சிகளை தாக்கும் வேலையை அவர் ஆரம்பித்திருக்கின்றார். தமிழ் மக்களை 50 வருடங்களாக தங்களின் அரசியல் கைதிகளாக வைத்திருப் பதாக தமிழ்த் தேசிய கட்சிகள் மீது சுரேன் விரல் நீட்டியிருக்கின்றார். அதேவேளை, 10 மாத கால தன்னுடைய ஆளுநர் பதவியின்போது செய்த காரியங்களை பல்லாண்டு கால அரசியலால் செய்ய முடியாத வர்களாக இருக்கின்றனர் ; இன மைய சர்வாதிகாரப் போக்குள்ள பழுத்த அரசியல்வாதிகள் 21ஆம் நூற்றாண்டிற்கு தேவையான பங்கெடுத்தல் ஜனநாயகத்தை உணர்ந்து, தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தூக்கியெறிதலுக்கு தயாராக வேண்டுமென்று எச்சரித் திருக்கின்றார். வழமைபோல் இதனை தமிழ் அரசியல்வாதிகள் கண்டித் திருக்கின்றனர்.

முன்னாள் ஆளுநர் யாரை பழுத்த அரசியல்வாதியென்று கூறுகின் றார்? கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்தான் தற்போதைய சூழலில் பழுத்த அரசியல்வாதியென்னும் அடைமொழியுடன் இருக்கின் றார். முன்னாள் ஆளுநரின் கூற்று சம்பந்தனுக்குத்தான் பொருந்திப் போகின்றது. ஆனால், இதே முன்னாள் ஆளுநர், யாழ்ப்பாணத்திற்குள் வருவதற்கு முன்னர் முதலில் சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்ட தும் இதே பழுத்த சம்பந்தனிடம்தான். இதுதொடர்பில் ஊடகமொன்று கேள்வி எழுப்பிய போது, ஆசியாவிலேயே ஒரு சிறந்த தலைவர் சம்பந் தன். அதனால்தான் அவரை சந்தித்தேன், என்று பதிலளித்திருந்தார். ஆசியாவிலேயே சிறந்த தலைவர் ஒருவர், இப்போது எப்படி சர்வாதி காரியானார்?

கொழும்பில் மிகவும் சிறிய குழுவினர் மத்தியில் மட்டுமே அறியப் பட்டிருந்த சுரேன் ராகவன், மைத்திரிபாலவினால் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார். அதற்கு முன்னர் அவரை யாழ்ப் பாணத்தில் எவருமே அறிந்திருக்கவில்லை. மைத்திரியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக அரசியலுக்குள் வந்தவர் தற்போது ராஜபக்ஷக் களின் பொதுஜன பெரமுன – கூடாரத்திற்குள் இருக்கின்றார். ராஜபக்ஷக் களின் கூடாரத்திற்குள் நின்றுகொண்டு தமிழ்த் தேசியக் கட்சிகளை விமர்சிப்பது தொடர்பில் ஆச்சிரியப்பட ஒன்றுமில்லை. இது சாதாரண மானதுதான். பொதுவாகவே, அரசாங்கத்தின் தயவினால் பாராளுமன் றம் செல்பவர்கள், தங்களது எஜமானர்களுக்கு விசுவாசமாக இருக்க வேண்டியது அவர்களது கடப்பாடாகும். ஆனால், இவர்கள் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும்.

அரசாங்கங்கள் விடும் தவறுகள்தான் அரசாங்கத்தை எதிர்க்கும் அரசியல் கட்சிகளுக்கான அரசியல் முதலீடுகள். இது தேர்தல் அரசியலில் பொதுவான ஒன்று. இலங்கைத் தீவை மாறி மாறி ஆட்சிசெய்த அரசாங் கங்கள் தமிழ் மக்களின் பிரச்னைகளை சரியாக அணுகியிருந்தால், பிரச் னைகளை உடனக்குடன் தீர்த்திருந்தால் இவ்வாறானதொரு நிலைமை இந்த நாட்டில் ஏற்பட்டிருக்காது. யுத்தம் நிறைவுற்று பத்து வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும்கூட இன்றும் பல்வேறு பிரச்னைகள் வீதிக்கு வருகிறதென்றால் அதற்கு யார் காரணம்? தமிழ் அரசியல்வாதிகளா? உதாரணமாக, அரசியல் கைதிகளின் விவகாரத்தை எடுப்போம். ஒருவேளை அரசியல் கைதிகளின் பிரச்னையில் தமிழ் தலைவர்கள் உரிய கவனம் எடுக்கவில்லையென்றால் அரசாங்கம் உரிய நடவடிக் கைகளை எடுத்து அவர்களை ஏன் விடுதலை செய்யக்கூடாது?

இன்று, சிறைக் கைதிகளும் கொரோனாவினால் பாதிக்கப்பட்டிருக் கின்றனர். இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தின்போது அரசியல் கைதிகளை மனிதநேய அடிப்படையில் விடுதலை செய்யலாம். அரசாங்கம் மனம் வைத்தால் இது கடினமான காரியமல்ல. இப்படியான விடயத்தை சுரேன் ராகவன் போன்றவர்கள் கையிலெடுக்கலாம். ஜனாதிபதி கோட்டாபயவிற்கு அழுத்தங்களைக் கொடுக்கலாம். ஒருவேளை அரசாங்கம் செய்யாவிட்டால் தனது எதிர்ப்பைப் பதிவு செய்யும் வகையில் தனது பதவியையும் துறக்க லாம். இதைவிடுத்து, – தமிழ் அரசியல்வாதிகளை விமர்சிப்பது எஜமான விசுவாசத்தை காண்பிக்குமே தவிர, தமிழ் மக்கள் மீதான கரிசனையை அல்ல.

# 'கல்லுக்குள் ஈரம்'

- அலசுவது இராஜதந்திரி -

*இலங்கையின் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா இலங்கையின் பதில் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்தினவுக்கு வடக்கே நீதிமன்ற பாதுகாப்பில் கடற்கரையோரங் களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்தியப் படகுகளை அழிக்கும் அதிகாரம் இலங் கைக்கு இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.*

*வடக்கே, ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் பாதுகாப்பில் 94 இந்திய மீனவப் படகுகளும் மன்னார் நீதிமன்ற பாதுகாப்பில் 27 இந்திய மீனவப் படகுகளும் கடற்கரையோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.*

*2009 ஆம் ஆண்டு இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், இந்திய மீனவப்படகுகளின் ஊடுருவல்கள், பாக்கு நீரிணையைக் கடந்து நெடுந்தூரம் இலங்கை கடல் நீர்ப்பரப்பினுள் பிரவேசித்து வருவது வட பகுதி மீனவர்களின் வாழ்வா தாரத்துக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்தி யிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.*

*இந்திய மீனவர்களின் ஊடுருவல்கள் தற்சமயம் வடமராட்சிக் கடலுக்கப்பாலும் சென்று முல்லைத்தீவு வரை காணப்படு வதையும் இலங்கை கடற்படையினர் மூலமாக அறியமுடிகின்றது.*

*வட மாகாண மீனவ சமூகத்தினரே கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தில் வெகுவாகப் பாதிக்கப்பட்டோராக காணப்படுகின்றனர். யுத்தம் முடிவுக்கு வந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் 'மழை விட்டும் தூவானம் நில்லாதது' போலவே வட மாகாண மீனவர்க ளது நிலவரம் இந்திய மீனவர்களது ஊடு ருவல்களால் கவலைக்கிடமாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.*

*ஊர்காவற்றுறை நீதிமன்ற பாதுகாப்பில் 94 படகுகளும் மன்னார் நீதிமன்ற பாது காப்பில் 27 இந்திய படகுகளும் கடற் கரையோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள் ளதாக இலங்கை சட்டமா அதிபரின் கவனத் துக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த நிலையில் நீண்ட காலமாக இப்படகுகள் கடற்கரையோரங்களில் இருப்பதன் காரண மாக கரையோர சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தே மன்னா ரிலும், ஊர்காவற்றுறையிலும் நீதிமன்ற நடவடிக்கைகளை அடுத்து, இந்திய மீனவப் படகுகளை அழிக்கப் பொலிஸார் முன்வந்த னர். இதையடுத்தே சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா இந்திய படகுகளை சட்ட ரீதியாக அழிப்பதற்கு பொலிஸாருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை எனத்தெரிவித்துள்ளார்.*

*கூடவே, அந்தப் படகுகளை கிருமி நீக்கம் செய்து, அவற்றில் பொருத்தப்பட்டுள்ள இயந்திர சாதனங்களை கழற்றி பாதுகாப்பாக உரியவர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமே தவிர எவ்வகையிலும் அப்படகுகளை அழிக்கலா காது எனவும் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா குறிப்பிட்டுள்ளார்.*

*சட்ட மா அதிபரின் இந்த அறிவிப்பு மனிதாபிமான ரீதியில் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. இந்திய மீனவர்கள் கடல் எல்லையை தாண்டி மீன்பிடிப்பது சட்ட விரோதமானதாகும். அத்துடன் வட பகுதி மீனவரது வாழ்வாதாரத்தை பாதிக்கும் செயலாகவும் இருக்கின்றது.*

*ஆயினும் இலங்கை மீனவ சமூகத்தினரது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்ற காரணத்துக்காக இந்திய மீனவ சமூகத்தின ரின் வயிற்றில் அடிக்கும் விதத்தில் அவர்களி டமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகளை அழிப்பதை ஒரு ஈனச்செயலாகவே கருதமுடியும்.*

*இந்திய மீனவர்களது படகுகள் ஒவ்வொன் றும் பெறுமதிமிக்கவையாக இருப்பதுடன் மீனவ சமூகத்தினர் இலங்கையரானாலும், இந்தியரானாலும் பலத்த சிரமத்துக்கு மத்தியிலேயே அவர்கள் தமது படகுகளை வாங்கி வைத்துள்ளனர் என்பது தவிர அவர் களது வாழ்கைத்தரமும் ஏறத்தாழ ஒரே தரத்திலேயே இருக்கின்றது.*

*தமிழகத்தின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் மீன்பிடித் தலையே தமது பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். எனவே, சட்ட மா அதிபர் குறிப்பிட்டது போல நீதிமன்ற பாதுகாப்பி லுள்ள இந்திய படகுகளை உரிய வகையில் இந்திய மீனவர்களிடம் மீளக் கையளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர அவற்றை அழித்து இந்திய மீனவர்களது வாழ்வாதாரத்துக்கும் வேட்டு வைக்கலாகாது.*

*இந்திய மீனவர்களோ அல்லது இலங்கை மீனவர்களோ தினந்தோறும் தமது உயிரைப் பணயம் வைத்தே ஆழ்கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர்.*

*எனவே, அவர்களது பிரச்னைகள் மனி தாபிமான முறையில் தீர்க்கப்பட வேண்டி யதே காலத்தின் தேவையாகின்றது.*

*இந்திய - இலங்கை மீனவர்கள் சம்பந்தப் பட்ட பிரச்னைகள் நீடித்துச் செல்வதற்கு இரு நாடுகளினதும் அரசாங்கங்களே கண்ட னத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டியவையாக இருக்கின்றன. ஏனெனில் வட கடலில் இந்திய மீனவர் கள் எல்லை தாண்டி மீன்பிடிக்கும் பிரச்னை கடந்த பல வருடங்களாக இருந்து வருகின் றது. ஆயினும் இப்பிரச்னையை உரிய வகை யில் தீர்த்து வைக்க முன்வராது அசட்டை செய்து வருவதன் காரணமாகவே பாக்கு நீரி ணைக்கு இரு பகுதியிலும் உள்ள மீனவர் களும் வாழ்வாதார ரீதியாக பாதிக்கப்பட் டுள்ளனர்.*

*இந்நிலையில் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேராவின் அறிவிப்பு மனிதாபிமானம் கொண்டதாக இலங்கை உயர் அரச அதிகாரிகள் மட்டத்தில் 'கல்லுக்குள்ளும் ஈரம்' இருப்பதையே எடுத்தியம்புவதாக இருக் கின்றது.* ●

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு










# வடக்கு தொற்றுநோய் வைத்தியசாலை நேற்றுக் கிளிநொச்சியில் திறந்துவைப்பு

கிளிநொச்சி, நவ 12

கிளிநொச்சியில் வடக்குக்கான தொற்றுநோய் விசேட வைத்தியசாலை கிளிநொச்சி கிருஷ்ணபுரம் பகுதியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி கிருஷ்ணபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட இந்த வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் என். சரவணபவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆர்.கேதீஸ்வரன், பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் திலீபன், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்

வைத்தியர் த.சத்தியமூர்த்தி, கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைப் பணிப்பாளர் வைத்தியர் ராகுலன், கிளிநொச்சி பிராந்திய சுகாதார திணைக்களப் திட்டமிடல் பொறுப்பு வைத்தியர் சுகந்தன், உலக வங்கியின் இலங்கைக்கான திட்டப் பணிப்பாளர் வைத்தியர் ஜெயசுந்தர பண்டார, வவுனியா மாவட்ட வைத்திய சலைப் பணிப்பாளர் வைத்தியர் நந்தகுமார், இராணுவ அதிகாரிகள், கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அசங்க பண்டாரகுணதிலக உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இங்கு சிகிச்சை பெறுபவர்களுக்கென விளையாட்டு மைதானம், பிரார்த்தனை மண்டபம், நூலகம், உள்ளக விளையாட்டரங்கு, திறந்த வெளித் திரையரங்கம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் நீண்ட காலம் தங்க நேரிடுபவர்கள் தாம் விரும் பிய உணவு, பானங்கள் உள்ளிட்ட (புகையிலை மற்றும் மதுசாரம் தவிர்ந்த) பாவனைப் பொருட்களை அவர்களாகவே வெளியிலிருந்து இணையத் தளம் ஊடாக வாங்கிக் கொள்வதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது 200 நோயாளர்கள் ஒரே தடவையில் தங்கிச் சிகிச்சை பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த வைத்தியசாலை எதிர்காலத்தில் மேலும் விரிவாக்கப்பட்டு அதிவிசேட தொற்றுநோயியல் ஆய்வுகூடங்கள் மற்றும் சிறப்பு

வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

தேசிய வைத்தியசாலைகளின் தரத்துக்கு பிரதேசத்தில் ஒரு வைத்தியசாலையை மேம்படுத்தும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கு அமைய மத்திய சுகாதார அமைச்சினால் இந்த வைத்திய சாலை தொடர்ந்தும்

மேம்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(அ)

# 2ஆம் அலைக்கு மத்தியிலும் அமைச்சரவை மறுசீரமைப்பு?

## சரத் வீரசேகரவுக்கு விரைவில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு

கொழும்பு, நவ.12

**இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு விரைவில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படவுள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**



அத்துடன், அவர் வகித்த உள்ளாட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சு பதவி, ஆளுங்கட்சி எம்.பியொருவருக்கு வழங்கப்படவுள்ளது.

அரசமைப்பின் பிரகாரம் 30 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களையும், 40 இராஜாங்க அமைச்சர்களையும் நியமிக்கமுடியும். எனினும், இதுவரை 27 பேரே அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வகிக்கின்றனர்.

இந்நிலையிலேயே சரத் வீரசேகர அமைச்சரவைக்கு உள்வாங்கப்படவுள்ளார். அதேபோல கம்பஹா மாவட்டத்தில் உள்ள மற்றுமொரு இராஜாங்க அமைச்சருக்கும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது.

இதனால் ஏற்படும் வெற்றிடத்துக்கு 20 இற்கு ஆதரவாக வாக்களித்த டயானா நியமிக்கப்படுவார்.

அதேவேளை, பஸில் ராஜபக்ஷவுக்காக எஞ்சிய அமைச்சுப் பதவி ஒதுக்கப்படவுள்ளது. அவர் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற பின்னர் அமைச்சுப் பதவி கையளிக்கப்படும் என்று தெரியவருகிறது.

(அ)

# உயர்நீதிமன்ற நீதியரசர்களாக ஆறு பேரை நியமிக்க அனுமதி

கொழும்பு, நவ 12

உயர்நீதிமன்ற நீதியரசர்களாக 6 பேரை நியமிக்கவும் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவராக நீதியரசர் அர்ஜூனா ஒபயசேகரவை நியமிக்கவும் ஜனாதிபதியால் முன்மொழியப்பட்ட பரிந்துரைக்கு பாராளுமன்றப் பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்றப் பேரவை நேற்று முன் தினம் முற்பகல் 10 மணிக்கு கூடியது.

இந்தக் கூட்டத்திலேயே மேற்படி அனுமதி வழங்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் ஏ. எம்.டி. நவாஸ் மற்றும் நீதியரசர்கள் குமுதினி விக்கிரமசிங்க, ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலி, மஹிந்த சமயவர்தன, ஜனக் டி சில்வா ஆகியோரின் பெயர்கள் உயர் நீதிமன்ற நீதியரசர்களாக நியமிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்?ஷவினால் பரிந்துரைக்கப்பட்டன.

ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்ட நீதியசர்கள் அனைவரின் சுயவிவரங்களை ஆராய்ந்த பின்னர் அனுமதி வழங்கப்பட்டது என்று பாராளுமன்றப் பேரவை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

மேலும், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அர்ஜூனா ஒபயசேகரவை நியமிக்க ஜனாதிபதி முன்மொழிந்தார். அந்தப் பரிந்துரைக்கும் பாராளுமன்றப் பேரவை அனுமதி வழங்கியது.

ஜனாதிபதி கோட்டாபயவினால் புதிய நியமனங்கள் விரைவில் வழங்கப்படும் என்று சபாநாயகர் குறிப்பிட்டார்.

# மேலுமொரு மருத்துவருக்கு திருமலையில் கொரோனா

திருகோணமலை,நவ.12

திருகோணமலை பொது மருத்துவமனையில் மூன்று மருத்துவர்கள் சுயதனிமைப் படுத்தப்பட்ட நிலையில் ஒரு மருத்துவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த மருத்துவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அந்த மருத்துவருடன் தொடர்புகளைப் பேணி வந்த மூன்று மருத்துவர்கள் திருகோணமலை பொது மருத்துவமனை விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் மூவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் ஒரு மருத்துவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த மருத்துவரை ஐ.டி.எச். மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(எ)

# கொரோனாவினால் உயிரிழப்போரின் உடல்களை புதைப்பது பேராபத்தானது

## சுட்டிக்காட்டுகிறார் இயற்கை வள நிபுணர்

கொழும்பு, நவ.12

கொரோனா தொற்றால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதால் நிலத்தடி நீரில் கிருமித் தொற்று கலக்கும் அபாயம் ஏற்படும் என்று பேராசிரியர் மெதிக விதானகே தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கான சாத்தியமான நிலைமைகள் குறித்து சிறப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்தக் குழுவில் உறுப்பினராக இருந்த ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் இயற்கை வளங்கள் பேராசிரியர் மெதிக விதானகே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மற்ற நாடுகளின் நிலைமை இலங்கையின் நிலைமையை விட வித்தியாசமாக இருப்பதால், மற்ற நாடுகளில் கடைப்பிடிக்கும் முறைகளை இலங்கையிலும் மேற்கொள்ள முடியாது. எமது நாட்டில் நிலத்தடி நீர் தரை மட்டத்திலிருந்து மிகக் குறைந்த ஆழத்தில் உள்ளது.

நாட்டில் பெரும்பாலான மக்கள் கிணறுகள் மூலம் தங்கள் நீர் தேவைகளைத் தொடர்ந்து பூர்த்தி செய்வதால் தற்போதைய நிலைமை ஆபத்தானது.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட ஒருவரின் சடலத்தை பிரேத பரிசோதனை செய்ததில் 14 மணி நேரம் கழித்து உடலில் வைரஸ் இருப்பது தெரியவந்தது. எனவே, ஒருவர் இறந்தவுடன் வைரஸ் அழிக்கப்படாது - என்றார்.

கொரோனா வைரஸால் இறந்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதி கோருவது குறித்து ஆராய சுகாதார அமைச்சு நியமித்த நிபுணர் குழுவில் பேராசிரியர் மெதிக விதானகேயும் அங்கம் வகித்தது குறிப்பிடத்தக்கது.

(அ)

# மினுவாங்கொடை கொத்தணி வெகுவிரைவில் நிறைவடையும்

## இராணுவ தளபதி நம்பிக்கை



கொழும்பு,நவ.12

**மினுவாங்கொடை கொத்தணியில் இனங்காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது.**

**மிகக்குறைந்தளவானோரே தற்போது இனங்காணப்படுகின்றனர். மினுவாங்கொடை கொத்தணி தொற்று விரைவில் நிறைவடையக் கூடிய நிலையிலேயே உள்ளது என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

தற்போது பேலியகொடை கொத்தணியே நாடளாவிய ரீதியில் பரவியுள்ளது. தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் நடமாடும் சேவை மூலம் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. இதற்கென ஒரு சில தரப்பினருக்கு மாத்திரமே அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் மற்றும் குளியாபிட்டி ஆகிய பகுதிகளில் சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அச்சுறுத்தல் மிக்கவையாக வுள்ளன. அங்குள்ளவர்களிடமிருந்தே ஏனையோருக்கு வைரஸ் பரவக்கூடிய வாய்ப்பு அதிகமாகவுள்ளது. எனவே தான் அந்தப் பகுதிகள் மாத்திரம் தனிமைப்படுத்தப்பட்டு ஏனைய பகுதிகள் திறக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியுடனான அண்மைய கலந்துரையாடலின் போது நாட்டை முழுமையாக முடக்குவது இலகுவானது. ஆனால், அவ்வாறு செய்தால் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். எனவே தான் அபாயமுடைய பகுதிகள் மாத்திரம் தனிமைப் படுத்தப்பட்டு ஏனைய பிரதேசங்களில் வழமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன.

அத்தோடு கொரோனா வைரஸ் தொற்றாளர் தொடர்பிலும் மரணங்கள் தொடர்பிலும் தகவல்கள் உடனுக்குடன் வெளிப்படுத்தப்படுகின்றன. எவையும் மறைக்கப்படவில்லை. எவ்வாறிருப்பினும் தொடர்ந்தும் அனைவரையும் அடிப்படைச் சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றுமாறு மாத்திரமே கோருகின்றோம். அரசாங்கம் உள்ளிட்ட ஏனைய துறைகள் அனைத்தும் கொரோனா தொற்று கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளை இடைநிறுத்தவில்லை - என்றார். (எ)

# முஸ்லிம்கள் உடல் புதைக்க தீவு தேடுகின்றது அரசாங்கம்

## அமைச்சர் கெஹலிய கூறுகிறார்



கொழும்பு,நவ.12

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்கள் உடலை தொலைவிலுள்ள தீவொன்றில் அடக்கம் செய்யும் யோசனை அமைச்சரவைக் கூட்டத்தில் முன் வைக்கப்பட்டது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அத்தகைய தீவொன்றைக் கண்டுபிடிக்க யோசனையும் முன்வைக்கப்பட்டது என அவர் தெரிவித்தார்.

எனினும் இது தொடர்பில் இறுதி முடிவை சுகாதாரத் துறை அதிகாரிகளே எடுப்பார்கள்.

நகரங்களில் கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்கள் உடலைப் புதைப்பது சாத்தியமில்லாவிட்டால் தொலைதூரத்திலுள்ள தீவொன்றில் உடல்களைப் புதைக்கும் யோசனை அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

இந்த விடயத்தில், அரசாங்கத்தின் நிலைப்பாடு மாறவில்லை. ஆனால், இதன் அர்த்தம் அரசாங்கம் முஸ்லிம்கள் உடல்களைப் புதைப்பதை எதிர்க்கின்றது என்பதல்ல.

சுகாதாரத்துறை அதிகாரிகள் வழங்கிய அறிவுறுத்தல்களையே அரசாங்கம் பின்பற்றுகின்றது.

உடல்களைப் புதைப்பதை எதிர்க்கவில்லை என அமைச்சரவை தெளிவாக வலியுறுத்த விரும்புகின்றது. சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு ஏற்பவே எதிர்காலத்திலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

கொரோனாவால் இறந்த அனைவரின் உடல்களையும் தகனம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்ற கருத்து தவறானது - என்றார். (எ)

# 145 விசேட அதிரடிப்படையினர் உட்பட 612 பொலிஸாருக்கு கொரோனா உறுதி

கொழும்பு,நவ.12

*145 விசேட அதிரடிப்படையினர் உட்பட மேலும் 91 பொலிஸ் அதிகாரிகள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.*

அவர்களில் 82 பேர் கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொலிஸ் தலைமையகத்திலிருந்து ஆறு பேரும், கொழும்பு - 02 பொலிஸ் நிலையம், பொலிஸ் சிறப்புப் பணியகம், பொலிஸ் விளையாட்டுப் பிரிவு ஆகியவற்றிலிருந்து தலா ஓர் அதிகாரியும் இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

ஒக்ரோபர் 4 ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டில் இதுவரை 612 பொலிஸ் அதிகாரிகள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் 145 பேர் பொலிஸ் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்தவர்கள். (எ)

# ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையில் 56 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு,நவ.12

கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையில் இதுவரையில் 56 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள் ளது.

இதில் 46 பேர் பெண்கள் மற்றும் குழந்தைகள் எனவும், ஏனைய 10 பேரில் 05 மருத்துவர்கள், 02 தாதியர்கள் மற்றும் 03 சிற்றூழியர்கள் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவர்கள் அனைவரும் ஐ.டி.எச். மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதேவேளை இந்த மருத்துவமனையின் 90 ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அத்துடன், தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மருத்துவமனைக்கு வருபவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனைப் பணிப்பாளர், விசேட மருத்துவ நிபுணர் ஜி.விஜேசூரிய தெரிவித்தார். (எ)

# பேலியகொடைக்கு இடமாறுகின்றது மெனிங் சந்தை

கொழும்பு,நவ.12

கொழும்பு புறக்கோட்டை மெனிங் சந்தையை தற்காலிகமாக பேலியகொடைக்கு இடமாற்றம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மெனிங் சந்தை மூடப்பட்டதால் தங்கள் விளைபொருள்களை விற்க முடியாமல் விவசாயிகள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வாக இந்த இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி அரச பொறியியல் கழகத்துக்குச் சொந்தமான நிலம் இந்த நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது.

புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து மெனிங் சந்தை கடந்த திங்களன்று மீண்டும் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)




# கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் மிகப் பெரிய கப்பல் தயாரிப்பு

கொழும்பு,நவ.12

நாட்டின் மிகப் பெரிய கப்பலை கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் தயாரித்துள்ளது. ஜப்பானின் தனியார் நிறுவனத்துக்கான இந்தக் கப்பல் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் ஒனோமிச்சி நிறுவனத்துடன் இணைந்து கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் இந்தத் தயாரிப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் 51 சதவீத பங்குகள் ஜப்பானுக் கும் 35 சதவீதப் பங்குகள் இலங்கையின் அரச நிறுவனமொன்றுக்கும் உரித்தாகும்.

113.1 மீற்றர் நீளமான இந்தக் கப்பலின் அகலம் 21.5 மீற்றர்களும், ஆழம் 8.8 மீற்றர்களும் ஆகும். மணிக்கு 14.5 மைல் வேகத்தில் இந்தக் கப்பலால் பயணிக்க முடியும்.

முழுமையாக உள்நாட்டுப் பொறியியலாளர்களின் பங்களிப்புடன் இந்தக் கப்பல் 21 மாதங்களில் தயாரிக்கப்பட்டுள்ளது. (எ)

# மேலும் 401 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு,நவ.12

வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 401 இலங்கையர்கள் மூன்று விமானங்களின் மூலமாக நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 50 இலங்கையர்கள் எமிரேட்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான ஈ.கே. - 648 என்ற விமானத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு 11.12 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும் ஜனாதிபதியின் விசேட உத்தரவின் பேரில் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் வேலை வாய்ப்பு பெற்றுச் சென்ற 275 இலங்கையர்கள் நேற்று அதிகாலை 5.40 மணியளவில் சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல். - 226 என்ற விமானத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும் ஐ.நா. அமைதி காக்கும் படைகளில் பணியாற்ற பல்வேறு ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்ற 76 இலங்கை இராணுவத்தினரும் எதியோப்பிய எயர்லைன்ஸ் மூலமாக அதிகாலை 3.57 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு விமான நிலையத்தை வந்தடைந்த அனைவரும் பி.சி.ஆர்.சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டது டன், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டனர். (எ)

### சவுதி அரேபியாவில்

# இராஜதந்திரிகள் பங்கேற்ற நிகழ்வில் குண்டுவெடிப்பு



ரியாத், நவ. 12

சவுதி அரேபியாவில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் கலந்துகொண்ட நிகழ்வில் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. இதில் சிலர் காயமடைந்தனர்.

ஜெட்டா நகரில் உள்ள முஸ்லிம்கள் அல்லாதவர்களுக்கான இடுகாடு ஒன்றிலேயே இந்தக் குண்டுத்தாக்குதல் நடந்துள்ளது.

முதலாவது உலகப் போரின் நிறைவைக் குறிக்கும் அஞ்சலி வைபவம் ஒன்று அந்த இடுகாட்டில் நேற்று புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில், சவுதி அரேபியாவுக்கான பிரான்ஸ் தூதர் மற்றும் பிரிட்டன், கிரேக்க நாடுகளின் இராஜதந்திரிகள், வெளிநாட்டுப் பிரஜைகள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

அச்சமயத்திலேயே அங்கு சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்துள்ளது. இந்த வெடிப்பினால் தூதர்களுக்கோ தூதரகப் பணியாளர்களுக்கோ எந்த ஆபத்தும் ஏற்படவில்லை. சிலர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

## ஆர்மீனியா - அசர்பைஜான் மீண்டும் போர் நிறுத்தம்

### கண்காணிப்பில் ரஷ்ய படை

மொஸ்கோ, நவ. 12

சர்ச்சைக்குரிய நாகொர்னோ-கராபக் பிராந்தியத்தில் போர் நிறுத்தம் செய்ய ஆர்மீனியா - அசர்பைஜான் நாடுகள் மீண்டும் சம்மதம் தெரிவித்துள்ளன. ரஷ்யா முன்னிலையில் இடம்பெற்ற பேச்சிலேயே இந்த போர் நிறுத்தம் மீண்டும் சாத்தியமாகியுள்ளது.

இதுகுறித்து ஆர்மீனிய பிரதமர் நிகோல் பாஷினியனின் பதிவில்,

'நாகொர்னோ-கராபக் பிராந்தியத்தில் சண்டையை நிறுத்த படையினருக்கு உத்தரவிட்டுள்ளோம்.

போரிலிருந்து பின்வாங்குவது ஆர்மீனிய மக்களுக்கும் தனிப்பட்ட முறையில் எனக்கும் மிகவும் வருத்தத்தை அளிக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஒப்பந்தத்தின்படி சண்டை நிறுத்தத்தை கண்காணிக்க 2,000 ரஷ்ய அமைதிப் படையினர் அனுப்பப்படுவர் என்று தெரவிக்கப்பட்டது.



## பாதுகாப்பு அமைச்சரை நீக்கினார் ட்ரம்ப்

வாஷிங்டன், நவ. 12

அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சரான மார்க் எஸ்பரை பதவியிலிருந்து நீக்கியுள்ளார் ஜனாதிபதி ட்ரம்ப்.

நேற்றுமுன்தினம் அவரை பதவியிலிருந்து நீக்கிய அவர் அதனை தனது ருவிட்டர் பக்கத்திலும் பதிவிட்டுள்ளார்.

இதேநேரம், தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் பணிப்பாளர் கிறிஸ்தோபர் மில்லர் புதிய பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.



## அபுதாபி கடல்பரப்பில் அரியவகை திமிங்கில சுறா

அபுதாபி, நவ. 12

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் முக்கிய நகரான அபுதாபி கடற்பரப்பில் அரியவகை உயிரினமான திமிங்கில சுறா (Whale shark) ஒன்றை கடல்வள ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

சுறாவகையை சேர்ந்த இது அழிந்து வரும் உயிரினங்களில் ஒன்று. 62 அடி நீளம் வரை வளரும். இதன் வாயில் 300 அடுக்குகளில் சிறிய பற்களும், உணவை வடிகட்டி விழுங்கக்கூடிய 20 அமைப்புகளும் உள்ளன. 2019 ஆம் ஆண்டின் தரவின்படி 168 திமிங்கில சுறாக்களே உலகில் உள்ளன.

இது குறிந்து அபுதாபியின் சுற்றுச்சூழல் தொடர்பகம் வெளியிட்ட செய்தியில்,

'அபுதாபி கடற்பரப்பில் கண்டறியப்பட்ட திமிங்கில சுறா, 23 அடி நீளம்கொண்ட ஆணாகும். பஹியா கால்வாயில் இனங்காணப்பட்டுள்ளது.

'இந்த உயிரினம் அழிந்து வரும் இனமாக உள்ளதால் பொதுமக்கள் யாரும், அது வாழும் பகுதிக்குள் செல்ல வேண்டாம். அப்பகுதியில் நீந்துவதோ அல்லது அதற்கு உணவளிப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது." என்று குறிப்பிட்டுள்ளது. (ஐ)



## உலகின் நீண்டகால பிரதமர் காலமானார்

மனமா, நவ. 12

உலகில் நீண்டகாலம் பதவியில் இருந்த பஹ்ரைன் நாட்டின் பிரதமர் கலிபா பின் சல்மான் அல் கலிபா காலமானார்.

அமெரிக்காவிலுள்ள மயோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில் அவர் காலமானர். அவருக்கு வயது 84.

அவரின் மரணத்தையடுத்து பஹ்ரைன் நாட்டில் ஒரு வாரம் துக்கம் அனுஷ்டிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து உடல் சொந்த வீட்டிற்கு வந்த பின் இறுதி சடங்குகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.




## பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவரானார் பாபர் அஸாம்

இஸ்லாமாபாத், நவ. 12

பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவராக பாபர் அசாம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணி தொடரை இழந்தது. இதையடுத்து தற்போதைய கப்டனான அசார் அலி மாற்றம் செய்யப்படுவார் என்று செய்திகள் வெளியாகின. இந்த நிலையில் பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் கப்டன் பொறுப்பில் இருந்து அசார் அலி நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக 26 வயதான பாபர் அசாம் கப்டனாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

20 ஓவர் மற்றும் ஒருநாள் அணியின் கப்டனான பாபர் அசாம் இனிமேல் 3 வகையான (டெஸ்ட், ஒருநாள், 20 ஓவர்) போட்டிக்கும் கப்டனாக இருப்பார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது. அடுத்த மாதம் இறுதியில் பாகிஸ்தான் அணி, நியூசிலாந்து சென்று 2 டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறது. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்குரிய இந்த தொடரின் முதலாவது ஆட்டம் மவுன்ட்மாங்கானுவில் டிசம்பர் 26 ஆம் திகதி தொடங்குகிறது. இந்த போட்டியில் பாபர் அஸாம் டெஸ்ட் அணியின் கப்டன் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

## இந்திய - ஆஸி. தொடர் ரசிகர்களுக்கு அனுமதி

சிட்னி, நவ. 12

இந்தியா - அவுஸ்திரேலியா தொடரில் டெஸ்ட் போட்டியில் ரசிகர்களை அனுமதிக்க அவுஸ்திரேலியா கிரிக்கெட் அனுமதி அளித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் எதிர்வரும் டிசம்பர் 27 ஆம் திகதி தொடக்கம் 3 வகை கிரிக்கெட் போட்டியிலும் விளையாடவுள்ளது.

கொரோனா தொற்று அபாயம் காரணமாக ரசிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், இந்தத் தொடருக்கும் ரசிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனினும் தொடர்ந்து நடந்த பேச்சுக்களை அடுத்து ஒருநாள், ருவென்ரி - 20 போட்டிகளுக்கு மைதானத்தின் இருக்கைகளில் 50 வீதத்திற்கு ரசிகர்களை அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, முதல் டெஸ்ட் போட்டியில் 50 வீத ரசிகர்களும், இரண்டாவது போட்டியில் 25 வீத ரசிகர்களும், மூன்றாவது டெஸ்டில் 50 வீதத்தினரும், நான்காவது டெஸ்டில் 75 சதவீத ரசிகர்களையும் அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி டெஸ்ட் போட்டிக்கு தினசரி சுமார் 25 ஆயிரம் ரசிகர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

## 2021 ஐ.பி.எல்லில் புதிய அணி சேரும்

புதுடில்லி, நவ. 12

2021 ஐ.பி.எல். போட்டியில் கூடுதலாக ஓர் அணி சேர்க்கப்பட்டு, புதிய ஏலம் இடம்பெறும் என்று தெரிய வருகின்றது.

ஐ.பி.எல். ரி-20 போட்டியின் 13ஆவது தொடர் நேற்றுமுன்தினம் நிறைவடைந்தது.

அடுத்த வருட தொடர் இந்தியாவில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அடுத்த வருடம் ஐ.பி.எல். போட்டியில் கூடுதலாக ஓர் அணி இடம்பெறவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகின.

அஹமதாபாத்தில் உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம் (சர்தார்படேல் மைதானம்) கட்டப்பட்டுள்ளது. இதற்கேற்ப ஒரு ஐ.பி.எல். அணியை உருவாக்க பி.சி.சி.ஐ. திட்டமிட்டுள்ளது. இதன்படி 2021 ஐ.பி.எல். போட்டியில் குஜராத் சார்பில் ஓர் அணி புதிதாக உருவாக்கப்படவுள்ளது.

இதனால், வரும் ஜனவரி மாதம் புதிய ஏலம் நடக்கும். தற்போது இருக்கும் 8 அணிகளும் 5 வீரர்களை தக்க வைக்க முடியும் என்று கூறப்பட்டது.

# முடக்கல் நிலை நீக்கப்பட்டாலும் சுகாதார நடைமுறைகள் அவசியம்



## யாழ். அரச அதிபர் அறிவுறுத்து

கொழும்பு,நவ.12

**முடக்கல் நிலை நீக்கப்பட்டாலும், மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிச் செயல்படுவது அவசியம் என யாழ். மாவட்ட அரச அதிபர், கொரோனா ஒழிப்புச் செயலணித் தலைவர் க.மகேசன் அறிவுறுத்தியுள்ளார்.**

யாழ். மாவட்டத்தில் மூன்று கிராமங்கள் நேற்றுக்காலை தனிமைப்படுத்தலிருந்து விடுவிக்கப்பட்டன. இந்நிலையில் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:

யாழ். மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று அச்சத்தால் முடக்கப்பட்டிருந்த மூன்று கிராமங்கள்நேற்றுக்காலை முடக்கல் நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. எனினும் இந்தக் கிராமப் பகுதி மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக இடைவெளியைக் கடைப்பிடித்து தமது அன்றாடச் செயல்பாடுகளை முன்னெடுத்தல் அவசியம்.

மேல்மாகாணம்மற்றும்ஏனைய மாவட்டங்களில் கொரோனா தொற்று வலுவடைந்து வரும் நிலை காணப்படுகின்றது. இந்நிலையில் தற்பொழுது யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்று அச்சத்தால் சுகாதாரப் பிரிவினரால் முடக்கப்பட்ட பிரதேசங்கள் அந்நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் கிருமித் தொற்று அச்சம் தொடர்ந்தும் நீடிக்கின்றது. எனவே அப்பகுதி மக்கள்சுகாதார நடைமுறைகளைச் சரியான முறையில்பின்பற்றுவதன் மூலமே அப்பகுதியிலோ அல்லது வேறு பகுதிகளிலோ தொற்று ஏற்படாதவாறு பாதுகாக்க முடியும்.

அத்துடன் முடக்க நிலையிலிருந்து விடுபட்ட கிராமங்களுக்கு மேல் மாகாணம் அல்லது ஏற்கனவே கொரோனா பாதிப்புள்ள அபாய வலயங்களிலிருந்து புதியவர்கள் யாரும் வந்தால் அவர்கள் கட்டாயம் சுகாதாரப் பிரிவினரிடம் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்- என்றார். (எ)

# கொரோனாவை அரச கொள்கை அடிப்படையில் கையாள்வோம்

## பிள்ளையான் தெரிவிப்பு

மட்டக்களப்பு,நவ.12

உலகளாவிய ரீதியில் பெரும் சவாலாக இருக்கின்ற கொரோனா வைரஸ் மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் வந்திருக்கின்றது. இதனை அரச கொள்கை அடிப்படையில் கையாண்டு சாதாரண மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய விடயங்களையும் எப்படி முன்னெடுப்பது என்ற பொதுவான கொள்கைத்திட்டத்துக்கு உழைக்க வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு என மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் காரியாலயத்தை மாவட்ட செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை திறந்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக இந்தப் பொறுப்பை நான் ஏற்றுள்ளேன். இந்த இடத்துக்கு நான் வரப் பெரும் பங்காற்றிய மக்களுக்கு நன்றி. தேர்தல் காலங்களில் மக்களிடம் அபிவிருத்தி செய்து தருவாக வாக்குறுதியளித்துத் தான் இந்த இடத்துக்கு வந்திருக்கின்றோம்.

அந்த அடிப்படையில் கொரோனா தொற்றை தடுத்து மக்களைப் பாதுகாத்துக்கொண்டு அதனோடு எங்களுடைய கிராமிய பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பது எங்கள் நோக்கம். அந்தத் திட்டத்துக்கு அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றேன்.

நான் நீண்ட காலமாக அரச நிர்வாகத்துடன் தொடர்பு இல்லாத காரணத்தால் இந்தக் கடமைகளைப் பொறுப்பேற்ற உடன் நிலைமைகளை அவதானித்துக் கொண்டு நாளை 13ஆம் திகதி மாவட்ட அபிவிருத்திக்கூட்டத்தை நடத்தவுள்ளோம்.

இந்தக் கூட்டத்தில் முடிந்தவரை 2021ஆம் ஆண்டுக்கான செயல்பாடுகளையும் மக்களுக்கு இப்போது இருக்கின்ற உடனடித் தேவையான விடயங்களையும் அவதானித்து அதனை முடித்துக் கொடுப்பதற்கான திட்டங்களை வகுப்போம்-என்றார். (எ)


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் சபாபதி செந்தில்நாதன்

(பிரபல சட்டத்தரணி)



தோற்றம்: 25.08.1928
மறைவு: 10.11.2020

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பிரபல சட்டத்தரணி வைத்திலிங்கம் சபாபதி செந்தில்நாதன் அவர்கள் 10.11.2020 செவாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான சபாபதி செட்டியார் ராஜம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான மானிப்பாயை சேர்ந்த முகாந்திரம் திரு.திருமதி. தியாகராஜ அவர்களின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ராஜமாணிக்கத்தின் அன்பு கணவரும். சேரலாதன் (கனடா) காலஞ்சென்ற பிரகலாதன், தயாபாரி (சிங்கபூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். நிரஞ்சன் நந்தகோபன் (சிங்கபூர்) அவர்களின் அன்பு மாமனாரும் சுருதி சுந்தரரமணன் ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்றவர்களான திருமதி விஜயர்த்தனம். ரத்னசபாபதி, காந்திமதி, புனிதவதி, வைத்தீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற ராஜதுரை, ராஜகுணம். ராஜமலர், ராஜாசெல்வம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நேற்று (11.11.2020) புதன்கிழமை 10 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, பின்னர் 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கல்கிசை பொதுமையானத்தில் அவரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

தகவல்: Dr. ஸ்ரீரஞ்சனி சிவபாலன் (மருமகள்) - 0777171656
நவரத்தினம் சிவபாலன் (பெறாமகன்) - 0775005972
V. ஸ்ரீ சக்திவேல் (மருமகன்) - 077 8435771
V. ஸ்ரீ மயூரன் (மருமகன்) - 0775340341




# ஊற்றுக்குளம் உடைப்பு பல ஏக்கர் வயல் நாசம்

வவுனியா,நவ.12

வவுனியா ஊற்றுக்குளம் நேற்றுத் திடீரென உடைப்பெடுத்த நிலையில் பல ஏக்கர் வயல் நிலம் பாதிக்கப்பட்டுள்ளது.

கடும் மழையால் நெடுங்கேணிப் பகுதியிலுள்ள இந்தக் குளத்துக்கு நீர்வரத்து அதிகரித்த நிலையிலேயே உடைப்பெடுத்துள்ளது.

இவ்வனர்த்தம் தொடர்பில் விவசாயத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வேலைவாய்ப்பு படிவத்தை வாங்குவதற்கே கிழக்கில் 20,000 ரூபா பெற்ற அமைச்சர்கள்

## கருணா பரபரப்புக் குற்றச்சாட்டு

அம்பாறை, நவ.12

ஒரு இலட்சம் வேலை வழங்கும் திட்டத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறுவதற்கே மட்டக்களப்பிலுள்ள அரச அமைச்சர்கள் 20,000 ரூபா இலஞ்சம் வாங்கியுள்ளனர் என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) பரபரப்பு குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

கல்முனையில் பிரதமரின் இணைப்பாளர் அலுவலகத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஒரு இலட்சம் வேலைத்திட்டம் ஜனாதிபதியினால் சிறந்த முறையில் திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இப்போது பாரியளவில் ஊழல் நடைபெறுகிறது.

மட்டக்களப்பில் வேலைவாய்ப்பு ஆவணங்களை மக்களிடம் வாங்குவதற்கு அரச அமைச்சர்களே 20,000 ரூபா இலஞ்சம் வாங்கியுள்ளனர். அம்பாறையில் சொந்த வாகனம் வைத்திருப்பவருக்கு அந்த வேலை வழங்கப்பட்டுள்ளது.

இதில் நிறைய முறைகேடு நடந்துள்ளது. இதை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கிறோம். இதை மீள் பரிசீலனை செய்து, உரிய முறையில் வழங்கவேண்டும். இது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இதை துறைசார்ந்த அதிகாரிகளுடன் பேசி, விரைவில் தீர்வை கொண்டு வருவோம்-என்றார்.

# கண்டியில் 63 பேருக்கு கொரோனா 900 குடும்பங்கள் தனிமைப்படுத்தல்

கண்டி,நவ.12

கண்டி மாவட்டத்தில் மாத்திரம் இதுவரை 63 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அரச அதிபர் சந்தன தென்னகோன் தெரிவித்தார்.

கண்டி பிரதேச செயலகப் பிரிவில் மட்டும் 20 தொற்றாளர் கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலையில் 900 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்கள், அதேபோன்று பொலிஸ், இராணுவம் மற்றும் பிரதேச செயலாளர்கள் இணைந்து குழுவொன்றை அமைத்து வைரஸ்மேலும் பரவாமலிருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (எ)

# அடுத்த வருடம் முதல் அரச ஊழியர்கள் உள்நாட்டு ஆடையை அணிய வேண்டும்

## தயாசிறி ஜெயசேகர தெரிவிப்பு

கொழும்பு,நவ.12

அடுத்த வருடம் முதல் அரச ஊழியர்கள் பற்றிக் அல்லது கைத்தறி நெசவுத் துணிகளால் தைக்கப்பட்ட ஆடையை அணிய வேண்டும் என அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

பொலநறுவை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


இந்த வேலைத்திட்டம் பொது நிர்வாக அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் என்றும் இலங்கை புடைவை உற்பத்திக் கைத்தொழிலில் நிலவும் பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டு, நாடெங்கிலுமுள்ள ஆடை வடிவமைப்புக் கலைஞர்களின் துணையுடன் புதிய வடிவமைப்பு அறிமுகம் செய்யப்படும்.

எதிர்காலத்தில் பற்றிக் ஆடை வடிவமைப்பாளர்களை பயிற்றுவித்து, அவர்களுக்கு தொழில் சான்றிதழ்களை வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். இதேவேளை, துறைசார்ந்தவர்களுக்கு சலுகைக் கடன் வழங்கப்படவுள்ளது-என்றார். (எ)

ஈழநாடு
Eelanadu

# மாதம் ரூ.2 இலட்சம் போதாது!

## எம்.பிக்களின் கொடுப்பனவை அதிகரிக்க லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை



**“பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை அதிகரிக்க வேண்டும்”, என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற செயல்குழு கூட்டத்தியே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

“நீதித்துறையில் உள்ளவர்களின் சம்பளத்தில் மாற்றத்தை கொண்டு வந்திருக்கும் இந்த சூழ்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவு தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் சபாநாயகரிடம் தெரிவித்துள்ளார்.

“பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு வருடமும் கொடுப்பனவுகளை அதிகரிப்பது பற்றியும் பேசப்பட்டுள்ளது. இப்போதுள்ள சூழ்நிலையில் கொடுப்பனவுகளை வழங்குவது சாத்தியப்படுமா என்ற விவாதமும் இதன்போது எழுந்துள்ளது.

எவ்வாறிருப்பினும் தற்போது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு மாதம் ஒன்றிற்கு வீட்டு வாடகை , தொலைபேசி கொடுப்பனவு , போக்குவரத்து கொடுப்பனவு, அலுவலக கொடுப்பனவு மற்றும் பாராளுமன்றத்திற்கு வருகை கொடுப்பனவு அடங்கலாக மாதம் ஒன்றிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வேலணை பிரதேச சபையின் ‘பட்ஜெட்’ நிறைவேறியது

யாழ்ப்பாணம், நவ. 12

வேலணை பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் ஒரு மேலதிக வாக்கினால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

ஈ.பி.டி.பியின் ஆளுகைக்கு உட்பட்ட வேலணை பிரதேச சபையின் வரவு - செலவு திட்டத்திற்கான விசேட கூட்டம் நேற்று தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இதில், வரவு - செலவு திட்டத்தை ஆதரித்து ஈ.பி.டிபி. கட்சியின் 6 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 2 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளின் தலா ஒரு உறுப்பினருமாக 10 வாக்குகள் கிடைத்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினருமாக 9 பேர் எதிராக வாக்களித்தனர்.

இதேநேரம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி நடுநிலைமை வகித்தது. இதனால், ஒரு மேலதிக வாக்கினால் சபையின் வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, 2019, 2020 ஆம் ஆண்டுகளுக்கான வரவு - செலவு திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ - 3)

## மரண அறிவித்தல்



**மலர்வு**
**09.11.1937**

**உதிர்வு**
**06.11.2020**

### இலங்கைநாதன் செல்லத்துரை

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ்.சுழிபுரம் மத்தி , இந்தியா, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இலங்கைநாதன் செல்லத்துரை அவர்கள் 06-11-2020 வெள்ளிக்கிழமையன்று லண்டனில் காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான (சுழிபுரம்) இலங்கைநாதன் - தெய்வநாயகம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் கோவிலடி சண்முகம் - கமலாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் அகிலநாதன், அரவிந்தநாதன், ரமேஸ்நாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சரோன், சுமதி, ஆஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்புச் சகோதரரும் ஹர்சினி, யஸ்வினி, ஸ்ரீநிதி, அஸ்வின், ருசித்தா, கோபிஷா, கிருத்திக் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் காலஞ்சென்ற அப்புத்துரை (முன்னாள் விதானையார்- சுழிபுரம்) அவர்களின் மருமகனும், ஈஸ்வரநாதன், அருணகிரிநாதன், செந்தில்நாதன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் சாந்தகுமாரி, சதானந்தவேல், காலஞ்சென்ற நிர்மலாதேவி, மற்றும் நித்யானந்தமனுநீதி, கிருபானந்தமனுநீதி, நளாயினி ஆகியோரின் சின்னத்தானும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், லீலாவதி, ஜானகி மற்றும் கனடாவில் வசிக்கும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**அன்னாரின் இறுதிக்கிரியை விபரங்கள்**

**பூதவுடல் அஞ்சலிக்கு:**
*14.11.2020 சனி 1 மணி முதல் 3 மணிவரை*
*15.11.2020 ஞாயிறு 1 மணி முதல் 3 மணி வரை*
**முகவரி:** Om Funeral Care ltd , 445 Kenton Rd, Harrow HA3 0XY, UK

**இறுதிக்கிரியை**
*16.11.2020 திங்கள் காலை 9மணி முதல் 10.30 மணி வரை*
முகவரி: COMMUNITY ACTION SUTTON. HILL HOUSE BISHOPS FORD ROAD,MORDEN SURRY SM46BL

**பூதவுடல் தகனம்**
*16.11.2020 திங்கள் 11.30 மணி முதல் 12.30 மணி வரை*
**முகவரி:** Lambeth Crematorium 29 Blackshaw Rd, London SW17 0DH, UK

**தொடர்புகளுக்கு**
Ahilan – Son : +447801142442 - லண்டன்
Aravinthan – Son : +447387929625 - லண்டன்
Rames – Son : +447808554055 - லண்டன்
அப்புத்துரை விதானையார் குடும்பம் : +94212252653 - இலங்கை
செந்தில்நாதன் Mobile : +61421372989 - அவுஸ்திரேலியா

தகவல்:
**குடும்பத்தினர்.**

**மலிவு விற்பனை**

70% அல்ககோல் கொண்ட Sanitizer
மலிவு விலையில்

| | | | |
|---|---|---|---|
| 50 ml | 90.00 | 1l | 700.00 |
| 100 ml | 170.00 | 4l | 2500.00 |
| 500 ml | 380.00 | 5l | 3000.00 |

தொடர்பு:
35/58, Kalasalai Road, Thirunelvely, Jaffna.
077 - 509 2737

அருந்ததி
இணைய திருமண சேவை
0777 164 524 www.arunthathee.com

**மணமகன் விபரம்**

**15526 | வி | 1981**
புங்குடுதீவு| இந்து |177செ.மீ
Bank Officer | America
கேட்டை (விருச்சிகம்)

**15847 | வே | 1986**
கோண்டாவில் | இந்து
Software Analyst | SL
இலங்கை | செவ் : 7

**16048 | வே | 1988**
பளை | இந்து
Quantity Surveyor
பரணி (மேடம்) | 160 செ.மீ

**15742 | வே | 1990**
முல்லைதீவு |கிறிஸ்தவம்
Engineer| இலங்கை
பூசம் (கடகம்) |172 செ.மீ

**16144 | வே | 1991**
ஏளாலை |இந்து |174 செ.மீ
Software Engineer | SL
சித்திரை (துலாம்)

**மணமகள் விபரம்**

**16171 | கு | 1988**
நவாலி| இந்து |160 செ.மீ
Ass. Commissioner | SL
சுவாதி (துலாம்)

**15745 | வே | 1990**
கந்தர்மடம் | இந்து
Project Engineer|சிங்கப்பூர்
அச்சுவினி (மேடம்)

**16126 | வே | 1993**
யாழ் நகரம்| இந்து
Accpuntant | SL
ரேவதி (மீனம்) | சூ–செவ் : 6

**15961 | வே | 1996**
நீர்வேலி | இந்து
BA Final Year | SL
உத்தரம் (கன்னி)| 153 செ.மீ

**16051| வே | 1997**
மல்லாகம் | இந்து | SL
பூசம் (கடகம்) | 152செ.மீ


20, கே.கே.எஸ் வீதி,, கொக்குவில், யாழ்ப்பாணம்

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக. சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை



10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
பெண்களுக்கான கைவினைப்பொருட்கள் தயாரித்தல்

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : நலம்தானா ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படத்திலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்



5.00 மணி : பல்துறைக் கருவூலம்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை
ராம் அருண் காஸ்ட்ரோ மற்றும் விஷ்ணுப்ரியா நடிப்பில் வி1



**இரவு**

7.00 மணி : சமையல் சமையல்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : வேர்களும் விழுட்சங்களும்
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN TELEVISION VISION

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**

7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - தமிழ்
6.00 மணி : தரம் 07 - விஞ்ஞானம்
6.45 மணி : தரம் 08 - கணிதம்
7.30 மணி : தரம் 09 - விஞ்ஞானம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) புவியியல்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) பௌதீகவியல்

**பகல்**

12.00 மணி : தரம் 10 - கணிதம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்

**இரவு**

7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : வேளாங்கன்னி மாதா மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : மறைவகுப்பு
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : வேர் கொள்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.11.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

12.11.2020 வியாழக்கிழமை



# 61ம்

## ஆண்டு நிறைவு

## சிறப்பு இதழ்

# ‘ஈழநாடு’: யாழ்ப்பாண ‘ஆற்றுப்படை’



கே. சி. தங்கராசா




*(1959 பெப்ரவரி 11ஆம் திகதி வெளியான ‘ஈழநாடு’ முதலாவது இதழில், ஸ்தாபனத்தின் தலைவர் திரு கே. சி. தங்கராசா அவர்கள் ‘ஈழநாடு’ பத்திரிகை ஆரம்பிக்கப்படுவதன் நோக்கத்தை விளக்கி எழுதிய கருத்துரையை மீளப் பிரசுரிக்கிறோம். ஆ-ர்)*

**புத்தம் புதிய துறைகளை ஆராய்ந்து நமது பொருளாதார நிலையைச் சீராக்க வழிவகைகளைத் தேடவேண்டும். தலைமுறை தலைமுறையாகத் தமிழர் வாழ்ந்துவந்த பகுதிகளில் பொருளாதாரச் சீரமைப்புக்கான புதிய பணிகளை நாம் மேற்கொள்ளவேண்டும்**

**தாழ்த்தப்பட்ட சமூகம் என நம்மில் ஒரு பகுதியினரை நாம் ஒதுக்கிவைத்துவிட்டு, தமிழினத்தின் உரிமைகளுக்காகப் போராடுவது அர்த்தமற்றதாகும்.**

**தொழிற் கல்வி உடனடியான தேவைகளில் ஒன்று. கலாசாரப் பயிற்சியின் அடிப்படையிலேதான் தொழிற் கல்வி அமையவேண்டும்**

**வாழ்க்கையை நடத்துவதற்கு நிலையான வருவாயைத் தேடிக்கொள்வது, பொருட்செல்வத்தைப் பொறுத்தமட்டில் வரவேற்கவேண்டியதுதான். அதேவேளையில், அருட்செல்வத்திற்குரிய ஆத்மீகப் பண்புகளையும் பேணிக் காக்கும்.**

‘ஈழநாடு’ இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமானதொரு கட்டத்திலே தோன்றியுள்ளது. சிக்கல்கள் மிகுந்துள்ள இன்றைய நிலையில் எத் திக்கை நோக்கிச் செல்லவேண்டுமெனத் தெரியாது, தமிழ் பேசும் மக்கள் திகைத்து நிற்கின்றனர். இவ்வேளையில், ‘உண்மை தெய்வீகமானது; கருத்துரைகள் கட்டுப்பாடற்றவை’ என்ற பத்திரிகா தர்மத்தை இலக்காகக்கொண்டு, உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்கவும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் ‘ஈழநாடு’ உதயமாகியுள்ளது.

தமிழ் மக்களிடையே நிலவிவரும் பலதரப்பட்ட கருத்துக்களுக்கு ஓர் அரங்கமாக உதவுவதற்கும், தெளிவாகச் சிந்தித்து நிலைமைகளை நன்கு ஆராய்வதற்குமாகவே இவ் வார இதழ் வெளிவருகின்றது. இத்தகைய ஒரு வெளியீடு மக்களுக்கு அவசியமென்பதில் கருத்துவேற்றுமைக்கு இடமேயில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், மலைநாட்டிலும் வாழும் தமிழ் பேசும் மக்கள் தங்குதடையின்றி தங்கள் உளப்பாங்கை வெளியிடுவதற்கு இன்று ஒரு பத்திரிகை அவசியமென்பதை இலங்கைவாழ் தமிழ் மக்களின் எதிர்கால நல் வாழ்வில் அக்கறையுள்ள அனைவரும் ஒப்புக்கொள்வர். இந்த அவசிய தேவையை நிறைவேற்றுவதற்காகவே மிகுந்த இன்னல்களுக்கிடையில் ‘ஈழநாடு’ ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழரனைவருக்கும் பொதுவான பத்திரிகை இல்லையென்றே கூறவேண்டும். ஒருசில பத்திரிகைகள் உளவாயினும், அவற்றுள் சில அரசியற் கட்சி சார்புடையனவாகும். வேறுசில, சமயப் பற்றுள்ளனவாகவும் பணியாற்றிவருகின்றன.

**வேற்றுமையில் ஒற்றுமை காண...**

ஈழவள நாட்டிலே பல சமூகத்தினர் இருக்கின்றார்களெனினும், தமிழரின் சொந்த பண்பாட்டினையும், உரிமைகளையும் எடுத்துரைக்கும்போது, பிற சமூகத்தினரும் இந் நாட்டில் வாழ்ந்துவருகின்றனர் என்பதை உணர்ந்து, வேற்றுமையில் ஒற்றுமை காண முயலவேண்டும். ஒற்றையாட்சியில் இந் நாட்டில் மனித உரிமைகளைப் பெறுவது சாத்தியமானதா, அடிப்படை உரிமைகள் அனைத்தும் நன்கு பாதுகாக்கப்படுமா? அன்றேல், சமஷ்டிதான் இலங்கைக்கு உகந்ததா? மாகாண சுயாட்சிமுறை எமது தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றத்தக்கதா? இவைபோன்ற கேள்விகளுக்கு விக்கம்தரும் கருத்தரங்கமாக ‘ஈழநாடு’ விளங்கும்.

தமிழினத்தின் பொருளாதார நிலை இன்று மிக மோசமாகிக்கொண்டு வருகின்றது. தமிழ் மக்கள் அரசாங்க சேவையை நம்பி வாழுங்காலம் மீண்டும் வரப்போவதில்லை. உத்தியோகப் பதவிகள் சம்பந்தமான தேர்வுகளில் அரசாங்கம் பாரபட்சமின்றி நடந்தாலுங்கூட, இன்றைய நிலையிற் போதிய உத்தியோகங்கள் கிடைக்குமென நாம் எதிர்பார்க்கவே முடியாது. இந் நிலையிலே, புத்தம் புதிய துறைகளை ஆராய்ந்து நமது பொருளாதார நிலையைச் சீராக்க வழிவகைகளைத் தேடவேண்டும். தலைமுறை தலைமுறையாகத் தமிழர் வாழ்ந்துவந்த பகுதிகளிற் பொருளாதாரச் சீரமைப்புக்கான புதிய பணிகளை நாம் மேற்கொள்ளவேண்டும். அதனைவிடுத்துப் பொருளாதார விருத்திபற்றி வெற்றுரை பேசித்திரிவதிற் பயன் எதுவுமில்லை.

**பொருளாதார வளர்ச்சிக்கு உதவ...**

பொருதார விருத்தி இரு துறைப்பட்டது. ஒன்று, தனிப்பட்டவர்களின் முயற்சியை அடிப்படையாகக் கொண்டது. மற்றையது, அரசாங்கத்தின் முயற்சியை அடிப்படையாகக்கொண்டது. தனிப்பட்டோரின் முயற்சி அனைத்தும் தமிழர் கையிலேயே தங்கியிருக்கிறது. இவர்கள் தமிழர் வதியும் இடங்களில் உள்ள மூலதனத்தை ஆராய்ந்து, தகுந்த திட்டத்தை ஒருமுகமாகச் சமர்ப்பித்தாலன்றி, அரசினரிடமிருந்து மிகுந்த பயனைப் பெறமுடியாது. வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்துவரும் தமிழ் பேசும் முஸ்லிம்களின் ஆதரவும், மலைநாட்டில் வாழும் தமிழர்களின் நட்புறவும் பொதுவாக இலங்கைக்கும், சிறப்பாக தமிழினத்தின் பொருளாதார வளனுக்கும் இன்றியமையாதன என்பதை இங்கு எடுத்துக் காட்டவேண்டியதில்லை.


தமிழரிடைக் கல்விபயின்ற நடுத்தர வகுப்பினருக்கு அரசாங்க சேவையில் பதவிகள் தேடுவதிலேயே இதுவரை கவனம் செலுத்திவந்தோம். தமிழினத்தின் பொருளாதார வளர்ச்சியைப்பற்றி நாம் சித்தித்ததே கிடையாது. அது உண்மையாகவே கவலைக்குரியது. கமக்காரரையும் தொழிலாளரையும் எதிர்நோக்கி நிற்கும் சிக்கல் நீங்க இனியேனும் நாம் அயராது உழைக்கவேண்டும். இதனோடு இணைந்துள்ள மற்றொரு சிக்கல், தாழ்த்தப்பட்டோர் எனப் பெயரிட்டு, நாம் ஒதுக்கிவைத்துள்ள சிறுபான்மைத் தமிழரைப் பற்றியதாகும். மக்களாட்சி, சமூக நீதி என்றெல்லாம் பேசப்படும் இந் நாட்களிலே, தாழ்த்தப்பட்ட சமூகம் என நம்மில் ஒரு பகுதியினரை நாம் ஒதுக்கிவைத்துவிட்டு, தமிழினத்தின் உரிமைகளுக்காகப் போராடுவது அர்த்தமற்றதாகும். இவர்களுக்கு விளைவிக்கப்பட்டுள்ள அநீதிகள் அனைத்தும் அறவே அகற்றப்படவேண்டும்.

சாதிமத பாகுபாடுகளால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நீக்கி, தமிழ் மக்களை ஒருமுகப்படுத்தி, அவர்களை ஆக்கபூர்வமான முயற்சிகளில் வழிப்படுத்துவதற்கு ‘ஈழநாடு’ பணிசெய்யும். பின்தங்கிய நாடுகளை இன்று பசியும் பிணியும் வறுமையும் வாட்டிவருகின்றன. இவற்றை நீக்குவதற்கு பொதுவுடைமை ஆட்சிதான் சிறந்ததென்ற கருத்து வலுப்பெற்று வருகின்றது. இவற்றை நீக்குவதற்கு பொதுவுடைமைதான் இலங்கைக்கு உகந்ததென ஒருசாரார் கூறுகின்றனர். உரிமைகள் இழந்துநிற்கும் தமிழ் மக்களைக் காப்பாற்றும் சக்தி பொதுவுடைமை ஆட்சிக்கே உண்டெனக் கூறுவோருமுளர். இவர்கள் அனைவரினதும் கருத்துக்கள் இப் பத்திரி கையில் இடம்பெறும்.

வறுமையினின்றும் விடுதலைபெற்று, வாழ்க்கையை நடத்துவதற்கு நிலையான வருவாயைத் தேடிக்கொள்வது பொருட்செல்வத்தைப் பொறுத்தமட்டில் வரவேற்கவேண்டியதுதான். அதேவேளையில், அருட்செல்வத்திற்குரிய ஆத்மீகப் பண்புகளையும் ‘ஈழநாடு’ பேணிக் காக்கும். கல்வி, கலாசார விருத்திகளுக்கான துறைகளிலும் ‘ஈழநாடு’ மிகுந்த கவனம் செலுத்தும். இன்று, தொழிற் கல்வி உடனடியான தேவைகளில் ஒன்று. கலாசாரப் பயிற்சியின் அடிப்படையிலேதான் தொழிற் கல்வி அமையவேண்டும். இத்தனைக்கும் தொழில் வல்லுநர் நாட்டுக்குக் கண்ணின் மணி போன்றவர்கள். இவர்கள் மாத்திரமன்றி, கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள், நாட்டியக் கலைஞர்கள், இசை வல்லுநர்கள், தத்துவ ஞானிகள் எல்லோரும் நாட்டில் பெருகவேண்டும்.

சொந்த நாட்டிலேயே சகல இனத்தினரும் மதத்தினரும் அரசியல், பொருளாதார உரிமைகளைப் பெற்று, சுதந்திரத்துடன் இணைந்து வாழ ‘ஈழநாடு’ உழைத்துவரும். உலக அரங்கிலே பஞ்சசீலம், இணைந்து வாழ்தல் என்ற அடிப்படையில் ‘ஈழநாடு’ உலக சமாதானத்தை வளர்க்கத் துணைசெய்யும்.

இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் எதிர்கால வாழ்வில் அக்கறைகொண்டுள்ள அனைவரிடமிருந்தும் ‘ஈழநாடு’ கருத்துரைகளை எதிர்பார்க்கின்றது. அத்துடன், குறைபாடுகளை எடுத்துக்காட்ட வாசகர்கள் தயங்கவேண்டியதில்லை. ‘ஈழநாடு’ தனது எதிர்காலத்தை தமிழ் பேசும் மக்களிடம் ஒப்படைப்பதுடன், தமிழ் மக்களின் நல் வாழ்வுக்கே தன்னையும் சமர்ப்பணம் செய்கின்றது.



- ராஜன் சண்முகரத்தினம்
இயக்குநர்

# ‘நதி மூலம்’

**‘ஈழநாடு’ ஆரம்பிக்கப்பட்டதும், பின்னர், அது வெளிவந்த காலங்களில் எதிர்கொண்ட சவால்களும், சுகமும் துக்கங்களும் அநந்தம். இக் காலத்தில் இப் பத்திரிகையுடன் ஒவ்வொருவிதத்திலும் தொடர்பாயிருந்த ஒவ்வொருவரும் நிறைக்கும் நினைவுகள் அநந்தம்.**

**இப்போது, ஒரு தலைமுறைக் காலம் என்று சொல்லக்கூடிய முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் ‘ஈழநாடு’ மீண்டும் வெளிவரத் தொடங்கி, ஓராண்டு நிறைவை எய்தியிருக்கிறது.**

வண்ணார்பண்ணையில், மதிப்பார்ந்த ஆயுர்வேத பரம்பரையான எங்கள் குடும்பத்தில் மனித வாழ்வோடு, சமூக வாழ்வின் ஆரோக்கியத்திலும் எழுந்த ஆவல், ‘ஈழநாடு’ பத்திரிகையாக வடிவம்பெற்றது.

மகாத்மா காந்தியின் யாழ்ப்பாண வருகையும், யாழ்ப்பாணத்தில் கொழும்புத்துறை தவ முனிவர் யோகர் சுவாமிகளின் போதனைகளும் பெரியப்பா கந்தப்பிள்ளை சிற்றம்பலம் தங்கராசா அவர்களிடத்தில் சமூகத்தின் அரசியல், பொருளாதாரம், கலை, பண்பாடு, ஆன்மீகம் சார்ந்த சுபீட்சத்துக்கான ஒரு தேவையின் உந்தலை தோற்றுவித்தன. கல்வியை முடித்து, இறப்பர் கட்டுப்பாட்டு திணைக்களத்தில் உதவி ஆணையாளராக இருந்தவர் அரசாங்க சேவையிலிருந்து இராஜினாமா செய்து, சி. டபிள்யு. மக்கீஸ் என்ற, முன்னணி இறப்பர் ஏற்றுமதி கம்பனியில் அதன் பொது முகாமையாளரானார்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் பிரபல ஆங்கில தினசரியாகவிருந்த ‘ரைம்ஸ் ஒவ் சிலோன்’ பத்திரிகையை 1947இல் வர்த்தக சமூகம் ஒன்று ஒன்றிணைந்து வாங்கியதும், கே. சி. தங்கராசா அந் நிறுவனத்தின் முதலாவது இலங்கையராக, பொது முகாமையாளர் பதவியை ஏற்றார். பிராங் மொறாயஸ் என்ற கீர்த்திமிக்க பத்திரிகையாளர் அப்போது அதன் ஆசிரியராகவிருந்தார். திரு தங்கராசா பொது முகாமையாளராக இருந்த வேளையில்தான் ‘லங்கா தீப’ சிங்கள பத்திரிகையை ‘ரைம்ஸ்’ குழுமம் ஆரம்பித்தது.

நண்பர்கள் சிலருடன் இணைந்து ‘சிஎவ்ரி’ (Ceylon & Foreign Trades-CFT) என்ற ‘இலங்கை - வெளிநாட்டு வர்த்தக கம்பனி’யை உருவாக்கி, மோட்டார் கார்கள் மற்றும் கனரக கைத்தொழில் உபகரணங்கள் இறக்குமதி, ஏற்றுமதியை முகாமைப்படுத்திக்கொண்டிருந்தபோது 1958இல், எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அரசாங்கத்தில் கைத்தொழில் அமைச்சராகவிருந்த லங்கா சமசமாஜ கட்சியின் வில்லியம் டி சில்வா, கிழக்கு மாகாணத்தின் மிகப் பெரும் தொழிற்சாலையாகவிருந்த கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பொறுப்பில் திரு தங்கராசாவை நியமித்தார்.

1977வரை, அரசாங்கங்கள் மாறிய வேளைகளிலும் அவரை அப் பதவியில் ஒவ்வோர் அரசாங்கமும் தொடர்ந்து வைத்திருந்தமை, அவரின் நிர்வாக, தலைமைத்துவத்தின் மேன்மையேயாகும்.

இந்த வேளையில்தான் 50களின் நடுப்பகுதியில், யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, கலை, பண்பாட்டு, ஆன்மீக மேம்பாடு களிலும், அவர்களின் உரிமைகளை உறுதிசெய்வதிலும் ஒரு பத்திரிகையை ஆரம்பித்துவிடும் அவரின் நீண்டகால எண்ணம் தீவிரம் பெற்றது.

தம்பியாரான எனது தந்தையார் டாக்டர் கே. சி. சண்முகரத்தினத்தையும் இணைத்துக்கொண்டு, நண்பர்களான ‘கலைப்புலவர்’ நவரத்தினம், ஏ. இ. தம்பர், ச. அம்பிகைபாகன், கா. வைரமுத்து, து. சீனிவாசகம், மு. கதிரவேலு, கே. குமாரவேலு முதலானவர்களுடன் இதுபற்றிய தீவிரமான தொடர் ஆலோசனைகள் இடம்பெற்றன.



திரு.பா.சிவாநந்தன்

இலக்கண சுவாமிகள் என அறியப்படும் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமி தம்பிரான் எனது அப்பம்மாவின் சகோதரர். பதினான்கு வயதில் இந்தியா சென்று, சிதம்பரத்தில் தமிழிலும் சைவ சித்தாந்தத்திலும் புலமை பெற்று, அங்கேயே தங்கிவிட்டவரை கடைசியாக 1948இல் பெரியப்பா சந்தித்தார். அப்போது, அச்சகம் ஒன்றை நிறுவி, நூல்கள் வெளியிடும் உன்னத தொண்டுபற்றி தாய்மாமனரான இலக்கண சுவாமிகள் உணர்த்தியிருந்ததும், பெரியப்பாவின் இச் சித்தனைக்கு தூண்டுதலாகவிருந்தது.

தங்கை ஒருவருக்குச் சொந்தமான காணியில் பெரியப்பா 1956 ஜூலையில் ‘ஈழநாடு’ கட்டடத்துக் கான அத்திபாரக்கல்லை எங்கள் அப்பம்மா நாட்ட வைத்தார். கட்டடத்தின் முதல் கட்டம் 1958இல் பூர்த்தியாகி, ‘கலாநிலையம்’ பதிப்பகமும் அச்சகமும் முதலில் ஆரம்பிக்கப்பட்டன. பதிப்பகத்தை ஆரம் பிக்க அறிவுறுத்திய இலக்கண சுவாமிகளின் நினைவு மலர்தான் முதன் முதலாக அங்கு அச்சாகி, வெளியானது.

‘ஈழநாடு’ வார இதழ், கலாநிலைய பதிப்பாக 1959 பெப்ரவரி 11இல் வெளிவரத் தொடங்கியது. 1959 ஒக்ரோபரில் ஈழநாடு நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவுசெய்யப்பட்டதிலிருந்து, ‘ஈழநாடு’ வாரம் இருமுறை வெளிவரத் தொடங்கியது. 1961இலிருந்து ‘ஈழநாடு’ தினசரியானது.

இந்தியாவில் பயின்று, ‘குழந்தைகளின் இரட்சகர்’ என்ற பேரபிமானத்தோடு, யாழ்ப்பாணத்தில் சித்த ஆயுர்வேத மருத்துவராகவும், யாழ்ப்பாணத்தின் பிறப்பு, இறப்பு மருத்துவ பதிவாளராகவுமிருந்த எனது தந்தையார் சண்முகரத்தினம், 1966இல் அவர் காலமாகும்வரை, ஈழநாடு நிறுவனத்தின் தலைவராக, பத்திரிகையின் அன்றாட விவகாரங்களை அல்லும் பகலும் கவனித்து, தமையனாருக்கு மிகுந்த அநுசரணையாகவிருந்தார்.

சமூகத்தின் கல்வி வளர்ச்சியிலும் பெரும் அக்கறைகொண்டிருந்த திரு தங்கராசா, கொழும்பில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, இரத்மலானை இந்துக் கல்லூரி ஆகியவற்றை நிர்மாணித்த இந்து கல்வி சபையின் (Hindu Educational Board) செயலாளராகவிருந்தார். இக் கல்லூரிகளை அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னரும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் கல்விச் சபையின் நிர்வாகத்திலிருந்தது.

தன்னுடைய நேர்மையிலும், பரிவிலும் அர்ப்பணிப்பான சிந்தையிலும் தமிழ் சமூகத்தின் ஓர் அரணாகவே திரு தங்கராசா விளங்கினார். வெளிப்படையான அரசியல் சார்பற்றிருந்த அவருடன் தமிழ், சிங்கள அரசியல் தலைவர்கள் எல்லோருமே கண்ணியமான நட்பை எப்போதும் பேணினர்.

அரசியல் தலைவர்கள் மாத்திரமன்றி,



திரு.கே.சி.தங்கராசா

இலங்கையிலும் இந்தியாவிலும் பல தமிழ் அறிஞர்கள், மத அறிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் போன்ற பலருமே அந்நியோன்யத் துடன் பழகினர். உலக தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் முக்கிய உறுப்பினராகவிருந்தார். ‘வீரகேசரி’ பத்திரிகையிலும் நிர்வாக பொறுப்புக்களில் இணைந்திருந்தார். ஓர் ஆங்கில பத்திரிகையையும் நிறுவவேண்டும் என்ற அவரின் எண்ணத்திலேயே Saturday Review பத்திரிகை யாழ்ப்பாணத்தில் வெளியானது. அவர் அதன் நிர்வாக இயக்குநராகவிருந்தார்.

வண்ணார்பண்ணை சிவன் கோவில், வண்ணார்பண்ணை கதிரேசன் கோவில் ஆகியன எங்கள் குடும்பத்தின் ஆத்மீக ஈடுபாட்டுடன் இணைந்திருந்தன. சிவன் கோவிலில் தேர்த் திருவிழா எங்களுடையதாகவிருந்தது. ஸ்ரீ ஞான வைரவர் கோவில் எங்களுடைய பரம்பரைக் கோவில். இப்போது, இலக்கணசுவாமிகள் பெயரில் அறநெறிப் பாடசாலையும், வாழ்வின் ஆத்மீக ஈடுபாட்டின் வழிகாட்டலாக அங்கு நடைபெறுகிறது.

பெரியப்பா 1987இல் இறைவனடி எய்தினார். நாட்டு நிலைமைகளும் ‘மரணத்துள் வாழ்வோம்’ என்று ஆகிவிட்டநிலையில், பத்திரிகையைத் தொடர்ந்தும் வெளியிடுவது பெரிதும் சிரமமானபோது, 1989இல் ‘ஈழநாடு’ வெளிவருவது நின்றுபோனது.

இப்போது, ஒரு தலைமுறைக் காலம் என்று சொல்லக் கூடிய முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் ‘ஈழநாடு’ மீண்டும் வெளிவரத் தொடங்கி, ஓராண்டு நிறைவை எய்தியிருக்கிறது. பல ஆண்டுகளாக ஆதங்க வெளிப்பாடு களோடு தொடர்ந்த பேச்சுக்கள் கனிந்து, ‘டான்’ தொலைக்காட்சியின் திரு எஸ். எஸ். குகநாதன், பத்திரி கையாளர் திரு சு. மகாலிங்கசிவம் (மாலி) ஆகியோரும் சேர, ‘ஈழநாடு’ தன் பயணத்தைத் தொடர்கிறது. எனது பெரியப்பாவின் கனவுகள் நனவுகளாக தொடர்வதில் இவர்கள் இருவரும் இதயபூர்வமாக முன்வந்ததில் என்னுடைய உளம் நிறைந்த நன்றி இவர்களுக்கு உரியது.

‘ஈழநாடு’ ஆரம்பிக்கப்பட்டதும், பின்னர், அது வெளிவந்த காலங்களில் எதிர்கொண்ட சவால்களும், சுகமும் துக்கங்களும் அநந்தம். இக் காலத்தில் இப் பத்திரி கையுடன் ஒவ்வொருவிதத்திலும் தொடர்பாயிருந்த ஒவ்வொருவரும் நிறைக்கும் நினைவுகள் அநந்தம். ஆசிரிய பீடத்தில், நிர்வாக பகுதியில், அச்சுப் பிரி வில் என எல்லோருமே தெரிகிறார்கள். ஆசிரியர் ஹரன், கோபாலரத்தினம், முகாமையாளர்கள் வைரமுத்து, சீனிவாசகம், அச்சகத்தில் வேலுப்பிள்ளை, பாலசிங்கம் என்று இப்படி ஓரிருவரை மாத்திரமல்ல, எல்லோரையுமே நினைவுடனும் நன்றியுடனும் நாம் பதிவிட விரும்புகிறோம். 1981 ஜூன் முதலாம் திகதி இரவு ‘ஈழநாடு’ எரியூட்டப்பட்டபோது எரிகாயங்களுக்குள்ளான என்னுடைய மைத்துனர் பா. சிவானந்தன் அப்போது நிர்வாக இயக்குநராக, பல காலம் அர்ப்பணிப்போடு பணியாற்றியவர். பத்திரிகை விநியோகத்துக்குப் பொறுப்பாயிருந்த ஐயா. சச்சிதானந்தம் எரிகாயங்களுக்குள்ளான மற்றையவர். பணியாற்றியவர்களில் மறைந்தவர்கள் தவிர, மற்றையோருடன் தொடர்புகளைக்கொள்ளவும் சந்திக்கவும் நான் மிக விரும்புகிறேன். தயவுடன் தொடர்புகொள்ளுங்கள். இவர்கள் எல்லோருடைய உழைப்பிலுமே ‘ஈழநாடு’ உயர்ந்தது.

மேலும், சகோதரர்களான என்னுடைய தந்தையாரும் பெரியப்பாவும் ஒருவரோடொருவர் பேணிய உன்னத மான உறவும், மதிப்பும், பெருந்தன்மையும், புரிந்துணர்வும் எம் குடும்ப பாரம்பரியத்தில் அணிசேர்ப்பவை.


ஆக, நம்முடைய வாழ்வியலில் அறுபது ஆண்டுகள் ஒரு காலச் சக்கரம். ‘ஈழநாடு’ம் உண்மையில் அது ஆரம் பிக்கப்பட்டதிலிருந்து அறுபது ஆண்டுகளைக் கடந்து, 61ஆவது ஆண்டில் இப்போது கால் பதிக் கிறது. கே. சி. தங்கராசா அவர்களின் அதே ஆத்ம சிந்தையுடன் ‘ஈழநாடு’ தடம்பதித்து தொடரும் என்பதே எமது பிரதிக்ஜை.

எப்போதும் போலவே, அன்றுபோல் இன்றும், வாசகப் பெருமக்கள், வர்த்தகப் பெருமக்களின் பேராத ரவும் பேரபிமானமும் ‘ஈழநாடு’க்கு நிச்சயம் நிறையும். அவர்களுக்கும் நன்றி.

எல்லாவற்றுக்கும் மேலான இறையருள் சித்தமாகட்டும்.

– நிர்வாகிகள்
'ஈழநாடு' நிறுவனம்

# செல்ல வேண்டும் நெடுந் தொலைவு


திரு.கே.பி.ஹரன்


திரு.என்.சபாரத்தினம்

**"மாகாண பத்திரிகையான 'ஈழநாடு', கொழும்பு தேசிய தினசரிகளிலும் சில தாக்கங்களை ஏற்படுத்தியது. கொழும்புக்கு வெளியேயிருந்து முதல் தேசிய தினசரியாக வெளிவந்த 'ஈழநாடு', கொழும்பு தினசரிகளுடன் போட்டியிலும் நின்றது.**

**யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் ஒன்று உருவாவதற்கு முன்னரேயே, 'யாழ்ப்பாணத்து பாரம்பரியம்' என்ற பெருமையில் இணைத்து, இனத்தின் சுபீட்சத்தை அவாவிய வழிப்படுத்தலின் அர்ப்பணமாய் எழுந்த 'ஈழநாடு', யாழ்ப்பாணம் 'யாழ்ப்பாணத்தை' இழந்தபோது, தன்னையும் இழந்தது."**

கொழும்பில் 'தினத் தபால்' என்ற பெயரில், இஸ்லாமிய பிரமுகர் ஒருவரால் சில மாதங்களாக வெளியிடப்பட்டுவந்த, இரண்டு சத விலையுடைய சிறிய அளவிலான தினசரிப் பத்திரிகையை நாட்டுக்கோட்டைச் செட்டியார் ஒருவர் விலைக்கு வாங்கி, 1930இலிருந்து 'வீகேசரி' என்ற பெயரில் வெளியிடத் தொடங்கினார்.

இதே காலப்பகுதியில் சில மாதங்களுக்கு முன்னதாக, யாழ்ப்பாணம் சுன்னாகத்திலிருந்து 'ஈழகேசரி' வாரப் பத்திரிகை வெளிவர ஆரம்பித்திருந்தது. திருமகள் அழுத்தகம் என்ற அச்சுக்கூடத்தையும், தனலக்குமி புத்தக சாலை, வட இலங்கை தமிழ் நூற் பதிப்பகம் என்பவற்றையும் நடாத்திவந்த, குரும்பசிட்டியைச் சேர்ந்த பெரியார் நா. பொன்னையா இதனை ஆரம்பித்திருந்தார். சேர் பொன்னம்பலம் இராமநாதனுக்கு வழங்கப்பட்ட 'ஈழகேசரி' என்ற கௌரவ பட்டத்துக்கு, மேலும் ஒரு கௌரவமாக திரு பொன்னையா தன்னுடைய பத்திரிகைக்கு இப் பெயரைத் தேர்ந்தார். சேர் பொன். இராமநாதன் மறைந்தது அந்த ஆண்டில்தான்.


'ஈழகேசரி' 1958க்குப் பின்னர் வெளிவராமல் போக, யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையில் பெரியவர் கே. சி. தங்கராசாவும் அவரது சகோதரர் டாக்டர் கே. சி. சண்முகரத்தினமும் 1959இல் 'ஈழநாடு' பத்திரிகையை வார இதழாக ஆரம்பித்தார்கள்.

சோழ நாட்டுப் பண்பாட்டுடன் கலந்த 'யாழ்ப்பாண பாரம்பரியம்' என்ற ஒன்று, ஆரிய சக்கரவர்த்திகளான யாழ்ப்பாண அரசர் காலத்துக்குப் பின்னர் போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும், பின்னர் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஏற்பட்ட பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலும் எதிர்நீச்சலோடு நிலைத்துச் சிறந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியின்போது, ஆறுமுகநாவலர் பேணிக்காத்து அளித்த இப் பாரம்பரியத்தில், பழையன போற்றப்படுதலும், புதியன ஏற்றுக்கொள்ளப்படுதலும், வடமொழியை அணைத்துக்கொள்ளுதலுமான ஒரு சிறப்பு மரபை இலக்கியவாதிகள் தமிழில் பேணினர். வண்ணார்பண்ணை இந்த கலாசார, மொழி, பண்பாட்டு பாரம்பரியத்தின் ஊற்றாக விளங்கியது. அங்கு அமைந்த சிவன் கோவில், இப் பாரம்பரியத்தின் கலை மரபைச் சாற்றியது.

'யாழ் நூல்' தந்த விபுலாநந்தரைப் போல, வண்ணார்பண்ணையில், 'திராவிட சிற்ப நூல்' தந்த 'கலைப்புலவர்' நவரத்தினத்தின் 'கலாநிலையம்' வெளியிட்ட 'ஞாயிறு' காலாண்டுச் சஞ்சிகை தமிழில் புதுமை சேர்த்தது.

அப்போது, வண்ணார்பண்ணையிலிருந்து 'இந்து சாதனம்' சைவ சமயப் பத்திரிகையாக வெளியாகிக்கொண்டிருந்தது.


டாக்டர் கே.சி. சண்முகரத்தினம்    திரு.கே.சி.தங்கராசா

ஆக, இப் பாரம்பரியத்தில், வண்ணார்பண்ணையில் உதயமான 'ஈழநாடு', சிவன் கோவிலுடனும் கலாநிலையத்துடனும் தொடர்புடையதாய் எழுந்தது.

கொழும்பு 'வீரகேசரி'யில் பணியாற்றியோர் பலருடனேயே ஆரம்பிக்கப்பட்டாலும், இந்த யாழ்ப்பாண பாரம்பரியத்தில் 'ஈழநாடு' ஒரு தனித்துவத்தை, அதன் நோக்கங்கள், பொறுப்புக்களுக்கு அப்பால், அதன் பத்திரிகைப் பாணியிலும் பேணியது.

சென்னையில் எஸ். எஸ். வாசன் ஆரம்பித்த 'ஆனந்த விகடன்' ஏற்படுத்திய புதுமை, யாழ்ப்பாணத்தில், ஆசிரிய மாணவர்களுக்கான இலக்கிய திறனாய்வு கற்பித்தலில் பண்டிதமணி கணபதிப் பிள்ளையையும் ஈர்த்திருந்தபோது, அப் புதுமையையும் அநுசரித்து, 'ஈழநாடு' தன் தனித்துவத்தை வளப்படுத்தியது.

'வீரகேசரி'யிலிருந்து வந்தவர்களோடு, 'ஈழகேசரி'யிலிருந்து வந்த இராஜ. அரியரத்தினம், அ. செ.முருகானந்தம் ஆகியோரும் இணைந்திருந்தனர். தொடக்கத்தில் 'வீரகேசரி'யின் ஆசிரியராகவிருந்த 'வ.ரா'வும் (ராமசாமி ஐயங்கார்) 'ஈழகேசரி'யின் ஆசிரியராகவிருந்த சோ. சிவபாதசுந்தரமும் 'மணிக்கொடி' நண்பர்கள். மணிக்கொடியை ஆரம்பித்தவர்களில் ஒருவர் 'வ.ரா.'. புதுமைப்பித்தன் உள்பட, மணிக்கொடி எழுத்தாளர்கள் பலருடன் மிக அந்நியோன்ய நட்பைக் கொண்டிருந்த சோ. சிவபாதசுந்தரம் 'ஈழகேசரி'யில் ஏற்படுத்திய அப் 'புதுத்தமிழ்' வழக்கு, 'ஈழநாடு' பத்திரிகைப் பாணிக்கு துணையாகியதென்பதைச் சொல்லலாம்.

இலங்கை அரசியலில் தமிழர் உரிமைப் பிரச்னை முனைப்புற்ற காலத்தில் எழுந்த 'ஈழநாடு', அதன் செய்தி அளிக்கையிலும் இந்த, பிரதேச பண்பின் பெறுமானங்கள் சேர, 'ஈழநாடு பத்திரிகைப் பாணி'யை அது தனித்துவமாக்கியது.

'உண்மைகள் புனிதமானவை; கருத்துரைகள் சுதந்திரமானவை' என்று, உலக பத்திரிகா தர்மமாகும் இக் கோட்பாடு, இங்கிலாந்தின் மாகாணப் பத்திரிகையாக உருவான 'மஞ்செஸ்டர் கார்டியன்' பத்திரிகையில்தான் கருக்கொண்டது. அதன் ஆசிரியராகவிருந்த சி. பி. ஸ்கொட் என்பார் வகுத்த நெறி இது. மஞ்செஸ்டர் கார்டியன்தான், பத்திரிகை உலகில் தனித்த கீர்த்தியைப் பெறும் இங்கிலாந்தின் இன்றைய 'கார்டியன்' பத்திரிகை.

அசிரியர் கே. பி. ஹரன், செய்தி ஆசிரியர் எஸ். எம். கோபாலரத்தினம், வாரமலர் ஆசிரியர் இராஜ. அரியரத்தினம் ஆகியோரோடிணைந்த அப் பெருமைமிகும் ஆசிரிய குழாம் வரப்பிட்டு வளர்த்த 'ஈழநாடு' பாணியில், கல்விமான் என். சபாரத்தினம் பின்னர் ஆசிரியராகி, அதில் ஒரு செழிப்பைச் சேர்த்தார்.

மாகாண பத்திரிகையான 'ஈழநாடு', கொழும்பு தேசிய தினசரிகளிலும் சில தாக்கங்களை ஏற்படுத்தியது. கொழும்புக்கு வெளியேயிருந்து, முதல் தேசிய தினசரியாக வெளிவந்த 'ஈழநாடு', கொழும்பு தினசரிகளுடன் போட்டியிலும் நின்றது.


யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் ஒன்று உருவாவதற்கு முன்னரேயே, 'யாழ்ப்பாணத்து பாரம்பரியம்' என்ற பெருமையில் இணைத்து, இனத்தின் சுபீட்சத்தை அவாவிய வழிப்படுத்தலின் அர்ப்பணமாய் எழுந்த 'ஈழநாடு', யாழ்ப்பாணம் 'யாழ்ப்பாணத்தை' இழந்தபோது, தன்னையும் இழந்தது.

இப்போது, 'இழந்துபோன அந்த யாழ்ப்பாணத்தை' மீட்கவேண்டியதாகிப்போன ஒரு நியதியில், மீண்டும் தொடங்கும் மிடுக்கில், 'ஈழநாடு' மீண்டும் வெளிவருகிறது.

ஓராண்டு முடிந்திருக்கிறது. இன்னும் தூரம் செல்லவேண்டும். இதைச் சொன்னபோது, நண்பர் ஒருவர் நினைவுபடுத்திய, அமெரிக்க கவிஞர் றொபர்ட் ப்றொஸ்றின் கவிதை வரிகள் இவை:

***"அடர்ந்த மரங்களுடன்***
***அடவியும் அழகுதான்***
***கண்டு களிக்க மனம் உண்டு***
***நின்று ரசிக்கவோ நேரமில்லை***
***வேலையோ அதிகம்***
***நான் செல்லவேண்டும்***
***நெடுந் தொலைவு***
***நெடுந் தொலைவு."***

***-றொபர்ட் ப்றொஸ்ற்***



**(சோ. சிவபாதசுந்தரம், இலங்கையின் பத்திரிகை, வானொலி துறைகளின் பிதாமகர். ‘ஈழகேசரி’ பத்திரி கையின் ஆசிரியராக திகழ்ந்த இவர், இலங்கை வானொலியின் முதல் தமிழ் நிகழ்ச்சிகள் அதிகாரி. இங்கிலாந்தில், ‘பிபிசி’யின் தமிழ் ஒலிபரப்புக்கு ‘தமிழோசை’ என்று பெயரிட்டு நடாத்தியவர்)**



சோ. சிவபாதசுந்தரம்

# சித்தயோகி யோகர் சுவாமிகள்

‘இலக்குமி வாசம்’ என்ற பெயரில் ஒரு புத்தகக் கடை வண்ணார்பண்ணை பிரதான வீதியில் இருந்தது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையும் அந்தக் கடை ஒரு பஜனை மடமாக மாறிவிடும். தெருவாசல் பக்கம் பக்குவமாக பெருக்கப்பட்டு, தண்ணீர் தெளித்து, உள்ளே சில படங்கள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, தெய்வ மணம் கமழும். காரணம், யாழ்ப்பாணம் பெற்றிருந்த தவ முனிவரான யோகர் சுவாமிகள் வெள்ளிக்கிழமை மாலை தோறும் அங்கு எழுந்தருளுவார். தெய்வ சாந்நித்தியம் போன்ற அந்தச் சூழலில் பஜனையும் புராண படனமும் நடக்கும். வாசலில் அமைதியான கூட்டம் இருக்கும். வாகனப் போக்குவரத்து அமைதியாகச் செல்லும்.

இந்த யோகர் சுவாமிகள் ஓர் அபூர்வ மனிதர். வெள்ளை வேஷ்டியும் வெள்ளை அங்க வஸ்திரமும் தரித்து, வெள்ளை முடியுடனும் வெள்ளைத் தாடியுடனும் காட்சியளிப்பார். பல மைல் தூரம் நடந்தே செல்வார். யாழ்ப்பாண நகருக்குப் பக்கத்திலுள்ள கொழும்புத்துறை என்ற பகுதியில் ஒரு குடிசையில் தனியாக வசித்தவர். அவருடைய பூர்வீகத்தைப்பற்றி பலகாலம் தெரியாமலிருந்தது. இலங்கை அரசாங்கத்திதல் உத்தியோகம் பார்த்தவர் என்றும், யாழ்ப்பாணம் நல்லூரில் தங்கியிருந்த துறவி செல்லப்பா சுவாமிகளின் அநுக்கிரகம் பெற்று துறவியானார் என்றும் சொல்வார்கள்.

‘தன்னை அறி’ என்பது அவருடைய உபதேச வாக்கு. நான் பார்த்த காலத்தில் (1929) பெரிய மனிதர்கள், சட்டசபை பிரமுகர்கள், நீதிபதிகள், இதுக்கள், கிறீஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் எல்லோரும் இவரை தரிசிப்பார்கள். அந்த நாளில் சுப்ரீம்கோட்டு நீதிபதி அக்பர் என்ற இஸ்லாமியர் அடிக்கடி யோகரைத் தரிசிக்க வருவார். பிற்காலத்தில் அவருடைய ஆப்த வாக்கியங்களை, கவிதை வடிவில், ‘நற்சிந்தனை’ என்ற பெயரில் அடியார்கள் தொகுத்து நூலாக வெளியிட்டிருக்கிறார்கள்.

1947ஆம் ஆண்டு யோகர் சுவாமிகள் அநுக்கிரகத்தைப்பெற்ற அமெரிக்கர் ஒருவர், அவர் கொடுத்த ‘சிவாய சுப்பிரமுனிய சுவாமி’ என்ற பெயரில், பசிபிக் கடல் மத்தியிலுள்ள ஹவாய் தீவில் ஹௌவை ஆதீனம் நிறுவி, அங்கே ஆகம முறைப்படி சிவனுக்கு ஆலயம் அமைத்து, யோகர் சுவாமிகள் ஆலோசனைப்படி சிவநெறி பரப்பி வருகிறார்.

இலக்குமி வாசத்துக்கு எதிரிலுள்ள கட்டிடத்தில்தான் நான் அப்போது தங்கியிருந்தேன். அது ஒரு பெரிய வீடு. பெரிய தோட்டமும் கிணறும் இருந்தது. எங்கள் ஊரைச்சேர்ந்த ஒரு சைவப் பிள்ளை அந்தத் தெருவில் மளிகைக் கடை வைத்திருந்தார். அவருடைய வீடுதான் அது. ஒருசமயம் அங்கே அம்பலவாண நாவலர் என்ற பெயரைக்கொண்ட சாமியார் ஒருவர் வந்து தங்கினார். அவர் உதவிக்கு கோவிந்தன் என்ற திருநெல்வேலி தவசிப்பிள்ளையும் இருந்தார். காஷாயம் தரித்த அம்பலவாண நாவலர் சித்தன்கேணி கிராமத்தைச் சேர்ந்தவர். இளமையிலேயே இந்தியா சென்று வடமொழியும் தமிழும் கற்று, சமய சாஸ்திரங்களிலும் பாண்டித்தியம் பெற்றார். சைவசித்தாந்த சாஸ்திரங்களில் வல்லவர். அகங்காரம் நிறைந்தவர். சமயச் சொற்பொழிவுகளுக்கு இவரை அழைத்தால், மடாதிபதிகள் தோரணையில், பூரண கும்பத்தையும் மேளதாளத்தையும் எதிர்பார்ப்பார். தூரத்திலேயே விலகி நின்ற என்னை ஒருநாள் அவர் அழைத்து, என்னுடைய படிப்பைப்பற்றி விசாரித்தவர், திடீரென, “மெட்ரீரியலிஸ்ம்’ என்ற ஆங்கிலச் சொல்லுக்கு என்ன தமிழ்?” என்று கேட்டுவிட்டார். அவ்வளவு தூரம் எனது ஆங்கிலமோ சித்தாந்தமோ வளர்ச்சியடைந்திருக்கவில்லை. சிரித்துக்கொண்டே அந்தப் பெரியவர், ‘லோகாயதம்’ என்று சொல்லித் தந்துவிட்டு, என் கையில் பத்து ரூபா தந்து, “நாவலர் தெருவில் நாவலர் கோட்டம் என்ற புத்தகக் கடையில், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை தொகுத்த, ‘ஆங்கில - ஆங்கில - தமிழ் அகராதி’ இருக்கிறது் போய் வாங்கி வா” என்று சொல்லி அனுப்பினார். அந்த அன்பளிப்பை மறக்க முடியாது.

வெள்ளிக்கிழமை தோறும் யோகர் சுவாமி தரிசனத்துக்காக இலக்குமி வாசம் கடைக்கு முன் மக்கள் கூடுவதையும், நான் அங்கு போவதையும் அவதானித்த அம்பலவாண நாவலருக்கு, யோகரைத் தானும் தனிமையில் சந்திக்கவேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. ஒரு நாள் அவர் என்னிடம் ஒரு கடிதம் தந்து, அதை எப்படியாவது யோகர் சுவாமிகளிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்தார்.

வண்ணார்பண்ணையில் பிரசித்திபெற்ற ஆயுர் வேத வைத்தியர் கஸ்தூரி முத்துக்குமாரு என்ற பெரியவர் வீட்டில் அப்போது யோகர் சுவாமிகள் தங்கியிருந்தார். மிகுந்த தயக்கத்துடன் நான் அந்த வீட்டுக்குச் சென்று, கடிதத்தை அங்கிருந்த ஒருவரிடம் கொடுத்துவிட்டுத் திரும்பினேன். திரும்பி வெளியே வரும்போதுதான் சுவாமிகளே நேரில் வந்து, “வரச் சொல்லடா அவனை” என்று உத்தரவிட்டார். ஒரு பெரிய செயலைச் செய்த பெருமிதத்தோடு திரும்பினேன். பின்னர் அம்பலவாணர் யோகரைக் கண்டு பேசிய விவரம் ஒன்றையும் அவர் என்னிடம் சொல்லவில்லை.

பல ஆண்டுகளுக்குப் பிறகு கொழும்பில் இலங்கை வானொலியில் பணியாற்றிய சமயம், யோகர் கொழும்பிலே ஒரு நண்பர் வீட்டிலே தங்கியிருந்தபோது, என்னுடைய நண்பர் ஒருவர் அவரைத் தரிசிக்கவேண்டி, என்னையும் அழைத்தார். நண்பருக்கு யோகர் சுவாமியைத் தெரியும். அங்கே சென்றதும் சுவாமியவர்கள் எவ்வித அறிவிப்புமின்றி என்னைப் பார்த்து, “என்னடா தீவான்?” என்றார். எனக்கு தூக்கிவாரிப் போட்டது. நான் முன்பு எப்போதாவது யோகரை அணுகிப் பழகியதில்லை. நான் யாழ்ப்பாணத்தையடுத்துள்ள ஒரு தீவைச் சேர்ந்தவன் என்பதை யோகர் எப்படி அறிவார்? அந்த நிலை யில் எனக்கு விடை தெரியவில்லை. அவர் சொன்னார், “தீவான் தானேடா உலகத்தைக் கட்டியாள்கிறான்” என்று, பிரிட்டிஷ் ஆட்சியை ஞாபகப்படுத்தினார். அந்த எதிர்பாரா வாழ்த்தை நான் மறக்கவில்லை.

**“‘தன்னை அறி’ என்பது அவருடைய உபதேச வாக்கு. நான் பார்த்த காலத்தில் (1929) பெரிய மனிதர்கள், சட்டசபை பிரமுகர்கள், நீதிபதிகள், இதுக்கள், கிறீஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் எல்லோரும் இவரை தரிசிப்பார்கள். அந்த நாளில் சுப்ரீம்கோட்டு நீதிபதி அக்பர் என்ற இஸ்லாமியர் அடிக்கடி யோகரைத் தரிசிக்க வருவார். பிற்காலத்தில் அவருடைய ஆப்த வாக்கியங்களை, கவிதை வடிவில், ‘நற்சிந்தனை’ என்ற பெயரில் அடியார்கள் தொகுத்து நூலாக வெளியிட்டிருக்கிறார்கள்.”**

# 57 ஆண்டுகள் பின்னோக்கி...

## செ.வே.காசிநாதனின் 'ஈழநாடு' அனுபவங்கள்:

**"கே.சி.தங்கராசாவுக்கு இந்தியாவிலிருந்து வெளிவரும் 'ஹிந்து' நாளிதழின் தரத்தில் 'ஈழநாடு' வெளிவரவேண்டும் என்ற பெருங்கனவிருந்தது. அறுபதுகளில் வடக்கின் தமிழ் அரசியலின் இலட்சிய நாடாக இஸ்ரேல் திகழ்ந்தது. 'ஈழநாடு ' அக்காலத்தில் ஒரு நாலு பக்க இஸ்ரேலிய அனுபந்தத்தையே வெளியிட்டிருந்தது."**

எழுத்தாக்கம்: **மு. நித்தியானந்தன்**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 30 ஆண்டுகள் மெய்யியல் விரிவுரையாளரா கப் பணியாற்றி தற்போது, அவுஸ்திரேலியாவில் வாழும் கலாநிதி செ.வே.காசிநாதன் ஒரு பத்திரிகையாளராக தனது வாழ்க்கையை ஆரம்பித்திருக்கிறார் என்பது வியப்பை அளிக்கக்கூடும். ஆனால், அறுபதுகளின் ஆரம்பத்தில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் தமிழ்ப் பத்திரிகை உலகம் எப்படி இருந்தது என்பதைப் பேசவல்லவர் காசிநாதன். கூட்டிக்கழித்துப்பார்த்தால், 'வீரகேசரி'யிலும் 'ஈழநாட்டி'லும் ஓராண்டு காலம் காசிநாதன் வேலை பார்த்திருக்கிறார்.

லண்டனிலிருந்து அவுஸ்திரேலியாவில் காசிநாதனுடன் தொடர்பு கொண்டு, அவரது பத்திரிகை உலக அனுபவங்களைப்பற்றி நான் கேட்டபோது, அவர் விபரித்த கதைகள் வரலாற்றுப் பதிவுக்குரியவை. அவர் வாய்விட்டுச் சிரித்தவண்ணம் சொன்னவை, 'சீரியஸா'கச் சொன் னவை, கவலையோடு சொன்னவை என்று, அவை பல தளங்களில் விரிந்தன.

பேராதனைப் பல்கலைக்கழ கத்தில் மெய்யியலைச் சிறப்புப் பாடமாகப் பயின்று இறுதிப் பரீட்சை எழுதிவிட்டு, பரீட்சைப் பெறுபேறுகளுக்காகக் காத்திருந்த நேரத்தில் காசிநாதன் 'வீரகேசரி'யில் இணைகிறார். அப்போது வீரகேசரியில் முகாமையாளராக இருந்த கேசவனுக்கு பத்திரிகை பற்றி எதுவும் தெரியாது. அவர் ஒரு கணக்காய்வு நிறுவனத்தை நடத்தியதன்பேரில், வீரகேசரியின் கணக்காய்வாளராக இருந்து, பின் வீரகேசரியின் திசைப் போக்கையே மாற்றுபவராக பலம் கொண்டார். வறுமையும், வறுமையோடு சேர்ந்த நிர்வாகமும் என்று, மிகக்குறைந்த சம்பளத்தில் பத்திரிகையாளர்களை வேலைக்கமர்த்தி, நினைத்த நேரத்தில் யாரையும் வேலையிலிருந்து கழற்றிவிடும் நுட்பத்தில் கேசவன் கைதேர்ந்தவர். பம்பாயிலிருந்து வரும் மெல்லிய 8 முழம் வேஷ்டிக்குப் பதிலாக, மிக மலிந்த - தடித்த 4 முழம் வேஷ்டியை தீபாவளிப் பண்டிகையின்போது பத்திரிகையாளர்களுக்கு வழங்கும் கேசவனின் சிக்கனப் புத்தியைப் பார்த்து காசிநாதன் சிரித்திருக்கிறார்.

வீரகேசரியில் இருந்த காலத்தில்தான் அன்ரன் பாலசிங்கம் (பின்னாளில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர்), பெரி. சுந்தரலிங்கம் ஆகியோர் காசியின் நெருங்கிய நண்பர்களாயினர். உயர் கல்வி குறித்த தேடலும் ஆர்வமும் மிகுந்தவராக அன்ரன் பாலசிங்கம் திகழ்ந்ததை காசிநாதன் நினைவுகூருகிறார். பெரி. சுந்தரலிங்கம்போன்று செயல் துடிப்பும், ஆற்றலும், எதனையும் செய்து முடிக்கும் திட்பமும் நிறைந்த ஒருவரை நான் கண்டதில்லை என்று காசிநாதன் வியந்து போகிறார்.

அந்த காலத்தில் வீரகேசரியில் நடைபெற்ற இரண்டு வேலை நிறுத்தங்களால் வீரகேசரி மோசமான பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்நோக்கியது. இந்த வேலைநிறுத்தங்களுக்கு கேசவனின் அடாவடித்தனமான நடவடிக்கைகள்தான் காரணம் என்கிறார் எஸ். எம். கார்மேகம்.. பத்திரிகையின் விற்பனையை அதிகரிக்க, சி. பா.ஆதித்தனின் 'தினத்தந்தி' பாணியைப் பின்பற்ற வீரகேசரி முனைந்தமையை காசிநாதன் நினைவு கூர்கிறார். ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளரின் நாவல் ஒன்று 'தினத்தந்தி' பாணியில் திருத்தப்பட்டு அவ்வாறு வெளியானது. இலட்சிய எழுத்தாளர் என்று தான் கருதியிருந்த எழுத்தாளர் அதற்கெதிராகக் கிளர்ந்தெழுவார் என்று தான் நினைத்திருந்த நேரத்தில், அந்த எழுத்தாளர் அதனைக் கண்டுகொள்ளவே இல்லை என்கிறார் காசிநாதன்.

இந்நிலையில்தான், 'ஈழநாடு' பத்திரிகையின் முதல்வராகத் திகழ்ந்த கே. சி. தங்கராஜா, காசிநாதனை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'ஈழநாடு' வார இதழுக்காக பணியாற்றுமாறு கோரி, காசிநாதன் 'ஈழநாடு' பத்திரிகையில் இணைகிறார். இதேநேரத்தில், வீரகேசரியிலிருந்து வெளியேறிய கே. பி. ஹரன், கோபாலரத்தினம், முருகையா, போர்மன் நாராயணசாமி ஆகியோர் 'ஈழநாடு' பத்திரிகையில் இணைந்தமை, அப்பத்திரிகைக்கு பெரும் பலம் சேர்த்தது என்றே கூறவேண்டும்.


கே.சி.தங்கராசாவுக்கு இந்தியாவிலிருந்து வெளிவரும் 'ஹிந்து' நாளிதழின் தரத்தில் 'ஈழநாடு' வெளிவரவேண்டும் என்ற பெருங்கனவிருந்தது. அவருக்கும், அவரோடு இணைந்திருந்த கல்வியாளர்களுக்கும் உயர்ந்த தரத்தில் ஒரு தமிழ்ப் பத்திரிகை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரவேண்டும் என்ற பெரும் லட்சியம் இருந்தது. 'இலங்கை அரசியல் விடுதலையடைந்து, ஜனநாயக ஆட்சியிலே தமிழர்கள் உள்ளிட்ட சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளுக்கு ஆபத்து ஏற்படவும், நாட்டின் ஒற்றுமையும் முன்னேற்றமும் தடைபட்டு, அமைதியும் குலைந்துள்ள நிலையில் யாழ்ப்பாணத்திலே ஒரு தமிழ்ப்பத்திரிகை ஆரம்பித்து , சிறுபான்மை சமூகங்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவும், ஒற்றுமையைப் பலப்படுத்திப் பல வகையாலும் நாடு முன்னேறவும் பணியாற்றவேண்டியது அவசியம் என்பதை உணரலானேன்' என்று, 'ஈழநாடு' ஸ்தாபன நிர்வாகியாகவிருந்த கே. சி. தங்கராசா ஒரு சந்தர்ப்பத்திலே கூறியிருப்பதை இங்கு நோக்குவது பொருந்தும்.

கலைப்புலவர் நவரத்தினம், ஏ. இ. தம்பர், ச.அம்பிகைபாகன், கா. வைரமுத்து, து. சீனிவாசகம், மு.கதிரவேலு, கே.குமாரவேலு ஆகியோருடன் 'ஈழநாடு' பத்திரிகைபற்றி கே.சி.தங்கராசா அவர்கள் அடிக்கடி கூடிக்கதைத்து, வாதித்து வந்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தின் பெருமைமிகு புலமையாளர்கள் இந்தப் பத்திரிகையின் உருவாக்கத்தில் பங்களித்திருக்கிறார்கள். ஈழநாட்டில் பணியாற்ற தான் யாழ்ப்பாணம் சென்றபோது, தனது நண்பர் டாக்டர் நந்தியுடன் தங்கியிருந்தது குறித்தும், அவர் தனக்கு கலைப்புலவர் நவரத்தினம், கனக. செந்திநாதன், கே. டானியல் ஆகியோரை அறிமுகப்படுத்தியதையும், பத்திரிகையாளர்களுக்கு இந்த இலக்கியத் தொடர்பு அவசியம் என்று கருதப்பட்ட நிலையையும் காசிநாதன் நிதானமாக நினைவு கூர்கிறார்.

'ஈழநாடு' இதழின் வாரப்பதிப்பை காசிநாதன் பொறுப்பெடுத்துச் செய்வார் என்று கே.சி.தங்கராசா கருத்தியிருந்திருக்கக்கூடும். 'இந்த அதிகாரம். பொறுப்பு, பதவி போன்ற எதிலும் நாட்டமில்லாத பிள்ளை இது' என்று கண்டுகொண்ட தங்கராசா, காசிநாதனை ஒரு மாத காலத்திற்குள்ளேயே, கொழும்பிலே பொறுப்பான வேலைகள் உண்டு என்று, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு அழைக்கிறார்.

அப்போது, பம்பலப்பிட்டியில் சரஸ்வதி மண்டபத்தில் அமைந்திருந்த இரண்டு அலுவலக அறைகளே 'ஈழநாடு' அலுவலமாக இயங்கியது. ஓர் அறை தனது தங்குமிடமாகவும், மற்றைய அறை அலுவலமாகவும் இயங்கியது என்கிறார் காசிநாதன். கொழும்பிலிருந்து மிகப்பிந்திய செய்திகளை உடனுக்குடன் அனுப்பி, வேறெந்தத் தமிழ்ப் பத்திரிகைக்கும் முந்தி செய்திகளை வெளியிடும் வாய்ப்பு அப்போது ஈழநாட்டிற்கு இருந்திருக்கிறது. தான் தனியனாக இல்லாமல், அப்போது வீரகேசரியில் பணியாற்றிக்கொண்டிருந்த அன்ரன் பாலசிங்கமும் பெரி. சுந்தரலிங்கமும் நட்பு கருதி தன்னுடன் இணைந்து, 'ஈழநாடு'க்காக வேலைசெய்ததை காசிநாதன் மிகுந்த ஆதூரத்துடன் நினைவு மீட்கிறார்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு செய்திகளை அனுப்புவதானால் தபால், தந்தி திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு, 'ட்ரங்க் கோல்' பதிவு செய்து தொடர்பு கிடைத்தால்தான் சாத்தியம். அப்போது



இந்த அலுவலகங்களிலே பணியாற்றிய இளைஞர்கள் 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகத்திற்கான தந்தித் தொடர்பு என்றதும் உடனடியாகவே தொடர்பினை ஏற்படுத்தி, ,முழுமையாக செய்தி அனுப்பும்வரை தொடர்பினை நீடித்து உதவியிருக்கிறார்கள். அக்காலத்தில் பத்திரிகையாளரின் பணி என்பது, ஆங்கிலச் செய்திகளை தமிழுக்கு மொழிபெயர்ப்பதுதான். அத்துடன், ஈழநாட்டுக்கான விளம்பரங்களை கொழும்பின் முக்கிய வர்த்தக நிறுவனங்களுடன் பேசிப் பெறுவதும் காசிநாதனின் பொறுப்பானது. அப்போது பிரபலமாகவிருந்த **Parker Ball Point** பேனைகளில் 'ஈழநாடு' பெயர் பொறித்து, வணிக நிறுவனங்களுக்கு வழங்கி, விளம்பரம் சேகரிக்கும் திட்டத்தை கே. சி. தங்கராசா கொண்டிருந்தார். **Grants Advertising Company** மேலாளராகவிருந்த மாசிலாமணி போன்றோரும் **CFT Engineering Company, OPAL Recorder** போன்ற நிறுவனங்களும் ஒத்தாசை தந்திருக்கின்றன.**Nestle's** ஸ்தாபனத்தின் சார்பில் மேலாளராகவிருந்த கனகசபை அவர்கள் தங்களது விளம்பரம் அச்சில் சரியாக வரவில்லை என்று குறைப்பட்டதையும் காசிநாதன் நினைவு மீட்கிறார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நாடு தழுவிய சத்தியாக்கிரகப் போராட்டத்தின்பின் தமிழ் மக்கள் மத்தியில் என்றுமில்லாத தமிழ் உணர்வு அக்காலகட்டத்தில் மேலோங்கியிருந்தது. தங்கள் தேசத்தை, உள்ள வளங்களைக்கொண்டு பரிபாலிக்கலாம் என்ற கருத்தும் வலுப்பட்டிருந்தது. வரண்ட மண்ணில் இஸ்ரேல் வளர்ச்சி கொண்டிருப்பது தமிழ் அபிமானிகளுக்கு ஓர் ஆதர்சமாய் அமைந்தது. தமிழரசுக்கட்சி இஸ்ரேலுடன் நல்லுறவு கொண்டிருந்தது. அறுபதுகளில் வடக்கின் தமிழ் அரசியலின் இலட்சிய நாடாக இஸ்ரேல் திகழ்ந்தது. 'ஈழநாடு ' அக்காலத்தில் ஒரு நாலு பக்க இஸ்ரேலிய அனுபந்தத்தையே வெளியிட்டிருந்தது.

ஈழநாடும் போதிய வளங்கள் இல்லாத நிலையில் நஷ்டத்தில்தான் இயங்கிக்கொண்டிருந்தது. சில சமயங்களில் கே. சி. தங்கராசா தனது சொந்த சம்பளத்திலிருந்து பத்திரிகையாளருக்கான மாதச் சம்பளத்தைக் கொடுத்திருக்கிறார்.

உயர்ந்த லட்சியமும் சிறந்த பத்திரிகா தர்மமுமே 'ஈழநாட்டி'ன் உயிர்நாடியாக அமைந்தது.

அரசாங்க கரும மொழித்திணைக்களத்தில் மொழி பெயர்ப்பாளராக காசிநாதனும், இ. முருகையனும் தெரிவுசெய்யப்பட்டு , காசிநாதன் 'ஈழநாட்டை' விட்டு விலக நேர்ந்தபோது, அது கே.'சி. தங்கராசாவுக்கு பெரும் மனக்கிலேசத்தை ஏற்படுத்தியது.

விதியின் கரங்கள் எழுதி எழுதி மேற்செல்லும்.!



**கலாநிதி பொன். பாலசுந்தரம்**
**அதி சிரேஷ்ட பத்திரிகையாளர்**




> **பத்திரிகையின் பெயரே 'ஈழநாடு'. இவர்களுடைய உள் நோக்கம் புரிகிறதா, ஈழக் கோரிக்கைக்கு இதுவும் அத்திவாரம்' எனப் பொருள்பட, பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவர் ஆவேசமாகவே பேசினார். அப்போது அதற்குப் பதிலளித்த அமைச்சசர் திரு. பிலிப் குணவர்த்தனா, "திரு. தங்கராஜா நேர்மையான, கண்ணியமான ஒரு மனிதர்" என்று மட்டும் கூறி அமர்ந்துவிட்டார்.**
>
> **பாராளுமன்றத்தில் தேசிய பத்திரிகைகளான 'வீரகேசரி', 'தினகரன்' பத்திரிகைள்பற்றி எவரும் பேசாதபோது, 'ஈழநாடு' பத்திரிகைக்கு அங்கீகாரம் கிடைத்திருப்பதாகக் கூறி, பாராட்டிய பெருமை உடுவில் எம். பி. தர்மலிங்கம் அவர்களுடையது.**



# உயர்ந்த மனிதர் உயர்ந்த சிந்தை!

இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்த மகாத்மா காந்தியின் சுதந்திர தாகம் இந்தியாவுடன் உறவாக இருந்த அண்டை நாடுகளிலும் பரவி இருந்தது. இனம், மதம், மொழிக்கும் அப்பாற்பட்ட இளைஞர்கள், அறிஞர்கள், புத்திஜீவிகள், உழைப்பாளிகள் உள்பட பலரும் காந்தி தத்துவத்தால் உந்தப்பட்டனர்; ஈர்க்கப்பட்டனர். இலங்கையிலும் இன, மொழி வேறுபாடின்றி அதாவது, பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனம் என்ற வேறுபாடின்றி, இந்தியாவின் சுதந்திர போராட்டத்திற்கு குரல் கொடுத்த னர். இலங்கையில் வலுப்பெற்றிருந்த இடதுசாரிகளான சமசமாஜக் கட்சியினரும், கம்யூனிஸ்ட் கட்சியினரும் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு மறைமுக, தீவிர ஆதரவளித்து வந்தனர். இதனால், இந்திய சுதந்திரப் போராட்டதில் பங்குபற்றிய தியாகிகள் பலருடன் இலங்கையர் பலர் மறைமுக உறவும் கொண்டிருந்தனர்.

காந்தியின் 'வாரிசுகள்' எனப் பலர் இருந்தனர். அவர்களில் ஒருவர் ஜயப்பிரகாஷ் நாராயண்; காந்திஜி யின் மதிப்பை பெற்றவர். ஜயப்பிரகாஷ் நாராயணினால் இலங்கையில் ஈர்க்கப்பட்டு, உந்துதல் பெற்றவர் பெரியார் திரு கே. சி. தங்கராசா. தமது இனப் பற்றை ஈழ மண்ணில் 'ஈழநாடு' என்னும் பத்திரிகைமூலம் ஈழ மக்களுக்குச் சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

அன்பு, அமைதி, அடக்கம், நட்பு, எளிமை, பண்பு, பரிவு, உபசரிப்பு, பரோபகாரம் ஆகிய வள்ளுவர் கூற்றின் இலக்கணமாக, எல்லா உள்ளங்களாலும் மதிக்கப்பட்ட பெரியார் திரு. கே. சி. தங்கராசா, நெஞ்சிருக்கும் வரையில் தமிழினத்தின் நினைவில் நிறைந்திருப்பார்.

திரு. தங்கராசா அவர்கள் ஒரு நிர்வாக திறமையாளராகவும், ஆலோசகராகவும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை தவறாத நிர்வாக அதிகாரியாகவும் ஆட்சியாளர்களினால் கணிக்கப்பட்டவர், மதிக்கப்பட்டவர். எத்துறையிலுமே ஆட்சித்திறன் மிக்கவர். ஆட்சியாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினராக இருந்தாலும் சரி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினராக இருந்தாலும்சரி, இவரின் நிர்வாகத் திறமைக்கும், நேர்மைக்கும் மதிப்பளித்தே வந்திருக்கிறார்கள்.

பாராளுமன்றத்தில் சக்திவாய்ந்த தலைவர்களாக மதிக்கப்பட்ட எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, டாக்டர். என். எம். பெரேரா, பீற்றர் கெனமன், பிலிப் குணவர்த்தனா போன்றவர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒருவராக விளங்கியவர் பெரியார் தங்கராசா என்பதை இங்கு பதிவு செய்வதில் பெருமை அடைகிறேன்.

நான் 'வீரகேசரி', 'தினகரன்' ஆகிய இரு பத்திரிகைகளிலும் பாராளுமன்ற நிருபராக பல வருடங்கள் பணிபுரிந்த காலத்தில், பட்ஜட் விவாதங்களின்போது அரச கூட்டுத் தாபனங்களின் நிர்வாகிகள்மீது பல புகார்களை எம். பிக்கள் கொண்டுவருவதை அறிவேன். ஆனால், திரு. தங்கராசா அவர்கள் வாழைச்சேனை காகித உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியில் இருந்தவர். அவர்பற்றிய புகார்கள் எதுவும் எவராலும் எழுப்பப் பட்டதாக என் ஞாபகத்தில் இல்லை. இவரது நிர்வாகத் திறனுக்கும், நேர்மைக்கும் அரச கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் மதிப்பளித்தனர். இவரது தலைமையில் இருந்த வாழைச்சேனை காகித உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக மான்ய நிதி ஒதுக்கீட்டுக் கோரிக்கை, வாக்கெடுப்பின்றி பாராளுமன்றத்தில் நிறைவேறுவது இதற்கு சான்றாகும்.

### பாராளுமன்றத்தில் தங்கராஜரும் ஈழநாடு பத்திரிகையும்

'பத்திரிகையின் பெயரே 'ஈழநாடு' இவர்களுடைய உள்நோக்கம் புரிகிறதா, ஈழக் கோரிக்கைக்கு இதுவும் அத்திவாரம்' எனப் பொருள்பட, பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவர் ஆவேசமாகவே பேசினார். அப்போது அதற்குப் பதிலளித்த அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனா, "திரு. தங்கராஜா நேர்மையான, கண்ணியமான ஒரு மனிதர்" என்று மட்டும் கூறி அமர்ந்துவிட்டார்.

இப்படி ஓர் அரசியல் தலைவர் திரு. தங்கராசா அவர்களின் வாழ்வுக்கு பாராளுமன்றத்தில் புகழ் சூட்டியதை அங்கத்தவர்கள் பலரும் மலர்ந்த முகங்களுடன் ஆமோதித்தனர். பாராளுமன்றத்தில் இனவாதப் பேச்சாளர்களான கே. எம். பி. ராஜரத்னாவோ அல்லது பிரின்ஸ் குணசேகரா போன்ற எவராவது எதிர்க்குரல் கொடுப்பார்கள் என நான் எதிர்பார்த்தேன். ஆனால், எல்லோருமே அமைதியாக இருந்துவிட்டார்கள். திரு. தங்கராசா அவர்களின் அப்பழுக்கற்ற நேர்மை இவர்களை அமைதி பேணவைத்தது. பாராளுமன்றத்தில் தேசிய பத்திரிகைகளான 'வீரகேசரி', 'தினகரன்' பத்திரிகைள்பற்றி எவரும் பேசாதபோது, 'ஈழநாடு' பத்திரிகைக்கு அங்கீகாரம் கிடைத்திருப்பதாகக் கூறி, பாராட்டிய பெருமை உடுவில் எம். பி அமரர் தர்மலிங்கம் அவர்களுக்கு உரியது.

### ரைம்ஸ் பத்திரிகையில் ஜெனரல் மனேஜர் பதவி

வாலிப வயதில் இருந்தே அச்சகம், பதிப்புத்துறை, பத்திரிகை வெளியிடும் ஆர்வம் போன்றவற்றில் இவர் ஆர்வம் கெண்டிருந்தார். 'ஊக்கமது கை விடேல்' என்னும் பெரியோர் வாக்கு திரு தங்கராசா அவர்களது வாழ்க்கையின் ஏணிப் படிகள். அவரது கொழும்பு வாழ்க்கையும் கைகொடுத்தது. படிப்படியாக உயர்ந்து, கொழும்பிலிருந்து வெளிவந்த 'ரைம்ஸ்' பத்திரிகை ஸ்தாபனத்தின் நிர்வாகப் பகுதியின் பொறுப்பாளரானார். அச்சமயத்தில் ரைம்ஸ் நிர்வாகம் ஆங்கிலேயர் ஆதிக்கத்திலிருந்தது. காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களினால் நிர்வாகம் இலங்கையர் மயமானபோது, ரைம்ஸ் நிர்வாகம் அதன் தலைமைப் பொறுப்பாளராக திரு. தங்கராசா அவர்களை நியமித்தது. படிப்படியாக ரைம்ஸ் பத்திரிகைப் பிரசுரப் பொறுப்பும் இவர் நிர்வாகத்திற்குள்ளானது.

இப்படியாக, உயர்ந்த சிகரங்களைத் தாண்டிய அனுபவம் பெற்ற ஒருவர், தீர்க்கதரிசனத்தோடு 'ஈழநாடு' என்னும் பெயரில் பத்திரிகையை ஆரம்பித்துவைத்தமை பெரும் பெருமைக்குரியது.

### அவன் அருளாலே அவன் பணி புரிந்த சகோதரர்கள்

'மொழி அழிந்தால் இனம் அழிந்துவிடும் இனம் அழிந்தால் நாடே அழிந்துவிடும்' என்பது அரசியல் சித்தாந்திகள் சொல்லும் ஆரூடம். இதனால்தான் சிந்தனையாளர்கள் மொழிவளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துவருகிறார்கள். ஔவையாரின் ஆத்திசூடியிலிருந்து, வள்ளுவனின் குறள் வரையில் மொழி வளர்ச்சிக் கருவூலங்களாக இருப்பதை மறுப்பதற்கில்லை. இவரது பரம்பரையினர் சமய ஆனுட்டானங்களுடன் வாழ்ந்தனர். 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பார்கள். அதற்கமைய ஆலயங்களுக்கு கோபுரங்கள் அமைவதை விரும்பி, ஆலயங்களை அமைத்தவர்களுக்குத் துணையாக இருந்தனர். மக்கள் கோடி புண்ணியம் பெற்று வாழ, கோபுர தரிசனம் காலாதிகாலமாக துணையாக அமைகிறது.

யாழ்பாணத்திலும், கொழும்பிலும் தென் இந்திய நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வந்து, ஆலயங்கள் அமைத்துச் சமயம் வளர்க்கவும் குடியேறவும் உந்து சக்தியாக இருந்தவர்கள் இக் குடும்பத்தினர். செட்டியார் வம்சத்தினர் அமைத்த ஆலயங்கள் இதற்குச் சான்றாக எமது நாட்டில் உள்ளன.

தமிழ் நாட்டிலுள்ள சிதம்பர நடராசர் ஆலயத்துடனும் தங்கராசர் குடும்பத்தினருக்குத் தொடர்புகள் இருந்தன. சிதம் பரத்தில் இக் குடும்பத்தவர் ஒருவர் துறவறத்தில் வாழ்ந்து வந்துள்ளார். முத்துக்குமாரசுவாமி என்னும் இயற்பெயர் கொண்ட இவர், பின்னர் இலக்கண சுவாமிகள் என அழைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள பிரபல்யமான கதிரேசன் கோவில் நிர்வாகத்தில் இருந்த செட்டியார்கள் குடும்பத்தினர் தமிழ்நாடு திரும்ப தீர்மானித்தபோது, ஆலய நிர்வாகத்தில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. அச்சமயத்தில் திரு. தங்கராசா, அவரின் சகோதரர் டாக்டர் சண்முகரத்தினம் ஆகியவர்களிடம் ஆலய நிர்வாகம் சம்பந்தமான சில பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டதாகத் தெரிகிறது.

பல வருடங்களுக்கு முன்னர் நான் 'ஈழநாடு' பத்திரிகைக்கு கொழும்பிலிருந்து செய்திகளை அனுப்பும் பணியைச் செய்துவந்தபோது, திரு தங்கராசா அவர்கள் அக் கோவிலுடன் தொடர்பான 'பொக்கிஷ' சொத்துக்களை அடுத்த பொறுப்பாளர்களிடம் ஒப்படைத்துவிட்டு வருவதற்காக, அவசரமாக யாழ்ப்பாணம் சென்று திரும்பியமை எனக்குத் தெரியும்.

திரு. தங்கராசா தாம் சொல்வதை செயல்படுத்தும் ஒரு திறமைசாலி. முற்கூட்டியே கருத்துப் பரிமாறல்களின்மூலம் ஆய்வு செய்யும் பழக்கம் உடையவர். பத்திரிகையின் எதிர்காலம் பற்றியும், செயற்பாடுகள் சம்பந்தமாகவும் கருத்துப்பரிமாறல் செய்யும் குழு ஒன்று தங்கராசா அவர்களுக்குப் பக்கத் துணையாக கொழும்பில் இருந்தது. இக் குழுவில் இருந்தவர்களின் பெயர்களைப் பார்த்து சிலர் ஆச்சரியமுமுறலாம். சிலருடைய பெயர் வெளியில் தெரியாமல் பாதுகாக்கப் படிருந்தது. அதில் என்னுடைய பெயரும் ஒன்று. நான் அப்போது 'லேக் ஹவுஸ்' நிறுவனத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தேன்.

குழுவிலிருந்தவர்கள் திரு. கே. இராஜலிங்கம் - இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மூத்த தலைவர், 'மலையகக் காந்தி' என அழைக்கப்படுபவர். திரு. பொன்னா விக்னராஜா - சேர் கந்தையா வைத்தியநாதனின் மருமகன். உலக வங்கி நிபுணர். விடுமுறையில் வரும்போது இக் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்வார். திரு. கணபதிப்பிள்ளை - பெரும்பான்மை இனத்தவர்களின் வர்த்தக ஸ்தாபனமான 'சதம் ஹவுஸ்' கணக்காளர். பொன் பாலசுந்தரம் - பத்திரிகையாளர்.

திரு. இராஜலிங்கம் இக்குழுவினருக்கு திரு தங்கராஜா அவர்களையும் சேர்த்து, 'பஞ்சபாண்டவர் குழு' எனப் பெயரிட்டிருந்தார். எல்லோரும் திரு. தங்கராசா அவர்களின் நெருங்கிய நண்பர்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இக்குழு திரு. தங்கராசா அவர்களின் புல்லர்ஸ் வீதி 142ஆவது இலக்க வீட்டில் சந்திப்பதுண்டு.

இப்போது, 'ஈழநாடு' பத்திரிகை தொடர்ந்து வெளிவர முன்னிலை வகிப்பவர்கள் அமரர் டாக்டர் சண்முகரத்தினம் அவர்களின் புதல்வர் ராஜன், 'டான்' தொலைக்காட்சி (ஓம் ரி. வி) உரிமையாளர் எஸ். குகநாதன், பத்திரிகையாளர் எஸ். மகாலிங்கசிவம் (மாலி) ஆகியோர். யோகர் சுவாமிகள் ஆசீர்வாத வார்தைகளைத்தான் நான் நினைவில் கொள்கிறேன்:

**"ஏசுவார்கள், எரிப்பார்கள். எதற்கும் அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள், உண்மையாக எழுதுங்கள்!"**

■

# இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டின் இசை மரபு





கலாநிதி சுகன்யா அரவிந்தன்
முதுநிலை விரிவுரையாளர் - இசைத்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,

**“இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டினைப் பொறுத்தவரையிலே காத்திரமான ஒரு கலைவரலாற்றுப் பாதையினைக் கொண்டிருக்கின்ற பொழுதிலும் இவைபற்றிய பதிவுகள் எழுதப்படாமலும், எழுதப்பட்டவை பேணப்படாமலும், காலத்தினால் அள்ளுண்டவைகளும், மறைக்கப்பட்டவைகளுமென, பல சவால்களுக்கு மத்தியிலே பயணித்துக்கொண்டிருக்கின்ற ஒரு பண்பாட்டு மரபாகவே இன்றும் காணப்படுகின்றது.**

**தேவரடியார் மரபு, இசைவேளாள மரபு, ஓதுவார்மரபு, புராணபடன மரபு, கதாகாலேட்சப மரபு, இசை நாடக மரபென இவ்வாறாகப் பல தளங்களிலே இசைக்கலை மரபின் போக்கினைப் பார்க்கமுடியும்.”**

**அறிமுகம்**

ஒரு பண்பாட்டின் வரலாறானது உண்மையும் காத்திரமும் மிக்கதாக அமையவேண்டுமானால் அந்தச் சமூகம் கடந்துவந்த பாதைகள் பற்றிய பதிவுகள் ஒழுங்காகவும், முறையாகவும், பதியப்படுவதும், பேணப்படுவதும் மிகவும் அவசியம். இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டினைப் பொறுத்தவரையிலே காத்திரமான ஒரு கலைவரலாற்றுப் பாதையினைக் கொண்டிருக்கின்ற பொழுதிலும் இவைபற்றிய பதிவுகள் எழுதப்படாமலும், எழுதப்பட்டவை பேணப்படாமலும், காலத்தினால் அள்ளுண்டவைகளும், மறைக்கப் பட்டவைகளுமெனப் பல சவால் களுக்கு மத்தியிலே பயணித்துக் கொண்டிருக்கின்ற ஒரு பண் பாட்டு மரபாகவே இன்றும் காணப்படு கின்றது.

இலங்கைத்தமிழ்ப் பண்பாட் டின் சமூக மூலக்கூறுகளுள் இசை காத்திரமான ஓர் இடத்தினைப் பெற்றிருப்பது வர லாறு சுட்டுகின்ற உண்மை. இந்த இசை மரபானது காலத்திற்குக்காலம் பண்பாட்டு மாற்றங்களுக்கேற்ப தன்னைத் தக வமைத்துக்கொண்டது என்பது பற்றியும் வரலாற்று நிகழ்வுகள் நமக்குப் புலப்படுத்துகின்றன. இவ்வாறாக பண் பாட்டுச் சமூக வியல் மாற்றங்கள் இந்த சமூகக் கலைக்கூறுக்குள் நிகழ்ந்து வந்தபோதிலும் தன்னுடைய தனித்துவம் மாறாமல் பண்பாட்டைக் காத்த பெருமையை இசை பெற்றிருக்கின்றது.

இலங்கைத் தமிழ்ப் பண்பாடு சார்ந்த பல வரலாற்றுக் களங்களை யும் நிகழ்வுகளையும் யாழ்ப்பாணப் பண்பாடு கொண்டிருக்கின்றது என்றால் தவறில்லை.

இலங்கைத் தமிழர்தம் இசைக்கலை பற்றிப் பேசுகின்றபொழுது பல தளங்களிலே பார்க்கவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

**இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டில் இசை - வரலாறு - சுருக்கம்**

தேவாரப்பதிக காலம்தொட்டு இலங்கையிலே சைவமும், அதுசார் கலைகளும் சிறப்பாக வழக்கத்திலே இருந்திருக்கின்றன. கி. பி 18ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலம்வரை இருந்த தமிழ்இசை மரபு பற்றிய குறிப்புக்களின் ஆதாரங்கள் கிடைக்கப்பெறாத நிலை யிலும், செழிப்பான ஒரு மரபினை இசையானது தமிழ்ப் பண்பாட் டிலே கொண்டிருந்திருக்கின்றது என்பதுபற்றிப் புரிந்து கொள்ள முடிகின்றது. கி. பி 18ஆம் நூற்றாண்டிலிருந்துதான் இசைக்கலை பற்றியும் அதன் சமூக வகிபாகம் பற்றியுமான குறிப்புக்களை ஆதாரபூர்வமாகப் பெறக்கூடியதாக அறிந்துகொள்ள முடிகின்றது.

இந்த வகையிலே இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டின் இசைக்கலை மரபினைப் பல தளங்களிலே நின்று பார்க்கமுடிகின்றது. தேவரடி யார் மரபு, இசைவேளாள மரபு, ஓதுவார்மரபு, புராணபடன மரபு, கதாகாலேட்சப மரபு, இசை நாடக மரபென இவ்வாறாகப் பல தளங்களிலே இசைக்கலை மரபின் போக்கினைப் பார்க்கமுடியும். இத்தகைய மாற்றங்களுக்கும் ஊற்றுக்களுக்கும் சமூகத்தில் இசைக் கலை பெற்றுக்கொண்ட வகிபாகமே முதன்மைக் காரணம் என்று சொல்லமுடியும்.

**தேவரடியார் மரபு**

சோழராட்சிக்குட்பட்டிருந்த காலத்திலே ஆலய வழிபாட்டிற்கும் பணிகளுக்குமாக ஆக்கப்பட்ட ஒரு மரபிலிருந்து தேவரடியார் மரபு தழைத்தது. பின்னர் சமூகத்திலே இக் கலைமரபிலேற்பட்ட ஏற்புடைமையிலே ஏற்பட்ட தளம்பலானது இசை வேளாளமரபின் வளர்ச்சிக்குக் காரணமானது. தொடர்ந்து இசையும் நாட்டியமும் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டாலும், தேவார பாராயணமாக மீண்டும் ஆலயத்துள் நுழைந்தது. ஓதுவார் மரபு மற்றும் புராண படன மரபுகள் சமூகத்திலே முனைப்புப் பெற்றன. தொடர்ந்து மீண்டும் இசைக்கலையின் காத்திரமுணர்ந்த கலை ஆர்வலர்களின் பெருமுனைப்போடு, மீண்டும் போதனைக்குரிய துறையாக இசை தமிழ்ப் பண்பாட்டிலே முனைப்புப்பெற்றது. இது வரலாறு.

இந்த மாற்றங்கள்வழி தமிழ்ப் பண்பாடு பெற்றுக்கொண்டவை கள் என்று நோக்குகின்றபொழுது, ஆலய வழிபாட்டோடு ஆலயங்க ளுக்குள் நுழைந்த தேவரடியார் மரபானது பின்னர் ஆலயத்திலிருந்து வெளியேற்றப்பட்ட அதே சம யம், இசைவேளாள மரபின் முனைப்பு சமூகத்திலே முனைப்புப்பெற்றது. எனவே, சில தேவரடியார் மரபினைச் சார்ந்தவர்களும் வாழ் வாதாரம் கருதி இசைவேளாள மரபினுள் உள்வாங் கப்பட்ட செய்திகள் பற்றிய பதிவுகளை பேரா. சிவசாமியின் ‘ஈழத்தில் இசைமரபு’ என்கின்ற கட்டுரைமூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

**இசைவேளாள மரபு**

தமிழகத்திலிருந்து இலங்கைக்குப் பரவிய ஒரு தமிழ் இசைக்கலை வடிவமாக இசைவேளாள மரபினை நோக்கமுடிகின்றது. ஆரம்ப காலங் களிலே தமிழகக் கலைஞர்கள் மாத்திரம் நாட் டுக்கோட்டைச் செட்டிமார்களது ஆதரவிலே கலைப்பணிக்காக இலங்கை வந்து போக, அடுத்த நிலையிலே, இலங்கையிலிருக்கும் இசைக் கலை ஞர்கள், மற்றும் இசைக் கலையிலே ஆர்வம் கொண்டவர்களும் தமிழகக் கலைஞர்களோடு இணைந்து கலைப்பணியாற்றத் தொடங்கினர். பின்தொடர்ந்த காலங்களிலே தமிழகத்திலிருந்து வருகைதந்த கலைஞர்கள் இலங்கையிலே தங்கள் வாழ்வைத் தொடர்ந்த நிலையிலும், இலங்கைக் கலைஞர்கள் தனித்து இந்தப்பணியைத் தொடர்ந்த நிலையிலும் இம்மரபானது சமூகத்திலே பலம் பெற்றது என்றே சொல்லவேண்டும்.


**இசை நாடகமரபு**

இசைநாடக மரபும் இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டிலே காத்திரமான ஓர் இடத்தினை ஒருகாலத்திலே பெற்றிருந்தது. இசை வேளா ளர்களது பரம்பல்போலவே இந்தக் கலைவடிவ மும் இலங்கைத் தமிழ் சமூகத்தினுள் நுழைந்தது. இசை நாடகத்திலே கலைஞர்கள் இசைஅறிவில் சிறப்பு மிக்கவர்களாக இருத்தலவசியமாகக் கருதப்பட்டது. ஆனால், காலப்போக்கிலே அனைத் துக் கலைஞர்களிடமும் இந்த கலை, வித்துவமில்லா திருந்த பொழுதிலும் அந்தந்த மெட்டுக்களிலே பாடல்கள் பாடப்படவேண்டும், அவ்வாறு பாடு கின்ற பொழுதுதான் இந்தக் கலைப்படைப்பானது சிறப்பாக அமையும் என்கின்ற நிலைக்கு கலைஞர்கள் உட்படுத்தப்பட்டார் கள். பார்வையாளர்களும் அதனை நிறையவே எதிர்பார்த்தார்கள். பாடல்களே இங்கு மிக முக்கியம் பெற்றன. பேரா. கா. சிவத் தம்பி இந்தக் கலைவடிவம்பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது, ‘பாடலே அரங்காக’ என்கின்ற பதத்தினைப் பயன்படுத்துவதிலிருந்து இவ்வரங்கிலே பாடல் எத்துணை முதன்மை பெற்றிருந்தது என்பதனை விளங்கிக்கொள்ளமுடி கின்றது. எனவே, கலைஞர்கள் இசைநுட்பங்கள் ஆழமாகத் தெரிந்தி ராத போதும் அதே மெட்டுக் களிலே பாடல் களைப் பாட முயன்றனர். (குறிப்பாக இசை நாடகத்திலே பெரும்பாலும் பயன்பாட்டிலுள்ள ஆனந்தபைரவி, பைரவி, முகாரி, சாமா போன்ற இராகங்கள் - பிற்பட்ட காலங்களிலே இசை நாடகக் கலைஞர்களுக்கு இந்த இராகங்களை ஆலாபனை செய்வதிலே அதன் நுட்பங்கள் பற்றித் தெரிந்திராத போதும் இந்தக்கலையின் வெற்றிக்காக ‘அதேபோலப் பாடவேண்டிய அவசியம் ஏற்பட்டது.) இந்த நிலையிலே இசை, இலங்கைத் தமிழ்ச் சமூகத் திலே முதன்மைக் கலை யாக மாற்றம்பெற்றது. இந்த மாற்றத்தையே பேரா. சிவத்தம்பி ‘கர்நாடக இசையானது தனது காத்திரம் தெரியாமல் யாழ்ப் பாண சமூகத்துள் நுழைந்தது’ என்று தன்னுடைய ‘யாழ்ப்பாணம்- பண்பாடு- கருத்துநிலை’ என்கின்ற நூலிலே குறிப்பிடுவதையும் இங்கு எடுத்துக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

**பண்ணிசை, புராணபடனம், கதாப்பிரசங்கம்.**

சைவம் காத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருடைய காலத்திலே ஆலயங்களிலே ஆடலும் பாடலும் கேளிக்கைகளும் என்றவாறு வழக்கிலிருந்த ஆலய வழிபாட்டு நிகழ்வுகள், காலப்போக்கிலே சமூகப் பிறழ்வுக்கான நிலைமைகளை ஏற்படுத்திவிட, இசை, நடன நிகழ்ச்சிகள் ஆலயங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு புராணபடனம், கதாப்பிர சங்கம், பண்ணிசை போன்ற தமிழ் கலைகள் சமூகத்திலே முனைப்பு பெறத் தொடங்கின.

நல்லூர் த. கைலாயபிள்ளையால் தொகுக்கப்பட்ட ‘ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு’ என்னும் நூலிலே நாவலருடைய கூற்றாகக் காணப்படுகின்ற ஒரு குறிப்பு அந்த காலத்திலே இசைக் கலையானது தமிழ் சமூகத்தில் எத்துணைதூரம் செறிவுற்றிருந்தது என்பதற்கு ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டாக அமைகிறது. அந்த குறிப்பு வருமாறு: (XIV பக்கம் பார்க்க....)


இரண்டாம் ஆண்டில் காலடி பதிக்கும்
ஈழநாடு நாளிதழுக்கு
எமது நல்வாழ்த்துக்கள்
குட்டீஸ்
DARBAR
உடன்
Anchor
PediaPro


Sj
சாரங்கா நகை மாடம்
SARANGA JEWELLERY
No - 157/1, KASTHURIYAR ROAD, JAFFNA. TELEPHONE : 021 2226972, FAX : 021 2228869
சாரங்கா நகை மாடம்
SARANGA JEWELLERY
0212226927 | 0212228869


Ruhbins Hospital
இருதய நோயாளருக்கோர்
சுகவாழ்வு நற்செய்தி
கொழும்பு நகரின் பிரபல
இருதய சத்திரசிகிச்சை மருத்துவ நிபுணர்
Dr.M.S.முகுந்தன்
MBBS(Jaf), MD Surgery (Col), MRCS (Eng), MRCSEd
Consultant Cardiothoracic Surgeon
அவர்களது மருத்துவ சேவை
ருபின்ஸ் மருத்துவமனையில் வழங்கப்படுகிறது.
இருதய சத்திர சிகிச்சைக்கு முன்னரும் பின்னருமான வைத்தியரின் சேவைகள் மற்றும் சத்திர சிகிச்சைக்கான ஏற்படுகளை முற்பதிவு செய்து வைத்தியரை நேரில் சந்தித்து பெற்றுக் கொள்ள முடியும். அவசர ஆலோசனைகளை பெறவேண்டின் எமது வைத்திய சாலையிலிருந்து எமது வைத்தியர் ஒருவரின் உதவியுடன் நிகழ்நிலைச் சந்திப்பினை ஏற்படுத்தியும் (Online) ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளமுடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
Ruhbins Hospital (Pvt)Ltd.
021 226 1500 / 021 492 7232


இரண்டாம் ஆண்டில் காலடி பதிக்கும் ஈழநாடு நாளிதழ்
பத்திரிகைக்கு எமது நல்வாழ்த்துக்கள்
S.T. Parameswaran & Co
79, Stanley Road,
Jaffna.
எஸ்.ரி.பரமேஸ்வரன்
S.T.PARAMESWARAN
TRANSPORT SERVICE
NILUKSAN
NILUKSAN
All Island Transport
Customs Clearing & Forwarding Agents
Logistics & Transport
கொழும்பு - யாழ்ப்பாணம் பொதிகள் போக்குவரத்து சேவை
Mobile:- +94777306473 / +94772514988 /+94772514984
Phone:- +94112347210/ +94112445158/ +94212225504
Email:- director@stpleisure.com
Colombo Branch:-
200, Central Road,
Colombo-12
Jaffna Heritage Villa
240, Temple Road,
Nallur
+94212222411
Jaffna Heritage Hotel
195, Temple Road,
Nallur.
+94212222424
Port View City Hotel
132, Central Road,
Colombo-12
+94112445158


நல்
வாழ்த்துக்களுடன்
SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று
உங்கள் அனைத்து காப்புறுதி
தேவைகளுக்கும் அழைக்கவும்
357357
Sri Lanka Insurance
Sri Lanka Insurance
Sri Lanka Insurance Motorplus
www.srilankainsurance.com



# உயர்வு தந்த ஏணி



-புலவர் பூரணம் ஏனாதிநாதன்
முன்னாள் உதவி ஆசிரியர் - 'ஈழநாடு'

**"வடலூர் வள்ளலார் அருட்பெரும் ஜோதி தனிப்பெருங் கருணையின் அருட் பாடல் குறிப்பிடுவதுபோல, ஒருமையுடன் நினது திருவடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு, 'ஈழநாடு' நேர்காணல்களின்போது நான் பெற்றேன்.**

**பெண் மருத்துவ நிபுணரிடம் சென்றேன். மருந்துச் சீட்டில் விபரம் குறிப்பிடும்போது எங்கு வேலை செய்கிறீர்? என்று கேட்டார். 'ஈழநாடு' என்று சொன்னேன். அவருக்கு மிகவும் கோபம் வந்தது. 'வெளியே போ' என்று கத்தினார். நான் திகைத்துப் போனேன்."**



எனது பல்கலைக்கழகப் படிப்பு நிறைவு பெற்றதும் 'ஈழநாடு' செய்தித் தாளில் உதவி ஆசிரியர் பணி கிடைத்தது. செய்தித் தாளின் பிரதம ஆசிரியராக திரு. கே. பி. ஹரன் விளங்கினார். அவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்கவர். தெய்வீகப் பொலிவு மிக்க அவர், கருணை உள்ளம் கொண்டவர். அவர் தினசரியில் 'ஐயாறன்' என்ற பத்தியை எழுதி வந்தார். அது ஏராளமான 'ஈழநாடு' வாசகர்களின் உள்ளம் கவர்ந்தது. திரு. கோபாலரத்தினம் (கோபு) செய்தி ஆசிரியராகக் கடமை புரிந்தார். 'ஈழநாடு' நிர்வாகப் பொறுப்பாளராக சீனிவாசம் ஆசிரியர் செயற்பட்டார். திரு. சிவாநந்தன் அச்சக முகாமையாளராகச் செயற்பட்டார்.

ஆசிரியர் குழுவில் பத்துப்பேர் உதவி ஆசிரியர்களாகவும் இருவர் ஒப்பு நோக்காளர்களாகவும் பணிசெய்தனர். நான் ஒருவரே பெண் உதவி ஆசிரியை. பணிக்குச் சென்ற முதல்நாள் பிரதம ஆசிரியர் திரு.ஹரன் அவர்களைச் சந்தித்து ஆசிபெற்றேன். சமுதாயம் பயன்பெற செய்தித்தாள் செய்யவேண்டிய பணிகளை அழகாக எடுத்து உரைத்தார். செய்தித்தாள்கள் பத்திரிகா தர்மத்தின்படி இயங்கவேண்டும். அது சொல்லவேண்டிய கருத்துக்களைத் தெளிவாகக் கூறவேண்டும். செய்தி ஆசிரியர் சமுதாயத்தோடும், சமூகப் பிரச்னைகளோடும் இரண்டறக் கலப்பதுதான் அவர்களது பொறுப்பும் கடமையும் ஆகும். புதிய சிந்தனைகளை வெளியிடல் வேண்டும். உண்மைகளையே வெளியிடல் வேண்டும். நீதி வழங்கப் பாடுபடுதல் வேண்டும். பிழைகளை ஒப்புக்கொள்ளல் வேண்டும். இதுவே சிறந்த செய்தித்தாளின் உயர்ந்த கொள்கையாகும் என அன்று அவர் கூறிய செய்தித்தாளின் பணிகள் இன்றும் என் மனதில் ஒலிக்கிறது. வள்ளுவர் வாய்மொழி முக்காலத்திற்கும் பொருத்தமானதுபோல, இவ் அறிவுரையும் நேற்று, இன்று, நாளை என எக்காலத்திற்கும் செய்தித்தாள்களுக்கு பொருத்தமானது.

ஆசிரியர் குழுவில் செயற்பட்ட எஸ்.திருச்செல்வம், கோபாலரத்தினம் ஆகியோர் பின்னர் 'முரசொலி', 'ஈழநாதம்' போன்ற செய்தித்தாள்களை மன உறுதியுடன் நடாத்தினர். புலம்பெயர்ந்த பின்பும் அவர்கள் எழுத்தாற்றல் மேலும் வீறுகொண்டது. திரு. ஈ. கே. இராஜகோபால் லண்டனில் 'புதினம்' செய்தித்தாளை வெளியிடுகிறார். கனடாவில் திருச்செல்வமும் எழுத்தாற்றலில் முன்னிற்கிறார்.

'ஈழநாடு' செய்தித்தாளில் எனக்குப் பல பணிகள் தரப்பட்டன. மகளிர் வாசக வட்டத்தை ஊக்குவிக்க 'குடும்பச் சுடர்' என்ற பகுதியைச் செயற்படுத்தினேன். நவீன சிந்தனைகள், சமையல் குறிப்புகள், தையல், பின்னல், சித்திரம், சிறுகதை, கவிதை, அழகுக்குறிப்புக்கள் எனப் பலதரப்பட்ட செய்திகளை பெண் கள் ஆர்வத்துடன் அனுப்பினர். குடும்பச் சுடரைப் பாராட்டிப் பட்டங்கள் தந்தும் கௌரவித்தனர். புதிதாக நூல் வெளியிடுவோர் 'ஈழநாடு' நூலகத்திற்கு இரு புத்தகங்களை அனுப்பி வைப்பார்கள். அப்புத்தகங்களை விமர்சனம் செய்யும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது.

'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்து ஊறும் அறிவு'

என்றபடி, புத்தக விமர்சனம் எனது அறிவை மெருகுபடுத்த உதவிசெய்தது. இந் நிகழ்வுகளை 'பூரணி' என்ற புனைபெயரில் நிகழ்த்தினேன். முத்தமிழ் விழாக்கள், நாடகம் ஆகியவற்றிற்கும் அழைப்பிதழ் அனுப்புவார்கள். பொருத்தமானவற்றிக்கு போய்வந்து விமர்சனம் செய்வேன்.

வாரமலர் ஆசிரியராக தமிழ் வித்தகர் அ. செ. முருகானந்தம் செயற்பட்டார். வாரமலரில் என்னை தமிழ் இலக்கியங்கள் பற்றி எழுதும்படி உற்சாகப்படுத்தினார். அவரின் தூண்டுதலால் 'பைந்தமிழ் சோலை' என்ற தலையங்கத்தில், 'சங்ககாலம் முதல் இன்று வரை' தொடரில் பல கட்டுரைகள் எழுதினேன். வாரமலரில் தொடர்ச்சியாக இக் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. அ.செ.மு.அவர்கள் படிப்போரை ஈர்க்கும் வண்ணம் பொருத்தமான தலையங்கங்கள் சூட்டி, எனது ஆக்கங்களை தொடர்ந்து வரச்செய்தார். இந்த எழுத்து அநுபவம் 'நமது இலக்கியச் சொத்து' இலக்கிய நூலை வெளியிட எனக்கு உறுதுணை செய்தது. யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் என்னைச் சந்தித்தபோது, எழுத்துப் பணிகள் உங்களுக்கு காத்திருக்கின்றன, நீங்கள் கட்டாயம் நிறைய எழுத வேண்டுமென ஆலோசனை வழங்கினார்.

திரு.கா. சிவத்தம்பி அவர்களின் முன்னுரை குறிப்புடன் 'நமது இலக்கியச் சொத்து' வெளிவந்தது. நமது பாரம்பரிய பண்டிகைகள், விழாக்கள் குறித்தும் அவை வருகின்ற விசேட நாட்களில் கட்டுரைகள் எழுதுவேன், கவிதைகள் புனைவேன்.

அறுபதுகளில் ஈழத்திருநாடு அமைதியான நாடாக இருந்தது. யாழ்ப்பாணத்திலும் போக்குவரத்துக்கள் சீராக இயங்கின. பல தொழிற்சாலைகள் இயங்கின. அயல்நாடுகளில் இருந்து பல அறிஞர்கள் நம் நாட்டுக்கு வருகை தந்தனர். யாழ்ப்பாணம் வருகை தரும்போது அப் பெரியார்களை நேர்காணல் வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டது. வடலூர் வள்ளலார் அருட்பெரும் ஜோதி தனிப்பெருங் கருணையின் அருட் பாடல் குறிப்பிடுவதுபோல, ஒருமையுடன் நினது திருவடி நினைக் கின்ற உத்தமர் தம் உறவு, நேர்காணல் நிகழ்ச்சியின்போது நான் பெற்றேன்.

அன்று சமுதாய மேம்பாட்டுக்கு உழைத்த மங்கையர் பலரையும் நேர்முகம் செய்யும் சந்தர்ப்பமும் கிடைத்தது. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி. மங்கை யர்க்கரசி அமிர்தலிங்கம், திருமதி. தங்கம்மா நடராசா போன்ற பலரை நேர்காணல் செய்து, பத்திரிகையில் இடம்பெறச் செய்தேன்.

நடுநிலை நின்று செய்தித்தாள்கள் குறை நிறைகளைச் சுட்டிக்காட்டினால் பிழைகளைத் திருத்தாது, கோபம் கொள்பவர்களும் இருக்கிறார்கள். ஒருமுறை, பணியகத்தில் குறுகிய கால லீவு பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணம் பெரியாஸ்பதிரிக்கு மருந்து எடுக்க காது, மூக்கு, தொண்டை,க்கான பெண் மருத்துவ நிபுணரிடம் சென்றேன். மருந்துச் சீட்டில் விபரம் குறிப்பிடும்போது எங்கு வேலை செய்கிறீர்? என்று கேட்டார். 'ஈழநாடு' என்று சொன்னேன். அவருக்கு மிகவும் கோபம் வந்தது. 'வெளியே போ' என்று கத்தினார். நான் திகைத்துப் போனேன். பணியகத்திற்குத் திரும்பிச் சென்று செய்தி ஆசிரியராக இருந்த மகாதேவாவிடம் நடந்தவற்றை விபரித்தேன். அவ்விபரத்தை 'ஈழநாடு' முதற்பக்கத்தில் 'பெட்டி கட்டி' அவர் பிரசுரம் செய்தார். அடுத்த நாட் செய்தித்தாளில் அது வெளியாகியது. விபரம் அறிந்ததும், ஈழநாடு நிர்வாகம் வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டது. பெண் டாக்டர், தான்செய்த செயலுக்கு மன்னிப்புக் கோரினார். அடுத்த நாள் அச் செய்தியும் 'ஈழநாடு' முதல் பக்கத்தில் வெளிவந்தது. அப் பெண் டாக்டரிடம் மருந்து எடுக்க என்னைச் செல்லும்படியும், மருந்து எழுதியபின் செய்தித்தாளை அவரது மேசையில் வைத்துவிட்டு வரும்படியும் சில துணை ஆசிரியர்கள் வேடிக்கையாகச் சொன்னார்கள்.

கே .பி. ஹரன் ஐயாவின்கீழ் பணிசெய்தமை, பெரியோர்களின் சந்திப்பு, வாசக வட்டங்களின் அன்புப் பெருக்கு எல்லாம் என் உள்ளத்திற்கு நிறைவைத் தந்தன. பல்வேறு பணிகளில் புதிய திருப்பமாக என்னை ஈடுபடுத்திய 'ஈழநாடு' செய்தித்தாள் ஏணியாக, நின்று என் வாழ்க்கையை உயர்த்தியது.

'அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்'

■

உங்கள் துயரங்களைப் பகிர்ந்துகொள்ள
புதிய தளம்
துயர் .நெற்
THUYAR.NET
➤ மரண அறிவித்தல்
➤ நன்றி நவிலல்
➤ நினைவஞ்சலி விளம்பரங்கள்
துயர் .நெற் இல் பிரசுரமாகும் ஒவ்வொரு துயர்பகிர்வு விளம்பரங்களும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அதேவேளை
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் துயர்பகிர்வோம் நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகும்



# “ஹலோ... கொழும்பு அழைக்கிறது”

> யாழ்ப்பாணத்தில் அச்சாகி வெளியான 'ஈழநாடு'க்கு, தலைநகர் கொழும்புடன் செய்தித் தொடர்புகளுக்கான அன்றாட பரிவர்த்தனைக்குரிய தாகவிருந்த ஒரே சாதனம்தொலைபேசிதான். அந்த தொலைபேசி சேவை இப்படித் தானிருந்தது.

- மாலி

## காலம் எப்படி மாறியிருக்கிறது!

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு தொலைபேசி அழைப்புக்கு, சேவை சீராக இருந்தால், சாதாரணமாக எட்டு மணிநேரம் காத்திருக்க வேண்டும். ஆறு மணி அல்லது இரண்டு மணி நேரமாகவிருந்தால் அது விசேட வெகுமதி. சில வேளைகளில், ஓர் அரை மணி நேரத்துக்குள் கிடைத்தால் அது பேரதிருஷ்டம்தான். ஒவ்வொரு தடவையும் அழைப்புக்கு முயலகையில், 'அவுட் ஒவ் ஓர்டர்' என்று, எதிர் முனை யில் குரல் கேட்கக்கூடாது என்பது பிரார்த்தனையாயிருக்கும்.

இப்படி, இவ்வளவு காத்திருப்புடன் கிடைக்கும் அந்த அழைப்பில் 3 நிமிடங்கள் தான் பேசமுடியும்.

பாராளுமன்றத்தில் நல்லூர் எம். பி., மு. சிவசிதம்பரம் இந்த நிலைமைகளைச் சொல்லி, தொலைபேசி அழைப்பில் பத்திரிகைகளுக்கு முன்னுரிமை வழங்க அமைச்சரிடம் கோரினார். பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் பின்னர் பதவிவகித்த டி. பி. விஜேதுங்க அப்போது அஞ்சல், தொலைத் தொடர்பு அமைச்சராக விருந்தார். நல்ல மனிதர் என்று பெயர்பெற்ற விஜேதுங்க, ஆமோதிக்கின்ற விதத்திலேயே செவிமடுத்தார். 'பத்திரிகைகளுக்கு முன்னுரிமை உண்டு. எனினும் அது உறுதிசெய்யப்படும்' என்று பதிலும் அளித்தார். ஆனால், அப்படியொன்று இருக்கவுமில்லை அவர் எதுவும் செய்யவுமில்லை . எம். சிவசிதம்பரம் இடையிடையே நாசூக்கான சுவாரஸ்யங்களுடன் பேசுவார். தொலைபேசி சேவையின் தன்மையை சொன்னவர், 'தொலைபேசியில் பேசும்போது, தொலைபேசி இல்லாம லேயே நாம் கொழும்பில் இருந்து பேசுவது யாழ்ப்பாணத்துக்கு கேட்கும்' என்றார்!

1976இலிருந்து 1982 வரை, 'ஈழநாடு' கொழும்பு அலுவலகத்தில் செய்திகளுக்குப் பொறுப்பாகவிருந்தபோது இதுதான் நிலைமை.

இலங்கை அரசியலில் தமிழர்களின் உரிமைப் போராட்டம் சாத்வீக வழிமுறைகளிலிருந்து தீவிரவாத வழிமுறைக்கு மாற்றம் கண்ட ஒரு புதுக் காலம். இக் காலத்தை எதிர்கொண்ட அரசாங்கத்துக்கு, பாராளுமன்றத்திலும் முன்னெப்போதுமில்லாதவாறு, தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவரானார். நடக்கின்ற தீவிரவாத சம்பவங்கள் அனைத்தையும் பாராளுமன்றத்தில் எதிர்கொள்ளவேண்டியவராக அவர் இருந்தார். இலங்கை அரசியல் விவகாரம் சர்வதேச அளவிலும்கூட ஒரு கவனத்தை ஈர்க்கத் தொடங்கிய இக் காலம், இலங்கையில் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் ஒரு புதின ஆவலுக்கு நிர்ப்பந்தித்த காலம்.

அப்போது, தலைநகர் கொழும்புக்கு வெளியிலிருந்து வெளியாகிக்கொண்டிருந்த ஒரேயொரு தினசரிப் பத்திரிகை 'ஈழநாடு'. கொழும்பில் 'வீரகேசரி', 'தினகரன்', 'தினபதி' ஆகியன வெளிவந்துகொண்டிருந்தன. நிறுவன ரீதியில் இவை மூன்றுமே மிகப் பெரியன. ஆனாலும், யாழ்ப்பாணத்தில் இவை 'ஈழநாடு' உடன் போட்டியிட வேண்டிய நிலை இருந்தது. 'வீரகேசரி' இதில் பிரதானமானது.

யாழ்ப்பாணத்தில் அச்சாகி வெளியான 'ஈழநாடு'க்கு, தலைநகர் கொழும்புடன் செய்தித் தொடர்புகளுக்கான அன்றாட பரிவர்த்தனைக்குரியதாகவிருந்த ஒரே சாதனம் தொலைபேசிதான். அந்த தொலைபேசி சேவை இப்படித் தானிருந்தது. (கொழும்பு கோட்டையில் அமைந்த மத்திய தந்தி அலுவலகத்திலிருந்து 'ரெலெக்ஸ்' மூலம் ஆங்கிலத்தில் செய்தி அனுப்பலாமெனினும் அதன் சாத்தியப்பாடும் முழுமையானதாக இருக்கவில்லை.)

யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா கொலை வழக்கு விசாரணை, அவசரகால சட்டத்தின்கீழ் கைதான பாராளுமன்ற உறுப்பினர்கள் அ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், க. துரைரத்தினம் ஆகியோர் மீதான 'ட்ரயல் அற்பார்' விசாரணை, குட்டிமணி, தங்கத்துரை ஆகியோர் மீதான வழக்கு விசாரணை, 1977 கலவரம் தொடர்பான சன்சோனி ஆணைக்குழு விசாரணை, அணிசேரா நாடுகளின் ஐந்தாவது உச்சி மாநாடு, பொதுநலநாடுகள் மாநாடு, எலிஸபெத் மகாராணி, இந்திய பிரதமர் மொரார்ஜி தேசாய் போன்றவர்களின் விஜயம், பாராளுமன்ற விவாதங்கள் முதலான, தமிழ் மக்களின் விசேட கவனத்துக்குரிய இவையெல்லாவற்றிலும் 'ஈழநாடு' மற்றைய பத்திரிகைகளுடன் நிகராகவே நின்றது. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் 72 வழக்கறிஞர்கள் ஆஜரான 'ட்ரயல் அற் பார்' வழக்கில் ஜீ.ஜீ. பொன்னம்பலம், மு. திருச்செல்வம், வி. எஸ். ஏ. புள்ளநாயகம் ஆகியோரின் சட்ட நுணுக்கமான வாதங்களில் 'ஈழநாடு' தனித்த மெச்சுதலைப் பெற்றது.

### இது எப்படி நிகழ்ந்தது?

செல்லையா குமாரசூரியர் தபால் அமைச்சராகவிருந்ததில், கொழும்பு தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் கணிசமான அளவில் தமிழரான ஆண்கள், பெண்கள் பணிபுரிந்தார்கள். அழைப்புக்கு 'புக்' பண்ணும்போது, அழைப்பை ஏற்பவர் தமிழராக தெரிந்தால் 'ஈழநாடு' என்று விஷயத்தைச் சொல்லி, சற்று விரைவாக பெறவும், கூடுதல் நேரம் பேசவதற்கும் கேட்டுப் பார்ப்பதுண்டு. இது உண்மையில், பொதுவாக இரவு வேளைகளிலும் வார இறுதியிலும் நல்ல பலனைத் தந்தது. முகம் தெரியாமலேயே சிலர் நன்கு அறிமுகமானார்கள். 'ஈழநாடு' எண்ணிலிருந்து அழைத்தாலே போதும், பெரும்பாலும் விரைவில் கிடைத்துவிடும். அப்படி கிடைக்காவிட்டாலும், ஒரு சிலரைப் பெயர் சொல்லி, 'பணியில் இருக்கிறாரா, பேசலாமா' என்று வினவுவதுண்டு. அவர்கள் இல்லாத வேளைகளிலும் கூட, விடயத்தைத் தெரிந்து வைத்து, அவர்களின் சில சிங்கள நண்பர்களும் சில வேளைகளில் உதவுவார்கள்.

இதுதவிர, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறப்பு சலுகை உண்டு. 77 தேர்தல் காலம்வரை கொள்ளுப்பிட்டியில் எஸ். ஜே. வி. செல்வநாயகம் இல்லத்தில் அவருடைய தொலைபேசி ஒன்றுதான் வாய்ப்பாகவிருந்தது. எஸ். ஜே. வி. யின் செயலாளர் இராஜேந்திரம் நல்ல மனிதர். அது மாத்திரமல்ல, எஸ். ஜே. வி.யின் துணைவியாரும்கூட இதுவிடயத்தில் என்மீது மிகுந்தபரிவானவர். திரு இராஜேந்திரமே சொல்லி, ஆச்சரியப்படுவார்.

பழைய பாராளுமன்றத்தில், இப்போதுபோல, பாராளுமன்ற நிருபர்களுக்கு பெருமளவு வசதிகள் இருக்கவில்லை. எனினும், பிரதான பத்திரிகை நிறுவனங்கள் தங்களுக்கென்று தொலைபேசி வசதியை அங்கு வைத்திருந்தன. பாராளுமன்றத்தில் பாராளுமன்ற அமர்வு நாள்களில், சமகால பேச்சு மொழிபெயர்ப்பாளர்களுடைய அலுவலகத்தில், மானிப்பாய் எம். பி. தர்மலிங்கம் சில சமயங்களில் அழைப்பைப் பெற்றுத்தருவார். அதேவேளை, யாழ்ப்பாணம் 'ஈழநாடு' அலுவலகத்திலிருந்தும் அழைப்பு வந்தால், பேச்சு மொழிபெயர்ப்பாளர் ஒருவர், சபையினுள்ளே நிருபர்கள் கலரிக்கு வந்து தெரிவிப்பார். அப்படியொரு 'செல்லப் பிள்ளை'யாக 'ஈழநாடு' இருந்தது.

தேர்தலின் பின்னர், திரு அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானதும் பாராளுமன்றக் கட்டடத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகமும், 'சிராவஸ்தி'யில் அவருடைய உத்தியோகபூர்வ இல்லமும்.... எப்படிச் சொல்வது, சுதந்திரமான பயன்பாட்டுக்கு உரியவையாயின.

ஆனால், ஆசிரிய பகுதியில் யாழ்ப்பாணத்தில் இரவு நேர கடமையில் இருப்பவர்கள்தான் இந்தப் போட்டியில் பிரதான ஆட்டக்காரர்கள். வேகமாகவும், நிதானமாகவும் கச்சிதமாகவும் கிரகித்து புரிந்துகொண்டு, எந்த நிலைமையிலும் ஜமாய்த்துவிடுவார்கள். இடைநடுவே அழைப்பு துண்டித்துப்போய்விடுகின்ற சந்தர்ப்பங்கள் அநந்தம். வால் அறுந்துபோகும் எனினும், செய்தி முழுமையாக வெளிவரும்.

போட்டிதான் என்றாலும், 'வீரகேசரி' உள்பட, கொழும்பு பத்திரிகைகள் அனைத்தினதும் அநுசரணையுடனான நட்பு அவற்றின் ஆசிரிய பீடங்களில் இருந்தது.

'வீரகேசரி' புகைப்படப்பிடிப்பாளர்களில் ஒருவர் சந்திரபாலா, சிங்களவர். அரசாங்கம் தொடர்பான புகைப்படங்களை தகவல் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம். மற்றைய வேளைகளில் தேவையேற்படும்போது, சந்திரபாலாவிடம் ஏற்படுத்திக்கொண்ட ஒரு நட்பில், அவரிடமிருந்து பெற்றேன்.

ஒருமுறை புகைப்படம் ஒன்றைப் பெற அவரிடம் சென்றபோது, "மன்னிக்கவேண்டும் ஆசிரியருக்கு (திரு சிவப்பிரகாசம்) எப்படியோ தெரிந்துவிட்டது, கொடுக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்" என்றார்.

திரு சிவப்பிரகாசம் என்னில் அபிமானம் உள்ளவர்தாம். இருந்தாலும், இந்த விடயத்தில் அவர் தனக்கு நேர்மையாகவே நடந்திருக்கிறார் என்பதை நான் தெளிவாகவே உணர்ந்தேன்.

சில தினங்களில், புதிய எதிர்க்கட்சித் தலைவருடனான ஒரு சம்பிரதாயபூர்வ சந்திப்புக்காக இந்திய தூதர் பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கத்தைச் சந்தித்தார். புகைப்படக்காரர் ஒருவரைத் தேடவேண்டியதாயிற்று. புகைப்படம் எடுத்து, அதனைச் சிலமணி நேரத்தில் படமாகத் தரக்கூடிய ஒருவர் தேவை. யாரோ சொல்லி, மருதானையில் ஸ்ருடியோ வைத்திருந்த ஒருவரைப் போய்ப் பார்த்ததில் , உத்தரவாதத்துடன் ஒப்புக்கொண்டார்.

மறுநாள், பாராளுமன்ற அமர்வுக்கு முன்னதாக காலை 9.30 மணிக்கு சந்திப்பு. மதியம் 'உத்தரதேவி'யில் யாழ்ப்பாணத்துக்கு கொடுத்தனுப்பக்கூடிய விதத்தில் தந்துவிடுவேன் என்றார்.

குறித்த நேரத்துக்கு வந்துவிட்டார். பட்ஜட் விவாத காலம். படத்தை வாங்கி, புகையிரத நிலையத்தில் யாரிடமாவது கொடுத்தனுப்பிவிட்டு வரலாம் என்று புறப்பட்டேன்.

படம் தயாராகவே இருந்தது. வாங்கிப் பார்த்தேன். அமிர்தலிங்கம் ஜோராக இருந்தார். தூதர் எங்கே...? கேட்டேன்.

அமிர்தலிங்கத்தைத்தானே எடுக்கச் சொன்னீர்கள், என்றார். அப்போது நினைத்தேன், சிவப்பிரகாசம் ஜெயித்துவிட்டார் என்று. ■

**“தற்போது தமிழ் பாடச் சித்தி வீதம் எந்த மட்டத்தில் உள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். கடந்த 2019ஆம் ஆண்டு க.பொ.த சாதராண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கின் தமிழ் மொழிப்பாடச் சித்தி வீதம் 89.82 சதவீதமாகவுள்ளது. இது மேலோட்டமான பார்வையில் உயர்சித்திச் சதவீதமாக தெரிகின்ற போதும் சற்று ஆழமாகப் பார்க்கின்றபோது பின்னடைவான நிலையே என்பது புரியும். இப் பெறுபேற்றுச் சதவீதம் சிங்கள மொழிச் சித்திச் சதவீதத்தை விட குறைவானது என்பதற்கு அப்பால், தமிழ் மொழியில் எமது மாணவர்களின் பெறுபேறுகளை மேலும் நுணுகி ஆராயும் போது நாம் முன்னேறுவதற்கு இடமுண்டு என்பது புலனாகும்.”**

# வடக்கின் கல்வித் தரத்தை உயர்த்த தெருவெங்கும் தமிழோசை முழங்குவதே ஒரே வழி!

**இ.சர்வேஸ்வரா**
**விரிவுரையாளர், கல்வியியல்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



“இன்று, தொழிற் கல்வி உடனடியான தேவைகளில் ஒன்று. கலாசாரப் பயிற்சியின் அடிப்படையிலேதான் தொழிற் கல்வி அமையவேண்டும். இத்தனைக்கும் தொழில் வல்லுநர் நாட்டுக்குக் கண்ணின் மணி போன்றவர்கள். இவர்கள் மாத்திரமன்றி, கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள், நாட்டியக் கலைஞர்கள், இசை வல்லுநர்கள், தத்துவ ஞானிகள் எல்லோரும் நாட்டில் பெருகவேண்டும்.”

மேற்கண்ட பத்தி, ஈழநாடு பத்திரிகை 1959 பெப்ரவரி 11ஆம் திகதி வெளிவந்த போது, முதல் நாள் பத்திரிகையில் ஈழநாடு பத்திரிகையின் செல்நெறி எவ்வாறு அமையும் என்பது குறித்து வாசகர்களுக்கு ஈழநாடு தாபனத் தலைவர் அமரர் கே.சி.தங்கராசா அவர்கள் எழுதிய விளக்கவுரையின் ஒரு பகுதியாகும். அவ் விளக்கவுரை முழுமையும் இன்றும் பொருந்தத்தக்கதாகவுள்ளதில் ஒரு வகையில் வியப்பும் மறு வகையில் வேதனையும் மிகுகின்றது. ஈழத்தமிழர்களின் வாழ்வியல், அரசியல் ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தொழில் வாழ்வு ரீதியாகவும் பின்னடைவான நிலையில் உள்ளது எனவும் அவற்றை கட்டியெழுப்பவும் முன்னேற்றவும் ஈழநாடு தனது பங்களிப்பை நல்கும் என்பதை கருப்பொருளாகக் கொண்ட அவ் விளக்கவுரை இன்றும் பொருந்திவரும் காலப் பொருத்தம் என்பது, ஈழத்தமிழர்களின் வாழ்வில் முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லையெனும் துர்ப்பாக்கிய நிலையை எடுத்துக்காட்டுகின்றது.

இந்நிலையில் தமிழர்களின் கல்வி குறித்து 1959இல் ஈழநாட்டில் வெளிவந்த கருத்தியலை இன்றைய 2020 உடன் 61 ஆண்டுகள் கடந்து பொருத்தி நோக்குவதே இக்கட்டுரையின் நோக்காகும். குறிப்பாக 30 ஆண்டுகால போருக்குப் பின்னர் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணம் பின்னடைவான நிலையிலும் கிழக்கு மாகாணம் வடக்கை விட சற்று முன்னேற்றத்தைக் காண்பித்த போதும் அதுவும் கருதத்தக்க பின்னடைவு நிலையிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் தமிழர்களின் கல்வி முன்னேற்றம் குறித்தான பல்வேறு கருத்தாடல்களும் வாதப்பிரதிவாதங்களும் பல்வேறு பரப்புக்களிலும் தளங்களிலும் இடம்பெற்ற வண்ணமுள்ளன. இதன் பின்னணியில் சில சிந்தனைக் கிளறல்களை ஏற்படுத்தும் நோக்கில் இக் கட்டுரை வரையப்படுகின்றது.

முதலில் வடக்கு மாகாணம் கல்வியில் பின்தங்கியுள்ளது எனும் கருத்தியல் உண்மையானதா என்பது குறித்து தெளிவுற வேண்டும். மாகாண அடிப்படையிலான கல்வி பெறுபேறுகளின் தரப்படுத்தல் என்பது க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுகின்றது. க.பொ.த சாதாரண தரத்தை அடிப்படையாகக் கொண்ட தரப்படுத்தலிலேயே வடக்கு மாகாணம் தொடர்ந்தும் கடைநிலையாகிய ஒன்பதாவது நிலையில் உள்ளது. மாறாக க.பொ.த உயர்தரத்தில் கற்கைநெறிகள் தொடர்பான தனிப்பட்ட வரிசைப்படுத்தலில் வடக்கு முன்னிலை வகிப்பதும்குறிப்பிடத்தக்கது. 2019ஆம்ஆண்டுக.பொ.தசாதரண மற்றும் உயர்தரப் பெறுபேறு களின்அடிப்படையிலானதரபடுத்தல், அட்டவணைகளில் தரப்பட்டுள்ளது. அவற்றின் அடிப்படையில் இதனை புரிந்து கொள்ளலாம்.

| 2019ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலான மாகாண நிலைகள் | | |
|---|---|---|
| | மாகாணம் | பல்கலைக் கழக அனுமதித் தகமை பெற்றோர் (மூன்று பாடங்களில் சித்தியடைந்தோர் சதவீதம்) |
| 1 | வடமேல் | 63.95 |
| 2 | வடக்கு | 63.77 |
| 3 | மேல் | 62.53 |
| 4 | ஊவா | 60.25 |
| 5 | கிழக்கு | 59.82 |
| 6 | சப்பிரகமவ | 59.49 |
| 7 | தெற்கு | 58.77 |
| 8 | வடமத்தி | 58.27 |
| 9 | மத்தி | 57.33 |

எனவே, நாம் முதலில் ஒரு பொது முடிவுக்கு அல்லது சமூக நம்பிக்கைக்கு நம்மை தயார்ப்படுத்த வேண்டும். அதாவது வடக்கு மாகாணம் கல்வியில் பின்தங்கிய மாகாணம் எனும் மனப்பாங்கை மாற்றிக்கொள்ள வேண்டும். ஏனெனில், நம்பிக்கையற்ற மறைத்தன்மையான அதிர்வுகள் மேலும் பின்னடைவான நிலைகளையே தோற்றுவிக்கும். அவை நிலமையை மேலும் சிக்கலாக்குமேயன்றி முன்னேற்றகரமாக்க மாட்டாது.

ஆனால் வடக்குக் கல்விப் புலத்தில் முக்கியமாகக் கவனம் கொள்ளப்படவேண்டிய விடயப்பரப்புக்களில் எமது கவனத்தைக் குவிப்பதற்கும் எம்மைத்தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். கல்வித் துறை சார்ந்து பணியாற்றுகின்றவர் எனும் அடிப்படையில் கட்டுரையாளர் முன்வைக்கும் பிரதான விடயம் க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ் மொழிப் பாடத்தின் சித்திப் பெறுபேற்றுச் சதவீதத்தை சிங்கள மொழிப் பாடத்துக்கு நிகராக வைத்திருப் பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். இதனை சிங்கள மொழிப் பாடச் சதவீதத்துடன் ஒப்பிடாது தனியே தமிழ் மொழிப்பாடச் சதவீதத்தை 90 சதவீதத்துக்கு மேலாக பேணுவது எனவும் கொள்ள முடியும்.

| 2019ஆம் ஆண்டு சாதாரணப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலான மாகாண நிலைகள் | | |
|---|---|---|
| இல | மாகாணம் | க.பொ.த உயர்தரம் கற்க தகமை பெற்றோர் சதவீதம் |
| 1 | தெற்கு | 78.31 |
| 2 | மேல் | 76.00 |
| 3 | வடமேல் | 75.27 |
| 4 | சப்பிரகமுவ | 75.00 |
| 5 | வடமத்தி | 71.78 |
| 6 | மத்தி | 70.94 |
| 7 | கிழக்கு | 70.25 |
| 8 | ஊவா | 70.15 |
| 9 | வடக்கு | 67.74 |

தற்போது தமிழ் பாடச் சித்தி வீதம் எந்த மட்டத்தில் உள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். கடந்த 2019ஆம் ஆண்டு க.பொ.த சாதராண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கின் தமிழ் மொழிப்பாடச் சித்தி வீதம் 89.82 சதவீதமாகவுள்ளது. இது மேலோட்டமான பார்வையில் உயர்சித்திச் சதவீதமாக தெரிகின்ற போதும் சற்று ஆழமாகப் பார்க்கின்ற போது பின்னடைவான நிலையே என்பது புரியும். இப் பெறுபேற்றுச் சதவீதம் சிங்கள மொழிச் சித்திச் சதவீதத்தை விட குறைவானது என்பதற்கு அப்பால், தமிழ் மொழியில் எமது மாணவர்களின் பெறுபேறுகளை மேலும் நுணுகி ஆராயும் போது நாம் முன்னேறுவதற்கு இடமுண்டு என்பது புலனாகும். குறிப்பாக, தமிழில் அதிவிசேட சித்தி எனும் A சித்தி பெற்றவர்கள் வெறுமனே 11.5 சதவீதத்தினரே. பெரும்பாலான மாணவர்கள் C சித்தியினையே பெற்றுள்ளார்கள். அவர்களின் சதவீதம் 36.40 ஆகும். பரீட்சை எழுதிய மாணவர்களில் 10.17 சதவீதத்தினர் தமிழ் மொழியில் சித்தியடையத் தவறியுள்ளார்கள். தமிழ் மொழியில் சித்தியடையத் தவறுவது என்பது உயர்தரம் கற்பதற்கான அடிப்படை தகமையை இழப்பதாகும். இதனைவிட பெரும் ஆச்சரியம் தமிழில் A சித்தி பெற்ற மாணவர்களை விட ஆங்கிலத்தில் A சித்தி பெற்ற மாணவர்களின் சதவீதம் (13.29) வடக்கில் அதிகம். இப் பின்னணிகளின் அடிப்படையிலேயே தமிழ்மொழிப் பாடத்தின் சித்தி சதவீதத்தை உயர்த்துவது குறித்து சிந்திக்க வேண்டும் என்பதும் அதுவே வடக்கின் கல்விப் பாரம்பரியத்தை மீட்டெடுக்க நம் முன் இருக்கும் ஒற்றை வழி என்பதும், கட்டுரையாளரின் அசைக்க முடியாத நம்பிக்கை.

தமிழ் மொழிப்பாடத்தின் சித்திச் சதவீதத்தை உயர்த்துவது என்பது தனியே ஒரு பாடத்தின் சித்திச் சதவீதத்தை உயர்த்தும் பணியாக மட்டும் அமையமாட்டாது. மொழி என்பது ஒட்டுமொத்த பரீட்சைக்குமான பிரதான கருவி எனும் அடிப்படையில் மொழியில் ஏற்படும் முன்னேற்றம் ஒட்டுமொத்த பெறுபேறுகளிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

இக் கருத்தியலுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிட முடியும். 2019ஆம் ஆண்டு சாதாரண தரப்பரீட்சைகளில் வடக்கு மாகாணத்தில் 981 மாணவர்கள் கணிதம் மற்றும் தமிழ் பாடங்களில் சித்தியடைந்த போதும், மேலதிகமாக இன்னுமொரு பாடத்தில் சித்தியடைந்திருந்தால் அவர்கள் உயர்தரம் கற்க தகுதிபெற்றிருப்பார்கள் எனவும் இது நடந்திருந்தால் வடக்கு மாகாணம் தேசிய மட்டத்தில் ஐந்தாவது இடத்துக்கு முன்னேறியிருக்கும் எனவும், வடக்கு மாகாண கல்வித் திணைக்கள உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.ஆயவன் தனது பகுப்பாய்வு அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இந்த 981 மாணவர்களுள் பலர் சமய பாடத்திலோ அல்லது அழகியல் பாடங்களிலோ சித்தியடையத் தவறியிருக்கலாம். மாணவர்களிடம் மொழி சார் திறன்களான வாசித்தல், எழுதுதல், கிரகித்தல் போன்ற அவசியமான அடிப்படைத்திறன்களில் உள்ள பலவீனமே அவர்களின் கற்றலின் பலவீனமாக மாறுகின்றது.

இப்பலவீனம்வாழ்நாள்பலவீனமாக மாறி பல்கலைக் கழக கல்வியை நிறைவு செய்த பின்னர் வேலைவாய்ப்புகளுக்காக சந்திக்கும் போட்டிப் பரீட்சைகளிலும் எதிரொலிக்கின்றது. நாடாளவிய சேவைகள் உள்ளிட்ட உயர்பதவிகளுக்கான பல போட்டிப்பரீட்சைகளில் ஒருவரின் மொழியாற்றல் அவரது பரீட்சையின் வெற்றிகளில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. எனவே மொழித்திறனை விருத்தி செய்வதற்கான பிரதான உத்தியாக நம்முன் இன்று இருப்பது க.பொ.த சாதாரண தர தமிழ் மொழிப் பாடத்தின் சித்தி வீதத்தை தரமுயர்த்துவதும், அதில் உயர்பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களின் சதவீதத்தை உயர்த்துவதுமேயாகும்.

தமிழின் மொழிச் சித்தி வீதத்தை உயர்த்துவதற்காக வகுக்கப்படும் பல உத்திகள் பண்பாட்டு கலாசார மையப் பட்டவையாக அமையும். இது தமிழ்ச் சமூகத்தின் இருப்புக்கும் துணைசெய்யத்தக்கதாக அமையும். மொழிப் பற்று மிக்க மொழி சார் புலமைத்துவம்மிக்க தத்துவார்த்த அடிப்படையில் கருத்துருவாக்கம் செய்யும் ஆற்றல் மிக்க தலைமுறையொன்றின் தோற்றத்துக்கும் வழி செய்யும். தெருவெங்கும் தமிழோசை கேட்பதன் மூலமே இவையனைத்தையும் சாத்தியமாக்கலாம். இது குறித்துச் சிந்திப்போம்.

இதனைச்சாத்தியமாக்குவதன்மூலமே 1959ஆம் ஆண்டு ஈழநாடு முதல் பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்ட “இன்று, தொழிற் கல்வி உடனடியான தேவைகளில் ஒன்று. கலாசாரப் பயிற்சியின் அடிப்படையிலேதான் தொழிற்கல்வி அமையவேண்டும். இத்தனைக்கும் தொழில் வல்லுநர் நாட்டுக்குக் கண்ணின் மணி போன்றவர்கள். இவர்கள் மாத்திரமன்றி, கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள், நாட்டியக் கலைஞர்கள், இசை வல்லுநர்கள், தத்துவ ஞானிகள் எல்லோரும் நாட்டில் பெருக வேண்டும்.” எனும் நனவை எய்த முடியும்.






# பக்தியும் திருமுறைகளும்

## - ஓர் ஆய்வு

"சைவசமய மரபில் இறையனுபவங்களை வெளிப் படுத்தும் மனவெளிப்பாடாக பக்தி விளங்குகின்றது. பக்தியை ஒருவகை சுவையாகவும் சுட்டுவர். இதனை காவி யவியலாளர் சுவையெனும் வகையீட்டில் ஏற்க மறுத்துரைக்கும் மரபுகளும் உண்டு."



– ச. பத்மநாபன்
தலைவர், சமஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

**ஆய்வுச் சுருக்கம்**

இறையருளாளர்களாகிய சிவனடியார்களால் பாடப் பெற்ற பெருமைக்குரியவை திரு முறைகள். இத் திருமுறைகள் பன்னிரெண் டாகும். இத் திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்கள் என்றும், எட்டாம் திருமுறை திருவாசகம், திருக்கோவையார் என்றும், ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல் லாண்டு என்றும், பத்தாம் திருமுறை திருமந்திரம் என்றும், பதினோராம் திருமுறை நாற்பது வகைப் பிரபந்தங்கள் என்றும், பன்னிரெண்டாம் திருமுறை பெரிய புராணம் என்றும் அருளாளர் களால் வகுக்கப்பட்டுள்ளன.

இத் திருமுறைகள் பக்தி இலக்கியங் கள் என்றும், சிறப்பாக சிவப்பரம் பொருளை மையப்படுத்தியதன் காரணமாக சிவபக்தி இலக்கியங்கள் என்றும் போற்றப்படுகின்றன. இம் மரபில் பக்தி எனும் சுவை சார்ந்த இறை யனுபவம் அனுபூதி எனப்படுகின்றது.

இறையருளாளர்களின் அனுபூதியின் வெளிப்பாடகவே பக்தி இலக்கியங்கள் காணப்படுகின்றன.

இந்நிலையில் பக்தி எனும் இலக் கணம் எத்தகையது என்றும், அதனை பக்தி சூத்திரங்கள் எவ்வாறு கூறிநிற்கின் றன என்றும், பக்தி இலக்கணத்தின்வழி திருமுறைகள் எத்தகைய தன்மையில் அமைந்து விளங்குகின்றன என்பதனை யும் ஒப்பு நோக்கும் தன்மையில் இலக் கிய விவரண ஆய்வு முறையியல் மூலம் ஆய்வு செய்வதாக அமைகின்றது.

திறவுச்சொல் :- திருமுறை, பக்தி, பக்தி சூத்திரம், சுவை, அனுபூதி.

**அறிமுகம்**

சைவ சமய மரபின் உயர்ந்த இறைய னுபவம் மிக்க பாசுரங்களாக பக்திப் பாசுரங்கள் அமைகின்றன. பன்னிரு திருமுறைகளினூடாக எடுத்தியம்பப் படும் பக்தி அனுபவம் இறையனுபூதி என்றே பேசப்படுகின்றது. சைவசமய மரபில் இறையனுபவங்களை வெளிப் படுத்தும் மனவெளிப்பாடாக பக்தி விளங்குகின்றது. பக்தியை ஒருவகை சுவையாகவும் சுட்டுவர். இதனை காவி யவியலாளர் சுவையெனும் வகையீட்டில் ஏற்க மறுத்துரைக்கும் மரபுகளும் உண்டு. எனினும், பக்தி என்பது என்ன? என்பது பற்றிய விடயங்களை வரையறை செய் யும் நூல்களாக பக்தி சூத்திரங்கள் விளங்கு கின்றன. அவற்றுள் ஒன்று நாரதபக்தி சூத்திரம், மற்றையது சாண்டிலிய பக்தி சூத்திரம் என்பனவாகும். பரம்பொருளான சிவன்மீது அன்பு கொள்ளும் தெய்வீக நிலை ஈடுபாடு பக்தியாகின்றது.

இந்நிலையில் சிவப்பரம் பொருளை சச்சிதானந்த வடிவமாகவும் அன்பே வடிவமாகவும் நோக்கும் திறன்களை பக்தி சூத்திர விதிகளூடாகவும், சிறப்பாக சைவ சித்தாந்த சாஸ்திரங்களின் வழியும் துணைகொண்டு இறையருளாளர்களது பக்திப்பாசுரங்க ளாகிய பன்னிரு திரு முறைகளினையும் பகுத்தும், தொகுத்தும் நோக்குவோம். அவ்வகையில்இறையனு பவமும்அனுபூதியும் மேன்மை பெறு கின்றது. பக்தி இலக்கியம் வெளிப்படு கின்றது. இவையனைத்தினூடான ஒன்றுபட்ட இழையோடிய உட்பொருள் பக்தியாகவும் அமைகின்றது.

**பக்தி இலக்கியங்கள்**

பக்தி என்பது என்ன என்பது பற்றிய பல்வேறுபட்ட வரைவிலக்கணங்கள் உண்டு. எனினும், பக்தி எனும் சொல்லை இறையனுபவமாகக் கூறலாமே தவிர, அதற்கு எழுத்துருவில் பொருள்கொள்ள முடியாது. எனினும், பக்தி என்பதற்குரிய இலக்கண நூல்களை நாரதரின் பக்தி சூத் திரமும், சாண்டியரின் பக்தி மீமாம்சா சூத்திரமும் விளக்குகின்றன. இதில் நாரத பக்தி சூத்திரம் 84 சூத்திரங்களை அடிப் படையாகக் கொண்டு விளக்கும் ஒரு நூலாகும்.

சாண்டிய மீமாம்சா சூத்திரம் சுருக்க மாக சாண்டிய சூத்திரம் என்று அழைக்கப்படும். சாண்டிய சூத்திரம் நூ று சூத்திரங்களை உள்ளடக்கியது.

இது மூன்று நிலைகளில் பக்தியின் இயல்பு, பக்தி எனும் பொருள்கள், வழி பாட்டின் பயன்பாடு என்றும் மூன்று விடயங்கள் பற்றி பேசு கின்றது. இவ்வாறாக நோக்கும் விடயங்கள் எவ்வாறு பக்தி இலக்கி யங்களை திருமுறைகளில் பிரதிபலிக்கின்றன என் பதனை ஒப்பு நோக்குவோம்.

**பக்தியின் வகைகள்**

சைவ மரபின் பக்திப் பரிவுகளில் சாதனாமார்க் கங்கள் காணப்படுகின்றன. அவற்றின் வழி சரியை, கிரியை, யோகம், ஞானம் எனவும் அவை ஒவ்வொன் றினதும் தொடர்புகளாக பதினாறு பரிவுகள் நோக் கப்படுகின்றன. அதனூடாக ப்ரேனம என்பதும், மஹா பாவம் என்பது பற்றியது மான மிக ஆழமான சிந்தனை கள் காணப்படுகின்றன. எனினும், நாரத பக்தி சூத்திர சிந்தனையில் 82 ஆவது சூத்திரம் கூறும் பதினொரு விதமான பக்தி வகைகளை நோக்குவோம்.

பக்தி ஒன்று எனினும் அது பதினொரு விதங்களில்விளங்குகின்றது. அவையாவன:

1. பகவானுடைய குண மகிமைகளில் பக்தி
2. அவருடைய சுந்தர ரூபத்தில் பக்தி
3. பூஜையில் பக்தி
4. அவரை நினைப்பதில் பக்தி
5. பகவத் சேவையில் பக்தி
6. அவரைத் தோழனாக கருதுவதில் பக்தி
7. அவரைத் தன் சொந்தச் செல்வனா கக் கருதுவதில் பக்தி
8. தலைவி தன் தலைவனை நேசிப்பது போன்று பகவானை நேசித்து பக்தி பண்ணுதல்
9. ஜீவாத்மனை பரமாத்மனில் படைத் தல் எனும் பாங்கில் பக்தி பண்ணுதல்
10. பரமாத்மனை பாவனை பண்ணுதல்
11. பகவானை விட்டுப்பிரிதலில் வருகின்ற வேதனையைக் குறித்து பக்தி பண்ணுதல் என்பவாகும். இதனுடைய சாரமாக இரண்டாவது நாரத பக்தி சூத்திர கருத்தாக "அந்த பக்தியானது பகவான்பால் செலுத்தப்பட்ட பேரன்பு வடிவுடை தாம்" என்று கூறுகின்றது.

இதன்வழி அன்பே வடிவமான இறை வனிடத்தில் இறைவனது பெருமைகளை உணர்ந்து வழிபடுதல் என்பதாகின்றது.

பக்தி என்பது மனதால் கண்டறியத் தக்க இறையுணர்வும், இறையனுபவமும் ஆகும். இப் பக்தியை ஒரு வகை ரசமாக வும் (சுவையாகவும்) சுட்டும் மரபு காணப் படுகின்றது. இம் மரபுகள் பற்றிய சிந்தனை, காவியவியளாளர் மத்தி யில் மிகுந்த விமர்சனத்திற்குரிய விடய மாகவே விளங்குவதனைக் காணலாம்.

**திருமுறைகள்**

இந்நிலையில் திருஞானசம்பந்தர்



கிரியை மரபிலும், திருநாவுக்கரசர் சரியை மரபிலும், சுந்தரர் யோக மரபி லும்,மாணிக்கவாசகர் ஞானமரபிலும் இறைவனை வழிபட்டனர் என்பதனை சைவத் திருமுறை மரபுகளும் சைவ சித்தாந்த சாத்திரங்களும் கூறுகின்றன. அன்பே வடிவமான சிவனை சாத்திர வடிவமான திருமந்திரம் கூறுகின்றது. மனித இயல்பிற்கு அப்பால் மன உணர்வு கள் கடந்ததாக திருவிசைப்பா, திருப்பல் லாண்டு என்பன போற்றி நிற்கின்றன. பிரபந்த வகைகள் இறைவனின் பேரருட் தன்மைகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. சிவனடியார்கள் சித்தத்தில் சிந்திக்கும் பக்திச் சிறப்பைப் பெரியபுராணம் கூறு கின்றது.

**தெய்வீகவியல் வரலாறுகள்**

இறைவன்மீது பக்தி ஏற்படுவதற்கு ஏற்றவகையில் பல்வேறு புராண மரபுகள் திருமுறைகளில் எடுத்தாளப்படுகின்றன. புராணங்கள் சிவாகமங்களுடன் நெருங் கிய இடையறாத தொடர்புடையன.

புராணங்கள் சுட்டும் கதைமரபுகள் சிவாகமங்கள் சித்தரிக்கும் திருவுருவங் கள் ஒவ்வொன்றிற்குமான தெய்வீகவி யல் வரலாறுகளைக் கூறிநிற்கின்றன. இந்நிலையில் அஷ்ட வீரட்டச் செயல் கள் சிவவடிவங்களுள் தனித்துவமிக்கன.

அம்மரபுகளை பெறுமனே சிவவடி வங்களாக சிவாமங்கள் சுட்டுகின்றன. எனினும், அவ் அட்டவீரட்டச் சிறப் புக்களையும் புராணங்களே காரண காரி யங்கள் நிறைந்த கதைமரபுகளுடன் விப ரித்து நிற்கின்றன. இக்கதைமரபுகள்தெய் வீகவியல் வரலாறு எனும் ஓர் உயர்ந்த தன்மையினைச் சித்தரித்து, இறைவன் ஆன்மாக்கள்மீது கொள்ளும் அருட் கோலங்கள் எனும் உயர் மரபை வெளிப்படுத்துகின்றன.

அம்மரபுகளை, தெய்வீகவியல் சார்ந்த வரலாறுகளை பதி ணென் புராணங்களும் கூறி நிற்கின்றன.

**தெய்வ வடிவங்கள்**

இறைவனின் திருவுருவ அமை திகள் பற்றி சிவாகமங்கள் கூறிநிற்கின்றன. இம்மரபில் சிவாகம விதி மரபுகளுக்கு ஏற்புடைய திருவருவ அமைவுகள் தனித் துவம் மிக்க சிறப்புடையவையாக விளங்குகின்றன. இவை எண்ணிக்கையில் 25 மூர்த்தங்கள் முதல் 64 மூர்த்தங்கள் வரையாக பெருகி நிற்கின்றன.

**சைவசித்தாந்த முடிவு**

சைவ வாழ்வின் வாழ்வியற் தத்துவ மாகிய சைவமாகிய சைவ சித்தாந்தம் முக்தி பற் றிய இலக்கினையும் அவற் றிற்கான மார்க்கங்கள், நெறி முறைகள் என்பன பற்றியும் பேசுகின்றன. அந்நிலையில் முக்திகளின் படிநிலைகளும் வகைப் படுத்துகின்றன.

முப்பொருட்தன்மை களை பதி, பசு, பாசம் பற்றிய சிந் தனை மரபுகளும் முத்தியை நோக்கிய ஆன்ம விடுதலை பற்றிய சிந்தனைகள் சைவ சித்தாந்த முடிவின் பயனை முன்னிறுத்தி திருமுறைகள் இழையோடிக் காணப்படுகின்றன.

**நிறைவுரை**

பக்தி எனும் இறையனுபவத்திற்கு ஏற்புடைய இறையியற் தன்மைகளை இதிகாசங்கள், புராணங்கள், சிவாகமங் கள், என்பனவற்றின் பண்பாடுகள் எமக் குச் சித்தரிக்கின்றன. அவற்றின் வழி சைவ சித்தாந்த வாழ்வியற் தன்மைகளும் வகை யீடு பக்தியை முத்தியின் பாற்பட்டன வாக வகையீடு செய்கின்றன. இவற்றிற்கு மேலாக பக்தியென்பதனை ஒருவகை அனுபவமாகவும், பேரன்பாகவும் உணர்வு பூர்வமாக சிந்தனைகளாக பக்தியிலக்கணங் கள் கூறி நிற்பதோடு, பக்தியை பல்வேறு கூறுகளாக வகைப்படுத்துகின்றன.

இந் நிலையில், பக்தியெனும் சுவை சிவானுபூதி உணர்வாக திரு முறைகள் எனும் இலக்கிய வடிவில் வெளிப்படுத்தி நிற்கின்றன. ■

# இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டின்...

(VIII ஆம் பக்கத் தொடர்ச்சி...)

'கைதடியில் திருவிழா, வேலக்கையிலே திருவிழா, சுதுமலையில் திருவிழா, நயினாதீவில் திருவிழா, மாவிட்டபுரத்தில் திருவிழா, புன்னாலையிலே திருவிழா, துன்னாலையிலே திருவிழா, மருதடியிலேயே திருவிழா என்று சொல்லிக்கொண்டு, கூட்டம் கூடி, கஞ்சா, லேகியம் உண்டுகொண்டு, தாசிகளுடைய வண்டிகளுக்கு பின்னால் ஓடிக்கொண்டு, சேணிய தெருவிலே இரணிய நாடகம், கள்ளியங்காட்டிலே அரிச்சந்திர விலாசம், கந்தர்மடத்தடியிலே ரவிச்சந்திர விலாசம், நெல்லியடியிலே ஏதோ ஒரு கூத்து, பறங்கித்தெருவிலே ஏரோது நாடகம், சங்குவேலியிலே இராமநாடகம், மானிப்பாயிலே தருமபுத்திர நாடகம் என்று கேட்டகேட்ட உடனே கஞ்சாலேகியந்தின்று வீராவேசத்துடன் ஈட்டி, வளைதடி, கருங்காலி தண்டு கைப்பற்றி நடந்து நித்திரை விழித்து, உலைந்துகொண்டு நாடோடிகளாய் தெரிந்து கெடுவதும், திருவிழாக் காலங்களால் விளைந்த பிரியோசனங்களன்றோ'.

இந்தக் குறிப்பிலிருந்து நாடகங்கள் பல நிகழ்த்தப்பட்டமைக்கான தரவுகள், ஏற்றப்பட்ட நாடகங்களது வகைப்பாடுகள் (கூத்து மற்றும் விலாசம் போன்றவை) பற்றிய தரவுகளும், யாழ்ப்பாணத்தில் நாடகம் மேடையேற்றப்பட்ட பகுதிகள் பற்றியும், இதில் ஈடுபட்டவர்களின் பண்பியல்புகளும் எனப் பல தகவல்களை இந்தக் குறிப்பினூடாக நாம் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

இந்த நிலையினை ஆறுமுகநாவலர் மாற்றுவதற்கும், பண்ணிசை மற்றும் புராணபடனங்கள், கதாகாலேட்சபங்கள் போன்ற சமயம்சார் கலைகளை முனைப்பாக்கம் செய்வதிலும் அரும்பாடுபட்டார். இதன்வழி இசைக்கலையானது இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டிலே வேறொரு பரிமாணத்தினூடாக சமூகமயப்படுத்தப்பட்டது.

ஓதுவார் மரபு ஒன்று இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டிலே தோற்றம் பெற்றது. நல்லை முருகனின் ஆலய வீதியிலே நாவலர் மடங்களமைத்து, தமிழகத்தின் திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து ஓதுவார்களை இலங்கைக்கு வரவழைத்து, ஆலயங்களிலே பண்ணிசை ஓதவும், பயிலவும் வழிசமைத்துக்கொடுத்தார். இதன்வழி இலங்கையிலே ஓதுவார் மரபொன்று தோற்றம்பெறவும், பண்ணிசை செழிப்புறவும் வழி கிடைத்தது.

இலங்கையிலே ஒருகாலத்திலே தமிழையும் சைவத்தையும் அந்நியரிடமிருந்து காத்த பெருமை புராணபடனங்களையே சாரும். குறிப்பாக, கந்தபுராணபடனமானது இலங்கையிலே தமிழர் தம் உயிராகக் கருதப்பட்டது. 'யாழ்ப்பாணத்திலே கந்தபுராணம் பெண்களது உதிரத்திலே நன்கு ஊறியிருந்தது.' என்கின்ற பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் குறிப்பானது, இலங்கைத் தமிழ்ப் பெண்களது கல்வி வளர்ச்சிக்கு புராணபடன மரபானது சிறந்த ஒரு தளமமைத்துக் கொடுத்தது என்றுகூடச் சொல்ல முடிகின்றது.

மேலும், புராணபடனம்பற்றிப் பார்க்கின்றபொழுது புராணம் படிப்பதற்கும், பயன்சொல்லுவதற்கும் சிறப்பான ஒரு வரையறை வகுக்கப்பட்டிருந்தது.

'புராணபடனத்தைத் தொடங்குவதற்கு முன்பாக புத்தக பூசை செய்யப்பட்டு, பீடத்திலே வைத்து கற்பூர வொளி பிரகாசிக்க மரபு நெறிக்கமைய ஆலய அந்தணர் காப்புச் செய்யுளைப் படித்து புராணபடனத்தை ஆரம்பித்து வைப்பார். அது, ஆலயங்களிலே நடைபெறுகின்ற புராணபடன முறைக்கே சிறப்பான விதியாகும். வீடுகள், மடங்கள் என்பவற்றிலே மேற்காட்டிய விதிப்படி ஆலய பூசகரின்றி நடைபெறும். எந்தப் புராணத்திற்கும் காப்புச் செய்யுளைப் படிப்பது அவசியமானதாகும். காப்புச் செய்யுளைப் படிக்கும்போது தோடி, காம்போதி, பைரவி போன்ற இராகங்களிலே ஆரம்பிக்கவேண்டும். தோடியிலாரம்பிப்பது சிறப்புவிதியாகக் கொள்ளப்பட்டது. காலையும் மாலையும் கோயில் மற்றும் புனித இடங்களிலே படிக்கும் வழக்கம் காணப்பட்டது. காலையிலே தோடி இராகத்திலே ஆரம்பித்து பிலகரி, பூபாளம் போன்ற இராகங்களிலே படிக்கப்படுவதே சிறப்புடையதென்பர். மாலையிலே தோடி இராகத்துடன் தொடங்கி பூர்விகல்யாணி, கல்யாணி, பந்துவராளி முதலான இராகங்களிலே வாசிக்கப்படுவதே சிறப்புடையதென்பர். பாடல்களிலே வருகின்ற போர், வீரம், சிருங்காரம், கருணை முதலான ரசங்களுக்கேற்ப நாட்டை, அடானா, சாருகேசி, மோகனம் போன்ற இராகங்களிலே வாசித்துப் பயன்சொல்வது வரவேற்கப்பட்டது. ஆனாலும் சங்கராபரணம், பைரவி, ஆனந்தபைரவி, சாமா, ஆரபி முதலான இராகங்களிலே புராணம் படித்துப் பயன்சொல்லப்பட்டு வருவது பொதுவழக்கமாகும். எல்லா இராகங்களும் எல்லோருக்கும் கைவராதபடியால் காம்போதி, பைரவி இராகங்களிலே படித்துவருவதும் பெருவழக்காகும். புராணங்களுக்கான இராக நியதி மாற்றப்படுவதை யாரும் விரும்புவதில்லை. புராணங்கள் படிப்போர் இந்த இராகங்களைப் பிசகில்லாமல் படிக்கமுடியாதவர்களாக இருந்தபோதும் இந்த சாயலிலே படிக்கவேண்டும் என்பதிலே கவனமாக இருந்தார்கள்' என்கின்ற நியதிகள் வரையறை செய்யப்பட்டிருந்தது. சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் மணிவிழாவின்போது சபையினரால் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி நூலிலே 'ஈழத்திலே புராணபடனச் செல்வாக்கு' என்கின்ற தலைப்பிலே திரு இரா. வை. கனகரத்தினத்தால் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரை இதனை எடுத்துரைக்கின்றது.

அடுத்த ஒரு காத்திரமான சமூகக் கலைவடிவமாக கதாப்பிரசங்கம் இப்பண்பாட்டிலே ஒருகாலத்திலே முக்கியம் பெற்றிருந்திருக்கின்றது. இது பிரசங்கமரபை ஒத்திருந்தாலும் இதன் உள்ளடக்கம், மற்றும் நோக்கம் வேறாயிருந்தது. பாதைமாறிச்செல்லும் சைவர்களைக் காப்பதே முக்கிய நோக்கமாக இக்கலை கொண்டிருந்தது. மிகவும் காத்திரமான ஒரு சமூகக் கலைவடிவமாக இது இந்தியாவின் பல மாகாணங்களிலும் காணப்படுகின்ற பொழுதிலும், இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டிலே இதன் காத்திரமும், நோக்கமும் மிகவும் இயல்பான கதாப்பிரசங்க கலையிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது. இலங்கையின் கதாப்பிரசங்க மரபுபற்றிப் பேசுகின்றபொழுது நாவலர் காலத்திலேயே இக் கலைவடிவமானது வழக்கிற்கு வந்தது. குறிப்பாக சீ. சீ. எஸ். மணி ஐயர் இங்கு நினைவுகூரப்படவேண்டியவர். இலங்கை கதாப்பிரசங்கக் கலைமரபினை செழுமைப் படுத்திய முக்கியமானவராக இவர் கருதப்படுகின்றார். இவரது இசைப் புலமையும் தமிழாற்றலும் சிறந்த ஒரு கதாப்பிரசங்கியாக இவர் திகழ்வதற்கும், பலரை வழிப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமைந்தது.

இவ்வாறு, பல தளங்களிலே தொடர்ந்த இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டின் இசை மரபானது, கி. பி 18இன் இறுதிப்பகுதி மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளிலே கர்நாடக இசையின் மேலாண்மைக்குள் தன்னை உட்படுத்திக்கொள்வதைக் காணமுடிகின்றது.

**இலங்கையில் கர்நாடக இசை - பரம்பல்**

தமிழகத்திலே கர்நாடக இசை முனைப்புப்பெற, இலங்கையிலும் அதன் அதிர்வலைகள் பரவத் தொடங்கின. இசை வேளாளர்கள் சுத்தமான கர்நாடக இசை உருப்படிகளை இசைக்கத் தொடங்கினர். நாட்டுக்கோட்டை செட்டிமார்களுடைய பேராதரவில் தமிழகத்தை சேர்ந்த பல கர்நாடக இசை விற்பன்னர்கள் இலங்கை நோக்கி இசை நிகழ்ச்சிகளுக்காக அழைத்து வரப்பட்டார்கள். இந்த நிலையில் இலங்கைத் தமிழ்ச் சமூகத்திலும் கர்நாடக இசை முனைப்பாக்கம் பெறத் தொடங்குகின்றது.

1930களில் தமிழகத்திலிருந்து இலங்கைவந்து இசை நிகழ்வுகளை நடத்தி செல்கின்ற கலைஞர்களுடைய தொடர்புகளினால் இலங்கையிலே இருக்கக்கூடிய இசை ஆர்வலர்கள் தமிழகம் சென்று தங்கள் இசைத் திறமையை வளர்த்து, மீண்டும் இலங்கை வந்து இசைப் பணியாற்ற தொடங்கினர். குறிப்பாக, இந்த காலத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் தமிழகத்தின் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று 'சங்கீதபூஷணங்களாக' இலங்கை மீண்டார்கள்.

தமிழகத்தில் கர்நாடக இசை சார்ந்து ஏற்பட்ட விழிப்புணர்வு இலங்கையிலுள்ள விபுலானந்தர், மற்றும் கொடைவள்ளல் சேர் பொன். இராமநாதன் போன்றவர்களது சிந்தையிலே இசைசார்ந்து பதிந்த கருத்தியலின் விளைவாக, இலங்கையிலே ஒரு கர்நாடக இசை மரபு தோற்றம் பெறுவதற்கு உரிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தது.

1940களின் பின் பகுதியில் அதாவது, இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின் எமக்குரிய கல்விக் கொள்கைகளை நாங்களே அமைத்துக்கொள்வதற்கான வாய்ப்பு தமிழ் சமூகத்திற்கு வழங்கப்பட்டது. அந்த நிலையிலே இந்த கலையின் சிறப்பும், காத்திரமும், முக்கியத்துவமும் உணர்ந்த கல்விமான்கள் இந்த கலை அனைவரையும் சென்றடையும் வகையிலே, இலங்கையின் பாடசாலை கல்வித் திட்டத்தில் இணைத்துக்கொள்ள ஆவனசெய்ய விழைந்தனர். பயன், பாடசாலைக் கலைத்திட்டத்திலே கர்நாடக இசை 'அழகியலாக' நுழைந்தது.

இந்த நிலையிலே பாடசாலையில் இசைப்பயில்வு என்பதற்கு அப்பால், சமூகத்திலே விழிப்புணர்வு மிக்க இசை ஆர்வலர்களால் தனிப்பட்ட முறையில் மன்றங்கள் அமைக்கப்பட்டு இசையானது அனைவருக்குமுரிய கலையாக சமூகமயப்படுத்தப்பட்ட நிலையிலே, தமிழகம் சென்று திரும்பிய இசை ஆளுமைகள் தத்தம் பிரதேசங்களிலே தாம் கற்றவற்றை மற்றவருக்கும் பரவலாக்கம் செய்ய முன்வந்தனர். இலங்கையின் ஏனைய தமிழர் வாழ் புலங்களான மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பிரதேசங்களைச் சார்ந்த கலைஞர்களும் தத்தம் இடங்களில் மன்றங்களை அமைத்து இந்த இசையினை தமிழ் சமூகத்திற்கு பரவலாக்கம் செய்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். இதன் மிகப்பெரும்பயனாக யாழ்ப்பாணத்திலே இராமநாதன் நுண்கலைக்கழகமும், மட்டக்களப்பிலே விபுலானந்தர் அழகியல் நிறுவகமும் பல்கலைக்கழகம் சார் அழகியல் கற்கைகள் நிறுவனங்களாக இன்று இலங்கையிலே பணியாற்றிவருகின்றன.

ஆரம்பத்தில் அழகியல் கல்வி என்கின்ற வகையிலே கல்விப்புலத்தில் நுழைந்த இந்த இசை பயில்வானது, காலப்போக்கில் தனக்குரிய காத்திரமான ஒரு பாடத்திட்டத்தையும், அதற்கான பரீட்சை முறைமைகளையும் இசை வித்துவான்களின் மூலம் ஏற்படுத்திக் கொண்டது. இதற்காக சிறப்பான பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டன. அதற்குரிய ஆசிரியர்கள் பாடசாலைகள் தோறும் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு உரிய சிறப்பான பயிற்சிகள் வழங்குவதற்காக ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் நிறுவப்பட்டன. அதற்குரிய விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்த ஆசிரியர்களை மேற்பார்வைசெய்து சீர்அமைப்பதற்கான மேற்பார்வையாளர்கள் அதாவது, கல்விப் பணிப்பாளர்கள் இந்த அழகியல் துறைசார்ந்து நியமிக்கப்பட்டார்கள். காலப்போக்கில் இந்த இசை பயில்வது பல்கலைக்கழகம் சார்ந்த ஓர் ஆய்வு துறையாக பிற்பட்டகாலங்களிலே வளர்த்தெடுக்கப்பட்டது. இன்று, ஏனைய துறைகள்போல கல்விப்புலம் சார்ந்த ஓர் ஆய்வியல் துறையாக இலங்கை தமிழர் மத்தியில் இந்த இசைக்கலை வியாபகம் பெற்று இருக்கின்றது.

**முடிவுரையும் முன்வைப்புக்களும்**

ஆரம்ப காலத்திலே மகிழ்வுக்காக மாத்திரம் சமூகத்திலே வழக்கிலிருந்த இந்த இசைக் கலை மரபானது காலப்போக்கில் வளர்ச்சிபெற்று, இன்று தமிழ் சமூகத்தின் மத்தியில் ஒரு தொழில் வாய்ப்பினைப் பெற்றுத்தரக் கூடிய துறையாக, பொருளாதாரத்தை ஈட்டித் தரக்கூடிய, தமிழ்ச் சமூகத்தினை அறிவியல் புலத்திலும், பொருளாதார புலத்திலும் மேம்படுத்தக்கூடிய ஒரு துறையாக இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டிலே இருந்துவருகின்றது.

ஆனால், இத்தகைய வளர்ச்சிக்கும் சமூக முனைப்பாக்கத்திற்கும் அடித்தளமாயிருந்த, கட்டுரையிலே முன்னர் குறிப்பிட்டிருந்த சமூகக்கலை வடிவங்கள் இன்று சமூகவலுவிழந்து செல்வதை கண்டுகொள்ள முடிகின்றது. இதற்கான சமூக இருப்பும், நிலைப்பும் இன்று அருகிச்செல்வதைக் காணமுடிகின்றது. இக் கலைகளுக்கான கேள்வி சமூகத்திலே குறைந்து செல்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலை இன்று ஏற்பட்டிருக்கின்றது.

சமூகக் கலைவடிவங்கள் பேணப்படுகின்றபொழுதுதான் அச் சமூகத்தின் பண்பாடும் தனித்துவம் கெடாமல் ஆழமாக வேரூன்ற முடியும். இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டிலே இசைசார் சமூகக் கலைமரபுகள் பேணப்படுதல் என்பதும், பண்பாட்டுக் கையளிக்கை செய்யப்படுதலென்பதும் இன்று முக்கியத்துவமிழந்து வருவது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஒரு விடயம்.

இன்று பல சவால்களின் மத்தியிலே தன்னுடைய இருப்பினைத் தக்கவைத்துக்கொள்ளப் பாடுபடுகின்ற பண்பாடாகத் தமிழ்ப்பண்பாடு மாற்றம் பெற்றிருக்கின்றது. இலங்கைத் தளத்திற்கப்பால் புலம்பெயர் தேசங்களிலே வாழுகின்ற இலங்கைத் தமிழ்ச் சமூகத்தினர் தம் கலைவடிவங்களை மிகப்பெரும் சவால்கள் மத்தியிலேயே பண்பாட்டின் கலையாக கடைப்பிடித்துவருகின்றனர். பண்பாட்டின் கருவியாக கலைகள் புலம்பெயர் தேசங்களிலே முக்கியப்படுத்தப்படுகின்றன.

இந்த நிலையிலே 'கலை என்பது ஒரு சமூகத்தின் கண்ணாடி' என்கின்ற கலைக்கோட்பாடு மெய்ப்பிக்கப்படவேண்டுமாயின், தமிழ்ப்பண்பாட்டின் சமூகக் கலைவடிங்கள் பேணப்படவேண்டியதும், முறையாகப் பண்பாட்டுக்கையளிக்கை செய்யப்படவேண்டியதும் மிக அவசியமாகின்றது. காலத்தின் தேவையுமாகின்றது. ■



# வடக்கில் ஆன்மீக நாட்டம்



-கலாநிதி ஆறு.திருமுருகன்

வடமாகாணத்தில் ஆன்மீக நாட்டம் குறைந்து செல்வதை பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். போர்க்காலத்தில் தெய்வமே எமக்கு துணை என திருக்கோவில்களை நாடியவர்கள் அதிகம். மின்சாரம் இல்லாத காலத்திலும் கோவில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றுவந்தன. பெருங்கூட்டமாக பக்தர்கள் கலந்து கொண்டனர். வீடுகளிலும் ஆன்மீக மரபு பேணப்பட்டது. போருக்குப்பின் இந்தச் சூழ்நிலை பெரிதும் மாற்றமடைந்து வருகின்றது.

இதற்குப் பல காரணங்களை பலரும் சொல்கிறார்கள். தொலைக்காட்சி ரசனை,இணையத்தள வசதிகள், கைத்தொலைபேசி பாவனை அதிகரிப்பு போன்றவை காரணமாக ஆலய வழிபாடுகள் மீதான மக்களின் நாட்டம் குறைந்துள்ளது என சிலர் கூறுகிறார்கள். இது தவிர 1996ஆம் ஆண்டுக்கு முன் வடக்கில் திருடர் பயம் இல்லை என்றும், நள்ளிரவு வரை ஆலய திருவிழாக்களை மக்கள் மகிழ்ச்சியுடன் பார்த்து மகிழ்ந்தனர் என்றும், இன்றைய சூழலில் திருடர்களின் தொல்லைகளால் பொழுது சாய்வதற்கு முன்பதாக மக்கள் தங்கள் இருப்பிடங்களில் தங்கிவிடுவது ஆன்மீக விழாக்களின் மீதான நாட்டம் குறைவுக்கு காரணம் எனவும் வேறு சிலர் நியாயங்களை முன்வைக்கிறார்கள்.

வடக்கில் பெரும்பான்மையானவர்கள் சைவ சமயத்தை சார்ந்தவர்கள். அந்நியர் ஆட்சியின் விளைவாக இங்கு பிற மதங்கள் நிலைகொண்ட போதிலும், பாரம்பரியமான தங்கள் ஆன்மீக மரபுகளை சைவ மக்கள் காப்பாற்றத் தவறவில்லை. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் சைவக்கோவில்கள் யாவும் இடிக்கப்பட்ட போதிலும், வீட்டுக்குள்ளேயே மறைவாக வழிபாடு செய்து தங்கள் சமயத்தையும்,சமய மரபுகளையும் காத்தவர்கள் சைவமக்கள். இலங்கையின் ஏனைய பாகங்களிலும் சைவசமயத்தை காப்பாற்றுவதில் மக்கள் விழிப்பாக இருந்துள்ளார்கள். கிழக்கிலங்கையிலும் தங்கள் பாரம்பரிய வழிபாட்டு மரபுகளை மிகக் கஷ்டமான சூழ்நிலையிலும் மக்கள் கைவிடவில்லை. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மிஷனரிமார்களின் செல்வாக்கு நிலை பெற்றிருந்தபோதிலும், சைவசமயத்தை கட்டி எழுப்புவதில் சுதேசிகள் விழிப்பாக செயற்பட்டார்கள்.

வடக்கில் கிராமிய வழிபாட்டு மரபுகளும், சிவாகமம் சார்ந்த வழிபாட்டு நெறிமுறைகளும் பேணிப் பாதுகாக்கப்பட்டன. இன்று கிராமிய வழிபாட்டிலும், சிவாகம வழிபாட்டிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இன்றைய சூழலில் வடக்கில் சைவப் பண்பாட்டு மரபில் ஆன்மீக நாட்டம் குறைந்துள்ள விடயங்கள் சில.

**(1) பொங்கல்,குளிர்த்தி வழிபாடு**

1995ஆம் ஆண்டுக்கு முன் பெரும்பாலும் கிராமத்து கோவில்களில், அவை சிறியன பெரியன என்றாலும் பொங்கல் படைத்து வழிபாடு செய்யும் மரபு வலுப்பெற்றிருந்தது. இன்று கோவில்களில் பொங்கி வழிபாடு செய்பவர்கள் தொகை மிகக் குறைவாகவே காணப்படுகிறது. சில கோவில்களில், அதன் அளவைவிட ஆலய பொங்கல் மண்டபங்கள் பெரிதாக அமைக்கப்பட்டிருந்தன. அத்தகைய பொங்கல் மண்டபங்களின் முக்கியத்துவம் இன்று இல்லை. கிராமங்களில் இருக்கும் வைரவர் கோவில், அம்மன் கோவில், வீரபத்திரர் கோவில் போன்றவற்றில் பெரும்பாலும் வெள்ளிக்கிழமைகளில் அதிகமானவர்கள் பொங்கி வழிபாடு செய்வார்கள். இதன் ஊடாக தங்கள் நேர்த்திகளை நிறைவேற்றுவதுடன், கிராமங்களிலுள்ள காவல் தெய்வங்கள் தங்களை காத்தருள வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கும் முறையும் இருந்தது. இன்று பொங்கல் வழிபாடு செய்யும் மரபு மிகமிக அருகிவருகின்றது. மனையறத்தின் வேர் பெண்கள் என சேக்கிழார் சுவாமிகள் இல்லத்தரசிகளை புகழ்ந்துரைத்தார். இன்று பெரும்பாலான இல்லத்தரசிகள் உத்தியோகம் பார்ப்பதனால், மரபு வழி பொங்கல் வழிபாடுகளில் ஆர்வம் செலுத்துவதில் அக்கறை இல்லாமல் உள்ளனர். சில ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் மாலையில் கூட்டுப் பிரார்த்தனையும், பொங்கல் பிரசாதம் வழங்குதலும் ஒரு மரபாக இருந்தது. இடப்பெயர்வுகளுக்குப் பின் இவையாவும் அருகிவிட்டன.

**(2) கூட்டுக் குடும்பமாக நேர்த்தி வைத்தல்**

வடக்கில் மக்கள் கூட்டுக் குடும்பமாக வாழும் மரபு நீண்டகாலமாக நிலைபெற்றிருந்தது. ஆனால் இன்று கூட்டுக் குடும்பங்களை சந்திப் பது அருகிவிட்டது. கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தவர்கள் வருடந்தோறும் அன்னதான நேர்த்தி, குளிர்த்தி, ஆயிரத்தெட்டு மோதக அவியல் நேர்த்தி,வடைமாலை நேர்த்தி, மடை பரவுதல் நேர்த்தி, காவடி நேர்த்தி என பல்வேறு நேர்த்திகளை உறவினர்களுடன் இணைந்து நிறைவேற்றும் வழக்கம் இருந்து வந்தது. இது தொடர்பில் செல்வச்சந்நிதி, மட்டுவில் பன்றித் தலைச்சி, வல்லிபுரக் கோவில், மானிப்பாய் மருதடி பிள்ளையார், தில்லை யம்பலப் பிள்ளையார் என சில ஆலயங்களை நாடிச் செல்வார்கள். அடுப்பு அணையாத கோவில்கள் சில அன்று இருந்தன. இவையெல்லாம் இன்று பெரிதும் அருகிவிட்டன. செல்வச் சந்நிதியில் முன்பு 41மடங்கள் இருந்ததாக சொல்லப்படுகிறது. இன்று ஒருசில மடங்களே இயங்குகின்றன. கீரிமலை பகுதியில் 11மடங்கள் இருந்துள்ளன. இன்று ஒன்று மட்டுமே இயங்குகிறது. சிறிய கோவில்களை மூடி அடைத்து கதவு பூட்டி, காலையிலும் மாலையிலும் ஒருசில மணிநேரம் திறக்கும் பரிபாலனப் பண்பாடு தற்போது அதிகரித்துவிட்டது. இச்சூழ்நிலையும் கோவில் மீதான நாட்டத்தை குறைத் துள்ளது என சிலர் குறிப்பிடுகிறார்கள்.

**(3) ஆலயங்களில் ஆன்மீகப் பிரசங்கங்கள், கூட்டுப் பிரார்த்தனைகள்**

ஆலயங்களில் ஆன்மீகப் பிரசங்கங்கள், கூட்டுப் பிரார்த்தனைகள். என்பனவற்றுக்கு பெரிதும் முக்கியத்துவம் கொடுத்த காலமொன்று இருந்தது. திருவிழா காலங்களில் புராண இதிகாசக் கதைகளை சைவ சித்தாந்த தத்துவங்களை சொற்பொழிவாளர்கள் மக்கள் சிந்திக்கும் வண்ணம் சொற்பெருக்காற்றுவார்கள். பலர் காத்திருந்து சமய மேன்மைகளை அறிந்தனர். போர்ச்சூழலில் கூட பிரசங்கம், கூட்டுப் பிரார்த்தனை என்பன வடக்கில் முக்கியத்துவம் பெற்றிருந்தன. இடப்பெயர்வுக்குப் பின், பெரும்பாலான கோவில் திருவிழாக்களில் சமயப் பிரசங்கம் இடம்பெறு வதில்லை. கூட்டுப் பிரார்த்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது இல்லை. இவற்றைக் கேட்பதிலும் மக்களுக்கு அக்கறை இல்லை. வீடுகளில் தொலைக்காட்சியில் வருடக் கணக்காக தொடர் நாடகங்களை ரசனையோடு பார்த்து மகிழும் சமூகம், ஆன்மீகப் பேச்சுக்களிலும் திருவிழா நிகழ்ச்சிகளிலும் நாட்டம் கொள்வதை கைவிட்டுவிட்டது. ஆலயங்களில் புராண இதிகாசங்களை வில்லிசைக்கலை வடிவத்தின் ஊடாக சொல்லும் வழக்கம் இருந்தது. இதுவும் இன்று அருகிவிட்டது.

**(4) ஆலயங்களிலுள்ள நேரக் கட்டுப்பாடு**

பொதுவாக ஆலயங்களில் இரவுப் பூசை 8.00மணிக்கு இடம்பெறுவது வழக்கமாக இருந்தது. சில ஆலயங்களில் அர்த்தசாமப் பூசை இரவு 9.00மணிக்கு இடம்பெற்றதும் உண்டு. தங்கள் வேலைகள், கடமைகளை முடித்துவிட்டு மாலைப்பொழுதில் ஆலயத்திற்கு வருகை தந்து ஆன்மீக நாட்டத்துடன் அங்கு தங்கி, அர்த்தசாமப் பூசையை பார்த்துவிட்டு, வீடு திரும்பும் வழக்கம் கிராமங்களில் அதிகமாக இருந்தது. ஆனால், இன்று பெரும்பாலான ஆலயங்களில் மாலை 6.00மணிக்கு முன்பு பூசை வழிபாடுகளை நிறைவுசெய்து திருக்கதவை சாத்திவிடுகிறார்கள். கோவில் வெளிமண்டபங்களும் கூட, பக்தர்கள் அமர்ந்து பேசுவதற்கு இடமின்றி, மூடி அடைப்பதும் இன்று வழக்கமாகி விட்டது. இந்தச் சூழ்நிலைகளும் வடக்கில் ஆன்மீக நாட்டம் குறைவடைவதற்கு காரணமாக உள்ளன என்று சிலர் கூறுவதுண்டு. மேற்குறித்த சில அடிப்படை மாற்றங்கள் எங்கள் சமூகத்தில் தொடர்வதனால், ஆலயங்களில் மக்கள் கூடும் தொகை சரிவடைந்து வருவதை நாம் அவதானிக்க முடிகிறது. பெருங்கோவில் திருவிழா காலங்களில் பக்தர்கள் ஒன்று சேருவது இயல்பு. எனினும் வடக்கில் ஆன்மீக நாட்டம் என்பது அருகிவருவதை அனைவரும் ஒத்துக்கொள்வர். ஆலயங்களில் கடவுளுக்கு அடுத்தபடியாக மக்களால் போற்றப்படும் குருமார்கள் விடயத்திலும் சிலர் குற்றம் சொல்வதை காணலாம். அன்று குருமார்கள் ஆறுதல் வார்த்தைகள் சொல்வதும், விபூதி போட்டு பார்வை பார்ப்பதும், நூல் கட்டுவதும், கவலையுடன் வரும் மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டுவதும்,சோதிடம் போன்ற பலன்களை சொல்வதும் ஒரு மரபாக இருந்தது. இன்று அத்தகைய நிலை குறைவடைவதனால், மக்களிடம் ஆன்மீக நாட்டமும் குறைவடைந்து செல்கிறது என சிலர் குற்றம் சாட்டுகிறார்கள். குறிப்பாக, பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியில் மட்டும் அதீத அக்கறை காட்டிவிட்டு, ஆன்மீக ஈடுபாட்டில் பிள்ளைகளை ஈடுபடுத்துவது இல்லை. அதனால் இளைய தலைமுறை ஆன்மீக நம்பிக்கை இல்லாதவர்களாகவும், ஒழுக்கக் குறைபாடுகள் கொண்டவர்களாகவும் உள்ளார்கள் எனக் கூறப்படுகிறது.

வடக்கில் சைவ ஆலயங்கள் மட்டுமன்றி கிறிஸ்தவ ஆலயங்களிலும் ஆன்மீக நாட்டம் குறைந்துள்ளது என கிறிஸ்தவ மதப் பெரியவர்கள் வருத்தமடைகிறார்கள். வாரத்தில் ஒருநாள் வழிபாட்டுக்கு வயதுபோனவர்களே அதிகமாக வருவதாகவும், தங்கள் வாரிசுகளை அழைத்து வருவது இல்லை எனவும் எனது கிறிஸ்தவ நண்பரான அருட்சகோதரர் ஒருவர் அண்மையில் கவலை தெரிவித்திருந்தார். போருக்குப் பின் சைவ ஆலயங்கள் என்றால் என்ன கிறிஸ்தவ ஆலயங்கள் என்றால் என்ன கட்டுமானப் பணிகள் மிக உச்சநிலையை அடைந்துள்ளன. புலம் பெயர்ந்து வாழும் சமூகத்தின் பேருதவியால் வடக்கில் ஆலயங்கள் பல புதுப்பொலிவு பெற்றிருப்பதை மறுக்க முடியாது. எனினும், புதுப்பொலிவு பெற்ற ஆலயங்களில் கூட சுவாமி காவுவதற்கு ஆள்தேடும் படலம் தொடர்கிறது. இதற்காக சிலவேளைகளில் தொலைபேசி ஊடாக இளைஞர்களை அழைத்துவிட்டு காத்திருப்பர். இந்நிலை கவலை அளிக்கிறது. பல ஆலயங்களில் பெரிய வாகனங்களில் சுவாமி காவுவதற்கு ஆள் இல்லாமல், சிறிய வாகனங்களில் சுவாமி காவுவதையும் காணமுடிகிறது.

சிரமதானமாக ஆலயங்களில் தொண்டு செய்யும் மரபு மிகவும் குறைந்து வருகிறது. தொண்டு செய்பவர்கள் குறைந்ததினால், ஆலயங்களில் ஊதியத்திற்கு பணியாளர்களை நியமிக்கும் சூழ்நிலை பெருகி வருகிறது. வடக்கில் ஆன்மீக நாட்டம் குறைந்த காரணம், சமூகச் சூழலில் ஏற்பட்ட தாக்கம் அனைவராலும் உணர முடிகிறது. வாள்வெட்டு கலாசாரம், போதை வஸ்து கலாசாரம், திருட்டுப் பழக்கம் என என்றும் இல்லாத வாறு எமது சூழல் மாற்றம் பெற்றிருக்கிறது. இந்நிலை மாற வேண்டுமானால், ஆன்மீகப் பலம் அதிகரிக்க வேண்டும்.

ஆன்மீகப் பலத்தை எம் சமூகம் கட்டி எழுப்புவதற்கு ஆயத்தமாக வேண்டும். ஆலயத்தில் இடம்பெற்றுவந்த பாரம்பரிய பண்பாட்டு விழாக்கள் நன்கு நடைபெற வேண்டும். பிள்ளைகளிடம் ஆன்மீக நாட்டத்தை உருவாக்குவதில் பெற்றோர்கள் அக்கறை கொள்ள வேண்டும். ஆலயம் தோறும் தொண்டு மனப்பான்மையுடன் பணி செய்வதற்கு அனைவரும் முன்வரவேண்டும். எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக கட்டிக்காப்பாற்றப் பட்டுவந்த சமய பண்பாட்டு பாரம்பரியங்களை நாம் தொலைத்து விடக்கூடாது. இதுவிடயத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்!


இரண்டாம் ஆண்டில் காலடி பதிக்கும் ஈழநாடு நாளிதழ்
பத்திரிகைக்கு எமது நல்வாழ்த்துக்கள்
மாருதி
Money Exchange
கடந்த பல வருட காலமாக கொழும்பு
வெள்ளவத்தையில் இயங்கி வந்த நாங்கள் தற்பொழுது
வாடிக்கையாளர்களின் நன்மை கருதி யாழ். மண்ணில்
இல: 390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் எமது மாருதி
Money Exchange கிளை நிறுவனத்தை ஆரம்பித்து சிறந்த சேவையினை
வழங்கிக்கொண்டிருக்கின்றோம் என்பதனை
எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
MARUTHI MONEY EXCHANGE
MARUTHI MONEY EXCHANGE PVT LTD
PERMIT NO:DFE/RD/0117
390, HOSPITALROAD, JAFFNA.
WESTERN UNION
MONEY TRANSFER
Ria
MONEY TRANSFER
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0212214433
0762844443
Head Office:
285,Galle Road, Wellawatte,
Colombo-06.
T.P:0112362086


61ம்
ஆண்டு நிறைவு
சிறப்பிதழ்


ஈழநாடு
Online
சம்பவங்கள்,
செய்திகள்
உடனுக்குடன்
அறிந்துகொள்ள...
www.eelanadu.lk


மலாயன்கபே MALAYAN CAFE
அனைத்துவிதமான அறுசுவை உணவுகளையும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய சிறந்த இடம்
மலாயன்கபே
No.36,38.GRAND BAZAAR,
JAFFNA


இரண்டாம் ஆண்டில் காலடி பதிக்கும்
ஈழநாடு நாளிதழ்
பத்திரிகைக்கு
daraz
இன் நல்வாழ்த்துக்கள்
daraz
11.11
THE WORLD'S
BIGGEST SALE


மங்களகரமான நிகழ்வுகளை
ஒரே கூரையின் கீழ் நடத்திட...
செல்வா
பலஸ்
# 10,12, பூநாறி ஒழுங்கை,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.
T.P : 021 222 8123
ஒரே மண்டபத்தில் 3 அரங்குகள்
முல்லை அரங்கு
மல்லிகை அரங்கு
ஆம்பல் அரங்கு
திருமணம், பூப்புனித நீராட்டு விழா,
பிறந்த நாள் நிகழ்வுகளை நடத்த
நீங்கள் நாடவேண்டிய இடம்
செல்வ
மஹால்
1229 பூநாறி மரத்தடி,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
T.P : 021 221 9779
021 221 9779
அறு சுவை உணவுகள் வகைகள்
மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகளுடன்...
திவ்ய மஹால்
1001 கே.கே.எஸ் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
T.P : 021 222 1022
077 614 1374


NORTH LANKA IIT & LANKA CITY CAMPUS
பின்வரும் கற்கை நெறிகளுக்கான ஒன்லைன் வகுப்புக்கள்
ஆரம்பமாகி உள்ளன. உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளவும்.
ONLINE EDUCATION
பாட நெறிகள்
i. B.Sc in Computer Science (Top Up 1 year)
ii. B.Sc in Computer Science ( 3 years)
iii. M.Ed. ( 1 Year)
iv. B.Ed. (Top - Up) 1 Year
v. B.Ed. (3 Years)
vi Ph.D (3 years)
vii . Ph.D in Agriculture Science
viii. M.Sc in Agriculture Science (1 year)
ix . B.Sc in Agriculture Science (Top Up )1 year
x. B.Sc in Agriculture Science (3 years)
xi. B.Sc in Sports Science Top -up (1 year)
North Lanka IIT, Top Floor, People's Bank Building, Stanley Road Jaffna. 0767504535